
சிலம்பு மலர்



2013

இளங்கோவடிகள் இலக்கிய மன்றம் – கோவை



எழுத்தறிவித்தல் ?

'அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்'

— மகாகவி பாரதி

சிலப்பதிகார விழாவிற்கு வாழ்த்துக்கள்

சிலம்பு மலர்

30-ம் ஆண்டு

சிலப்பதிகார விழா வெளியீடு

2013


இளங்கோவடிகள் இலக்கிய மன்றம்
C/O. A–2, பெருமாள் காம்ப்ளக்ஸ், 69, நேதாஜி சாலை
பாப்பநாயக்கன்பாளையம், கோவை – 641 037

இளங்கோவடிகள் இலக்கிய மன்றம்

C/O. A-2, பெருமாள் காம்ப்ளக்ஸ், 69, நேதாஜி சாலை,
பாப்பநாயக்கன்பாளையம், கோவை – 641 037.

செயற்குழுவினர்

இளங்கோவடிகள் அறநிலை



மங்கல வாழ்த்து

திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடை போன்றிவ்
அங் கண் உலகளித் தலான்.

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு
மேரு வலந்திரி தலான்.

மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாமநீர் வேலி உலகிற்குஅவன் அளிபோல்
மேல்நின்று தான்சுரத் தலான்.



தமிழ்த் தாத்தா

டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் விருது பெற்றவர்கள்

09-03-2003	திரு. சிலம்பொலி செல்லப்பன்	20-ஆம் ஆண்டு
13-03-2004	திரு. ஐராவதம் மகாதேவன்	21-ஆம் ஆண்டு
20-08-2005	திரு. சீனி விசுவநாதன்	22-ஆம் ஆண்டு
23-09-2006	திரு. A. ஜெகன்நாதன்	23-ஆம் ஆண்டு
23-06-2007	பேரா.ஜெ. ஸ்ரீசந்திரன்	24-ஆம் ஆண்டு
12-07-2008	வாகீசகலாநிதி ச. கணபதிராமன்	25-ஆம் ஆண்டு
11-07-2009	முனைவர் தெ. ஞானசுந்தரம்	26-ஆம் ஆண்டு
24-07-2010	முனைவர் ச.வே. சுப்ரமணியன்	27-ஆம் ஆண்டு
10-07-2011	முனைவர் திருமதி பிரேமா நந்தகுமார்	28-ஆம் ஆண்டு
14-07-2012	திரு. மயிலம் வே. சிவசுப்பிரமணியன்	29-ஆம் ஆண்டு



தமிழ்த் தாத்தா
டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் விருது



காப்பியக் கவிஞர்

திரு. மரு. பரமகுரு

அவர்களுக்கு 30–ம் ஆண்டு சிலப்பதிகார விழாவில் வழங்கப்பட்டது.

நாள் : 13–07–2013

சி. சௌந்திரராஜ்	**ஜி. கோபாலன்**
தலைவர்	தலைவர்
இளங்கோவடிகள் அறநிலை	இளங்கோவடிகள் இலக்கிய மன்றம்

விருது அமைப்பு :

ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்

பொருளடக்கம்

தோரண வாயில்

தமிழர்களின் நாகரீகம், பண்பாடு, கலாச்சாரம் ஆகியவை இரண்டாம் நூற்றாண்டிலேயே எவ்வளவு சிறப்பாக விளங்கி வந்திருக்கிறது என்பதை எடுத்துக்காட்டும் காப்பியமாகச் சிலப்பதிகாரம் திகழ்கிறது. உலகிலேயே தொன்மையான நாகரீகம் சிந்து சமவெளி நாகரீகம்தான். அதனையொட்டி நாட்டின் தென்பகுதியிலே வாழ்ந்த மக்கள் நாகரீகத்திலும் பண்பாடு, கலை, இசை, நாட்டியம், வாணிகம் இவற்றால் சிறந்து விளங்கினார்கள் என்பதையும், சேர, சோழ, பாண்டிய அரசர்களைப் பற்றியும், புகார், மதுரை, வஞ்சி ஆகிய நகரங்களின் இயல்பு, செழிப்புப் பற்றியும் அடிகளார் வர்ணிக்கும் பொழுது நம்மால் அவற்றை உணர முடிகிறது. எனவேதான், சிலப்பதிகாரம் முதன்மைக் காப்பியமாக, முத்தமிழ்க் காப்பியமாக இன்றும் நின்று நிலவி பெருமை கொள்கிறது.

இவ்வாண்டு சிலம்பு மலரிலே 10 கட்டுரைகளும், ஒரு கவிதையும் இடம் பெற்றுள்ளன. 'மண்தேய்த்த புகழினான்' என்ற கட்டுரை மார்க்கபந்து சர்மாவால் 1988 ல் எழுதப்பட்டது. கோவலன் புகழுக்கு உரியவனா, இகழ்ச்சிக்கு உரியவனா என்பதை பல்வேறு கோணங்களில் ஆராய்ந்து விளக்கியிருக்கிறார். அடுத்து "சிலம்பில் ஒற்றைச் சிலம்பு" என்ற கட்டுரை, சிலப்பதிகார ஆய்வாளர் முனைவர் சரளா ராசகோபாலனும், 'ஒற்றை சிலம்பு' என்ற கட்டுரை பேராசிரியர் இராம. இராமநாதனும் எழுதியது. கண்ணகியின் ஒற்றைச் சிலம்பும், பாண்டிமாதேவியின் ஒற்றைச்சிலம்பும் இவர்கள் கட்டுரைகளில் ஆராயப்படுகிறது. வெவ்வேறு கோணங்களிலே தங்கள் கருத்துக்களைப் பதிவு செய்திருக்கிறார்கள். படித்து இன்புற வேண்டிய கட்டுரைகள். பேராசிரியர் தி. இராசகோபாலனின் "வஞ்சிக்காண்டம் – ஒரு பகாப்பதமே" என்ற கட்டுரை புதிய நுணுக்கங்களை கொண்டதாக அமைகிறது. "வஞ்சிக்காண்டம்" தேவையா என்று வழக்காடு மன்றத்திலும், பட்டி

மண்டபங்களிலும் நடைபெற்றுக் கொண்டு வரும் போராட்டங்களுக்கு இவரது கட்டுரை தீர்வாக அமையலாம் ! திறனாய்வாளர்களுக்கு ஒரு சவாலாகவே இருக்கிறது.


முனைவர் சொ. சேதுபதியின் கட்டுரை "சிலம்பில் இராமாயண மேற்கோள்கள்" என்பது. ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ள இவரது கட்டுரை ; இராமாயணப் பாத்திரங்களோடு, சிலம்பின் தலைவன், தலைவி ஆகியவர்களையும் இணைத்து தக்க எடுத்துக்காட்டுகளுடன் எழுதியுள்ளார். பெரியதொரு ஆய்விற்கு இக்கட்டுரை வழிவகுக்கும் என நம்புகிறோம். முனைவர் பழனியப்பன் "குரவைக் கூத்தும், அதன் விளைவுகளும்" என்ற கட்டுரையில் கண்ணகி எவ்வாறு பாண்டியனை எதிர்கொள்வதற்கான மன உறுதியைப் பெற்றாள் என்பதை தக்க நிகழ்ச்சிகளைக் கொண்டு எழுதியிருப்பது பாராட்டத்தக்கது. "மாதரியின் மாண்பு" கட்டுரை மன்றத்தின் வாழ்நாள் உறுப்பினர் செ. நடராஜனுடையது. வாரந்தோறும் சிலம்பு சிந்தனைகளை சொற்பொழிவு ஆற்றிக் கொண்டுவரும் அவர் மாதரியின் பண்புகளை எடுத்துச் சொல்லும் பாங்கு சிறப்பாக இருக்கிறது. பேரா. ந. சேஷாத்திரி எழுதிய "வழக்குரைக் காதையும் குற்றச் சட்டவியலும்" என்ற கட்டுரை கண்ணகி வழக்கை பாண்டியன் முன் வைக்கும் பாங்கு, இன்றைய சட்டமுறைகளுக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பே சிலம்பில் சுட்டிக் காண்பிக்கப்படுகிறது என்பதை ஆதாரங்களுடன் விளக்கியிருக்கிறார். புலவர் ஆ. செகநாதன் "உயிர் நேயம் - உயர் நேயம்" என்ற கட்டுரையில், புறாவிற்காக தன் சதையை அறுத்து தட்டிலிட்ட சிபியின் கதை, கன்றை இழந்த பசுவிற்காக தன் மகனையே தேர்க்காலிட்ட மனுநீதி சோழன் கதையையும் சிறப்புற எடுத்துக்காட்டியுள்ளார். இந்த ஆண்டு தமிழ்த்தாத்தா விருது பெறும் காப்பியக் கவிஞர் திரு. மரு. பரமகுருவின் "உத்தமி மாதவி" என்ற கவிதை, மாதவியின் பண்புகளையும், கலை ஆர்வத்தையும், கோவலன் பால் கொண்ட அளவற்ற அன்பை நல்ல தமிழிலே - மரபுக்

கவிதையில் தந்திருக்கிறார். சுவைத்து மகிழுங்கள். "வேந்தனை எதிர்த்து வீரப்புரட்சி" என்ற கட்டுரை 1956 ஆண்டு பேராசிரியர் ந. சஞ்சீவியால் எழுதப்பட்டது. "சிலம்புச்செல்வம்' என்ற தலைப்பிலே அருள் வாழ்வுப் பதிப்பகம் மூலம் வெளியிடப்பட்டது. 1976 வரை நான்கு பதிப்புகள் கண்ட புத்தகம் இப்பொழுது காணக் கிடைக்கலாம். அவரது நுண்மான் நுழைபுலத்திற்கும், சிலம்பில் அவருக்கு இருந்த ஆழமான ரசனைக்கும் இக்கட்டுரை ஒரு எடுத்துக்காட்டு. மற்றும் பாவேந்தர் பாரதிதாசனின் "கண்ணகி புரட்சிக் காப்பியம்" என்ற நூலிலிருந்து பொற்கொல்லன், பாண்டியமாதேவியின் தோழி இவர்கள் கூற்றினை பாவேந்தர் நடையிலிருந்தே உணர முடிகிறது. 20-ஆம் நூற்றாண்டில் வெளிவந்த இக்கவிதைகள் 2-ஆம் நூற்றாண்டைப் பிரதிபலிக்கிறதல்லவா? மலரில் வெளிவந்திருக்கும் கட்டுரைகள் அத்தனையும் சுவைக்கச் சுவைக்க திகட்டாத தேன் பலாச்சுளை. பக்திக் காப்பியத்திலிருந்து வேறுபட்டு "குடிமக்கள் காப்பியமாக" மலர்ந்த சிலப்பதிகாரம் தமிழகத்தின் தலைசிறந்த காப்பியம் என்பதை மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. படியுங்கள். படித்து மகிழுங்கள் !

இம்மலரில் விளம்பரங்களைக் கொடுத்துதவிய தொழிலதிபர்கள், மற்றும் நிறுவனங்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். மலரின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த புலவர் ஆ. செகநாதன் அவர்களுக்கும் நன்றி. சிறந்த முறையில் அச்சிட்டுக் கொடுத்த கீதாஞ்சலி அச்சகத்திற்கும் எங்கள் நன்றி !

நா. நஞ்சுண்டன்
(மலர்ப் பொறுப்பாளர்)
செயலாளர்

13-7-2013
கோவை



“ஆங்கு கானல்வரிப் பாடல் கேட்ட மான்நெடுங்கண் மாதவியும்
மன்னுமோர் குறிப்புண் டிவன் தன்னிலை மயங்கினானெனக்
கலவியால் மகிழ்ந்தாள் போல் புலவியால் யாழ் வாங்கித்
தானுமோர் குறிப்பினள் போல் கானல்வரிப் பாடல் பாணி
நிலத்தெய்வம் வியப்பெய்த நீணிலத்தோர் மனமகிழ்க்
கலத்தோடு புணர்ந்தமைந்த கண்டத்தால் பாடத் தொடங்குமன்”

விழா இனிதே நடைபெற வாழ்த்துகிறோம்



மண் தேய்த்த புகழினான்

ஆர்.எஸ். மார்க்கபந்து சர்மா, எம்.ஏ.,

கோவலன் ஈட்டிய புகழ் வரம்பு கடந்து சென்றது. அதனை நம்மை நன்றாக உணர்ந்து கொள்ளச் செய்ய அடிகள் விரும்பினார். ஆனால் எத்தகைய எல்லையையும் காட்டி அதனைக் குறிப்பிட முடியவில்லையே ! அளவு கடந்தது எனக் கூறுவது அதன் எல்லையைக் குறைத்துக் கூறுவதாகவே முடியும்! எனவே அடிகள் இவ்வுலகத்தையே ஓர் அளவுகோலாகக் கொண்டார். அதனினும் அளவாற் பெரியது அவன் புகழ் என்று கூறியிருக்கின்றார். 'பார் சிறுத்தெனப் படை பெருத்ததோ, படை பெருத்தெனப் பார் சிறுத்ததோ' என்று எவ்வகையிலும் துணிந்து கூற முடியாதவராய்ச் செயங்கொண்டார் துன்பப்பட்டார். ஆனால் அடிகளுக்கு ஐயம் ஏற்படவேயில்லை. கோவலன் புகழ் வளர்ச்சியடைந்தவனாலேயே இவ்வுலகம் சிறுத்துவிட்டது என்று அவர் துணிந்து கூறியிருக்கின்றார். கோவலன் ஓர் இளைஞன். அவன் இன்னும் பதினாறு ஆண்டு எல்லையைக் கடக்கவில்லை. இங்ஙனமிருக்க அடிகள் அவன் பெருமையைப் பற்றிப் பேசாமல், புகழினைக் குறிப்பிட்டதேன்? புகழ் என்ற சொல்லைக் கேட்டவுடன் நாம் தீயை மிதித்தவர் போல் திகைப்புறுகின்றோம். புகார் நகர அறிமுகப் பகுதியில் அது எதனை உணர்த்திற்று என்று அணிந்துகொண்டிருக்கின்றோம் அல்லவா? அங்கு அச்சொல்லைப் பயன்படுத்தியிருப்பதனைப் போலவே அடிகள் இங்கும் அச்சொல்லைக் கோவலன் மறைவைக் குறிப்பிடவே பயன்படுத்தி யிருக்கின்றார்.

இக்காப்பியம் கண்ணகியின் கதையைக் கூறத் தோன்றியது. ஆகவே கோவலன் பெருமைகளைப் பற்றிப் பேசும் பொறுப்பு இதற்கு இல்லை. எனினும் தம் கதைத் தலைவியின் கணவன் தனக்கெனச் சிறப்புடையவன் என்று நமக்குத் தெரிவிக்க வேண்டுமல்லவா? அதற்காக அடிகள் மாடலன் வாய்மொழியாகக் கோவலன் குணமாட்சியைப் புலப்படுத்தியிருக்கின்றார். இது கண்ணகியின் காப்பியமாகையால், அவர் கோவலன் செயல்களைச் சித்திரித்துக் காட்டாமல், குறிப்பிட்டிருக்கின்றார். மாடலன் விவரிக்கும் செயல்கள் கோவலனுக்குப் பெருமையையும், சிறப்பையும் அளிக்கின்றன. எனினும் அவன் சொற்களால் வெளிப்படும் பெருமை ஒரு நாள் எல்லை கூட இவ்வுலகில் தங்கியிருக்கவிலையே ! மாடலன் கோவலன் குணமாண்புகளைக் குறிப்பிட்ட மறுநாளே அவன் கொலையுண்டான். எனவே அவனுடைய பெருமையனைத்தும் ஒரு நாளெல்லைக்குள் புகழாக மாறிவிட்டன. அவன்தான் இளம் பருவத்திலேயே இறந்துவிட்டான் ! அவன் புகழாவது நிலைத்திருக்கக் கூடாதா? அதுவும் நிலையாக இருக்கவில்லையே ! கோவலன் ஈட்டியிருந்த தீவினையின் அளவும் ஒரு வரம்புக்கு உட்பட்டதன்று போலும்!

புகழ் வானளாவ ஓங்கிப் பரந்தது எனக் கூறுவதுதான் மரபு. இங்கு அடிகள் அவ்வாறு கூறாததன் காரணம் என்ன? கோவலனுடைய புகழின் பெருக்கத்துக்குப் பூமியின் பரப்பை ஏன் எல்லையாகக் காட்டிருக்கின்றார்? எல்லை காண இயலாத வானவெளி எங்கே ! அறுதியிட்டுக் கூறக்கூடிய பூமியின் பரப்பு எங்கே ! மரபுகளை வழுவாமல் காப்பவர் இங்கு மாற்றிக் கூறியிருப்பானேன் ! இதனால் அவர் ஒரு குறிப்பினை நமக்குப் புலப்படுத்தியிருக்க வேண்டும் ! அது என்ன ? **தேய்த்தல்** என்ற சொல் இல்லையாம்படித் தொலைத்தல் எனப் பொருள்படும். 'செருநர்த் தேய்த்த,' 'படியோர்த் தேய்த்த' என வந்த இடங்களில் அழித்த என்றே நச்சினார்க்கினியர் பொருள் கூறியிருக்கின்றார். அடியார்க்கு நல்லாரும் தொலைத்த எனப் பொருள் கூறுகின்றார். இப்பொருளை அமைத்துப் பார்க்கும்பொழுது கோவலன் புகழ் இப்பூமியை அழித்துவிட்டது அல்லது தொலைத்துவிட்டது என்று கூறவேண்டி வருகின்றது. ஆனால் அவ்வாறு நிகழவில்லையே ! இவ்வுலகம் சிலப்பதிகாரம் தோன்றும் காலத்துக்கு முன் இருந்தது போல இன்றும் இருக்கின்றதே ! எனவே கோவலனுக்குப் புகழ் இல்லை என்றாயிற்று. இருந்திருப்பின் அது இவ்வுலகினை அழித்து விட்டிருக்குமன்றோ !

சங்க காலத்துக்குப் பின் தேய்த்தல் என்ற சொல் **உராய வைத்தல்** என்ற பொருளில் வழங்கத் தலைப்பட்டது. இப்பொருளை அமைத்துப் பார்க்கும்பொழுது, கோவலன் புகழ் இப்பூமியின் மேற்பரப்பை

உராய்ந்து கொண்டு சென்றது என்று விளங்குகின்றது. வானளாவ ஓங்கியெழும் புகழ் எங்கே ! இப் பூமியை உராய்ந்து கொண்டு செல்லும் புகழ் எங்கே ! இவ்விரண்டுக்கு முள்ள வேற்றுமை வானளாவியதேயாகும். இதனாலும் கோவலனுக்குப் புகழ் இல்லை என்று விளங்குகின்றது. இளங்கோவடிகள் கோவலன் செயல்களைத் தாமே சித்திரிக்காமல் விட்டுவிட்டது போதாது என்று, மாடலன் கூறியவற்றால் அவனுக்குச் சேரும் புகழும் பொருட்படுத்தக்கூடியதன்று என்று கூறியிருக்கின்றார் ! என்னே கோவலன் செய்த தீவினை ! தன் உயிரையும் பொருட்படுத்தாது பிற உயிர்களைக் காக்க முன் வந்தவனை இப்படியா கருதுவது? ஏன் அவன் சிறப்பியல்புகளை மாடலன் எடுத்து விவரிப்பதை அடிகள் தடை செய்யவில்லை ? இக்காப்பியக் கதையில் பங்கு கொள்ளும் பாத்திரம் என்ற முறையில் அவனுடைய செயல்களுள் எதுவும் பாராட்டக் கூடியதாய் இல்லை. ஆகவேதான் அடிகள் அவனுக்குப் புகழே இல்லை என்று குறிப்பிட்டிருக்கின்றார். அவனை இக் காப்பியத்தோடு தொடர்புபடுத்தாமல் பார்ப்பின் பெருமையுடையவனே !

இளங்கோவடிகள் தாம் குறிப்பாய்ப் புலப்படுத்துவனவற்றை இரண்டாம் முறை குறிப்பிடும் வழக்கத்தை உயைடவராயிற்றே ! இங்கும் அவ்வாறு செய்திருக்கின்றாரா? இல்லையேல் நாம் மேலே கண்ட பொருளைப் புறக்கணித்து விடலாமே ! கோவலனுடைய சிறப்பும், பெருமையும் புகார் நகரத்து இளங்கன்னியரால் போற்றப்பட்டவை தாமே ! அவற்றை நாம் ஒரு பொருட்டாகக் கொள்ளலாமா? ஏன்? அவர்கள் பெற்றோரும், மற்றோரும்கூட அவனை ஏத்தினர் எனக் கண்டோமே ! அவர்கள் கூறியவற்றையும் பொருட்படுத்தக்கூடாதா என்ன ! பொருட்படுத்தலாம் ஆனால் அவர்கள் தம் கருத்தைத் தெரிவிக்கவில்லையே ! ஒலிபெருக்கிகள் போல, தம் மக்கள் கூறியவற்றை ஆராயாமல் உட்கொண்டு அவற்றைத் திருப்பிக் கூறினார்களே யல்லாமல், தாம் அறிந்தவற்றை அவர்கள் கூறியதாக அடிகள் கூறவில்லையே ! இப்பொழுது காதலான் என்ற சொல்லை என்ன பொருளில் அடிகள் பயன்படுத்தினார் என்று நன்றாக விளங்குகின்றது. கோவலனுக்குப் புகழ் இல்லாமற் போனாலும் போகட்டும். ஒரு சொல்லின் பொருளை நாம் நன்றாக உணர்ந்து கொண்டோமே!

கோவலனுடைய சித்திரம் ஒளியே யில்லாத கேலித் சித்திரமாய்த் தோன்றுகின்றது. இக்காப்பியத்தின் நிகழ்ச்சிகளில் அவன் பங்குபெற்றதனைக் கொண்டு மதிப்பிடுவதாயின், அவன் நிலை ஒளியற்றநிலையே, இரண்டு பெண்களின் வாழ்க்கையைப் பாழ்படுத்தித் தானும் இன்பம் காணாதவனை வேறு எப்படிக் காட்டக்கூடும் ? இக்காப்பிய நிகழ்ச்சிகளைக் கருதாமல், அவனுடைய வாழ்க்கையை மட்டும் கவனித்தோமாயின், அவன் சில நற்குணங்களையுடையவனாய்க் காணப்படுகின்றான். அதனாலேயே இவ்விடத்திலும் அடிகள் அவனை மாடலன் புகழ்ந்ததனைத் தடை செய்யவில்லை. நல்லுயிரை யுடையவன் என்ற பூதத்தின் சொற்களை விடாமற் கூறியிருக்கின்றார். தம் கூற்றிலேயே அவனைப் 'பல்லமரர் குழாத்துள்ளான்' என்று பாராட்டியிருக்கின்றார். இவ்விடத்திலும் அவனை அம்மதிமுக மடவார் கூறியிருக்கும் சிறப்பினைப் பெற்றவனாகவே நம்மை ஏற்றுக்கொள்ளும்படிச் செய்திருக்கின்றார். இதுவரை நாம் மூன்று அறிமுகங்களைக் கண்டோம். அவற்றில் அடிகள் கையாண்டிருக்கும் உத்தியைக் கொண்டே அவருடைய விருப்பத்தை நாம் தெரிந்து கொள்ள முடிகின்றது. முதலிரண்டு அறிமுகங்களிலும் பிறர் கூறியுள்ள கருத்துக்களை அடிகள் முதலிற் கூறிவிட்டுப் பின்னர்த் தாம் அவற்றை வழிமொழிவார் போலத் தம் கருத்தை வெளியிட்டிருக்கின்றார். கோவலன் அறிமுகத்தில் அவர் தம் கருத்தை முதலிற் கூறிவிட்டுப் பின்னர்ப் புகார்ப் பெண்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றார். அவர்கள் கூறியவையும் அவருடைய ஒப்புதலைப் பெற்றனவே யன்றோ ? ஒருவர் ஒரே பொருளைப்பற்றி இரண்டு வேறுபட்ட கருத்துக்களைக் கூறினால், நாம் அவர் இறுதியாக ஆராய்ந்து கூறிய கருத்தினையே பொருட்படுத்த வேண்டும் அல்லவா?

கோவலனுடைய அறிமுகத்தின் அமைப்பு முறையை ஆராய்ந்து, புகார்க் கன்னியர் அவனைப்பற்றிக் கூறியிருப்பதனை நாம் ஏற்றுக்கொள்ளுகின்றோம். எனினும் 'மண் தேய்த்த புகழ்' என்ற பகுதிக்கு நாம் கண்ட பொருள் இன்னும் நம் மனத்தைவிட்டு நீங்கவில்லை. அதனுடைய பிடிப்பைச் சற்றுத்

தளரவைத்தால் அன்றி, நாம் கோவலனைப் பற்றி நல்ல கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாதவராய் இருக்கின்றோம். மண் பருப்பொருள், புகழ் அத்தன்மையது அன்று. தனக்கென ஓர் உருவமோ அல்லது பருமையோ இல்லாத கற்பனைப்பொருள் எப்படி அவ்விரு பண்புகளையும் கொண்ட இப்பெரிய உலகத்தை இல்லாமற் செய்துவிடக்கூடும்? எனவே நாம் 'மண் தேய்த்த புகழ்' என்ற சொற்களுக்குக் கண்ட கருத்து ஏற்புடையதாக இருக்கின்றது ; எனினும் அதன் உண்மை நிலையை ஆராயாமல் அதனை ஏற்றுக்கொள்ளலாமா?

'மரத்தை மறைத்தது மாமத யானை, மரத்தில் மறைந்தது மாமத யானை.' இவ்வடிகளில் காணப்படும் கருத்தினையே 'மண் தேய்த்த புகழ்' என்ற சொற்கள் வற்புறுத்துகின்றன. உதாரணத்தில் மரமும் யானையும் போலவே இங்கு மண்ணும், புகழும் விளங்குகின்றன. யானையைக் காணும் காலத்து அது மரத்தால் இயன்றது என்ற எண்ணமும், மரத்தைக் காணும் காலத்து அது யானையின் உருவத்தை யுடையது என்ற எண்ணமும் முற்றிலும் மறைந்துவிடுகின்றன. இவ்விரு பொருள்களும் ஒன்றனை ஒன்று தொலைத்துவிடும் வல்லமை யுடையனவேனும், இரண்டும் உள்ள பொருள்களேயாம். அவ்வாறே மண்ணும் கோவலன் புகழும் இரண்டும் உள்ள பொருள்களே ! ஒன்றனைக் காணும் காலத்து மற்றொன்று விளங்காது. அவ்வளவே யன்றி ஒன்றனை ஒன்று இல்லாமல் அழித்துவிடாது. இங்குத் தேய்த்த என்ற சொல்லின் மூலம் ஒன்றின் பெயர், மற்றொன்றினைப்பற்றிய கருத்தை நம் மனத்தினின்றும் இல்லையாம்படித் தொலைத்துவிடும் என்பதனையே அடிகள் நமக்குப் புலப்படுத்தியிருக்கின்றார்.

கோவலனுடைய புகழ் இப்பூமியைச் சூழ்ந்து வளைத்துக்கொண்டிருப்பதுடன் நில்லாமல் இதனை ஊடுருவிச் சென்று, இருக்கும் இடம் எல்லாவற்றையும் தன்னுடையதாக்கிக் கொண்டுவிட்டது. மண்செறிந்த நிலம், இப்பொழுது கோவலன் புகழ் செறிந்த நிலமாக மாறிவிட்டிருக்கின்றது. மண்ணோடு புகழும் சேர்ந்திருக்கவே இப்பூமி முன்னர் இருந்ததனைவிட இப்பொழுது பெரிதாகத் தோன்றுகிறது. இது புகழ் கூடியதனால் ஏற்பட்டமையால் மண்ணைப் புகழ் வளர்ந்து சிறிதாக்கிவிட்டது என்று அடிகள் குறிப்பிட்டிருக்கின்றார். மரம் யானையின் உருவத்தையும், யானையின் உருவம் மரத்தையும் பிரித்துக் கூற முடியாதபடி பற்றிக் கொண்டிருத்தலைப் போலவே இங்கு மண்ணும், புகழும் ஒன்றோடொன்று கலந்து பிரித்துணர முடியாதபடி பற்றிக்கொண்டு விட்டன. எனவே அவற்றுள் ஒன்றினைக் கருதும்பொழுது மற்றொன்றின் நினைவு தொலைகின்றது. கருத்தளவில் அவை ஒன்றினை ஒன்று தொலைத்துவிட்ட போதிலும், பொருளளவில் இரண்டும் உள்ள பொருள்களாகவே இருக்கின்றன.

இக்கருத்தினை நம்மை புலப்படுத்திக் கொள்ளச் செய்வதற்கு அடிகள் 'மண்மறைத்த புகழ்' என்று கூறியிருக்கலாமே ! உதாரணத்தில் கண்ட யானை, மரம் இரண்டும் பருப்பொருள்கள் ; சிறியவை. ஆகவே அவை ஒன்றினை ஒன்று மறைத்ததாகக் கூறப்பட்டன. ஆனால் மண், புகழ் இரண்டும் நம்மால் முற்றிலும் உணர்ந்து கொள்ளக்கூடிய சிறிய அளவினையுடையன அல்ல. மேலும் இவற்றுள் மண் ஒன்றே பருப்பொருள்; புகழ் வெறும் கற்பனையே. எனவே இங்கு மறைத்தல் பயன்படாது. மறைக்க மறைக்க, கருத்தும் கற்பனையும் வெளிப்பட்டவாறே இருக்கும். அடியோடு தொலைந்தாலொழிய அவை நீங்கமாட்டா. ஆகவேதான் அடிகள் 'மண் தேய்த்த புகழினான்' என்று கூறியிருக்கின்றார். மேலும் இது பின்னர் வரும் 'பண்தேய்த்த மொழியினால், என்பதனோடு எல்லா வகையிலும் இணைந்து நடக்கவும் வேண்டுமல்லவா?

ஆயின் 'மண் தேய்த் புகழினான்' என்ற பகுதிக்குப் புகழில்லை என்பதனைக் குறிப்பிட்டதாகக் கூறியிருப்பது பொருளன்றா? இல்லை. மண்ணும், புகழும் ஒன்றினைக் கருத இன்னொன்று அழிதலைப்போலவே, இக்காப்பியத்தில் அவன் கொண்டிருந்த பங்கினைக் கருத அவன் புகழற்றவனாகின்றான். மாதவியின் கதையில் அவன் கொண்டிருந்த பங்கினைக் கருத அவன் புகழுடையவனாகின்றான். இதனையே அடிகள் நமக்கு உணர்த்த விரும்பியிருக்கின்றார் !

நன்றி : சிலம்பின் தனித்தன்மை –
மணிவாசகர் நூலகம் – 1988

சிலப்பதிகாரத்தில் ஒற்றைச் சிலம்பு

முனைவர் சரளா ராசகோபாலன்

சங்ககாலத்தில் குழந்தையணியாகச் சிலம்பு இருந்தது. அதைத் திருமணத்திற்கு முன் நீக்குவர். நீங்குங்கால் அது ஒரு விழாவாகக் கொண்டாடப் பட்டுச் "சிலம்பு கழிநோன்பு" எனப் பெயர் பெறும். இந்நோன்பு திருமணத்திற்குச் சிறிது முன்னர்தான் நிகழும். 'குழந்தை முதலே கிடக்கும் சிலம்பின் நீக்கம் இவள் ஒருவனுக்கு மனைவியானாள் என்பதனை உலகிற்கு அறிவிக்கும் சடங்காக அமைந்தது' என்று டாக்டர் வ. சுப. மாணிக்கனார் குறிப்பர். (தமிழ்க் காதல். ப. 166)

தன் காவியத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்திய இளங்கோவடிகள் திருமணச் சடங்கிலும் பல மாற்றங்களை ஏற்படுத்தினார். தமிழர் கண்ட இச்சடங்கு முறையை நீக்கி ஆரியர் கண்ட தீ வலம் வரும் சடங்கைப் புகுத்தினார். திருமணத்திற்கு முன் சிலம்பு அணியா வழக்கத்தை மாற்றினார். கண்ணகி சிலம்பு அணிந்திருக்கும் கோலத்தை ஆசிரியர் காட்டவில்லை. ஆயினும் கோவலனின் பிரிவில் 'அஞ்செஞ் சீறடி அணிசிலம்பு ஒழிய' (அந்தி மாலை : வரி 47) என்ற குறிப்பினால் அவள் திருமணத்திற்குப் பின், கோவலன் உடன் இருந்தபோது சிலம்பு அணிந்திருந்தாள் என்பது அறியமுடிகிறது.

மகளிரின் சிறு அணிகலனான இது சிலப்பதிகாரத்தில் முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளது. "புகார்க் காண்டத்தில் சிலம்பு திருமண வீட்டில் சிறு அணிகலனாக உள்ளது. அது மதுரைக் காண்டத்தில் வீர நங்கையின் கையிலே விளங்கி அரசனுடைய அரண்மனைக்குச் செல்கிறது. வழக்கு ஆடுவதற்குரிய பொருளாக விளங்குகிறது. வஞ்சிக் காண்டத்தில் வழிபாட்டுக்குரிய பெருஞ்சிறப்போடு திகழ்கிறது" என்று டாக்டர், மு. வரதராசனார் குறிப்பிட்டுள்ளார். (இளங்கோவடிகள். ப. 57)

இளங்கோவடிகள் தான் நூலை இயற்றியதற்கான காரணங்களாக அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதையும், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவதையும் ஊழ்வினை உருத்துவந்து ஊட்டுவதையும் குறிக்கிறார். இம்மூன்று உண்மைகளும் நிகழ்வதற்குக் காரணமாக இருப்பது சிலம்பே. இதைப் பதிகம் தெளிவாகக் காட்டுகிறது. (பதிகம் 55–60) இதனால் காவியத் தலைவி கண்ணகியின் பெயரைக் கூடச் சுட்டாமல் காவியப் போக்கிற்கு இன்றியமையாததாக விளங்கிய சிலம்பின் அடிப்படையில் 'சிலப்பதிகாரம்' எனப் பெயர் அமைத்தார்.

இளங்கோவடிகள் இவ்வணிகலனைச் சிலம்பு எனக் குறிப்பிட்டதோடு நூபுரம் (கடலாடு : 84) நெகிழம் (துன்பமாலை : 25) ஆகிய சொற்களையும் ஆண்டுள்ளார்.

சிலம்பு அணியாக் கோலம்

சிலப்பதிகாரத்தில் மாதவி சிலம்பு அணிந்திருந்த காட்சி குறிக்கப்படுகிறது. (கடலாடு : 84 ; வேனில் 90) ஆனால் மானுட நிலையில் கண்ணகி சிலம்பு அணிந்த காட்சி காட்டப்படவில்லை. திருமணக் காலத்திலும் அவள் அணிந்த அணிகலன்கள் குறிப்பிடப்படவில்லை. முதல் நாளிரவில் கோவலன் கண்ணகியைப் பாராட்டும்போதும் சிலம்பைக் குறிக்கவில்லை. ஆனால் கோவலன் பிரிந்த நிலையில் – அலங்காரம் இல்லாமல் அவலத்தில் ஆழ்ந்த நிலையில் தான் – முதன் முதலாகச் சிலம்பு அறிமுகப்படுத்தப்படுகிறது. அவள் சிலம்பைக் கழற்றிய நிலையே 'அஞ்செஞ் சீறடி அணி சிலம்பு ஒழிய' (அந்தி மாலை ; 47) என்ற வரிகளில் காணப்படுகிறது. கண்ணகி கோவலனுடன் இணைந்து மதுரைக்குச் செல்லும் வழியில் கூட அவள் சிலம்பணிந்ததாகக் காட்டப்படவில்லை. மூட்டைக்குள் ஒடுங்கியிருந்ததாகவும்

காட்டப்படவில்லை. கண்ணகி இறுதிவரை சிலம்பு அணிந்ததாகவே குறிப்பு இல்லை. அவள் தெய்வக்கோலத்தில்தான் 'பொன்னஞ் சிலம்பின் புனை மேகலை வளைக்கையுடன் மின்னுக்கொடி ஒன்று மீ விசும்பில் தோன்றுவது' போன்று செங்குட்டுவனுக்குக் காட்சி தருகிறாள். (வாழ்த்து. பா. 9)

சிலம்பு உள கொண்ம்

மாதவியை நீங்கிய கோவலன் கண்ணகியிடம் குலந்தரு வான்பொருள் குன்றம் தொலைந்ததை வருந்திக் கூறிய போது கண்ணகி நலங்கேழ் முறுவர் காட்டி 'சிலம்புள கொண்ம்' எனக் கூறுகிறாள். கோவலன் சிலம்பைக் கண்ட காட்சியே பின்வரும் அவல நிகழ்ச்சிகளுக்குத் தோற்றுவாயாக அமைகிறது. வாணிகக் குலத்தினான கோவலனுக்கு அவள் காட்டிய சிலம்பு வாணிக முதலாகத் தோற்றமளிக்கிறது. இழந்த பொருளையும் ஈட்டலாம் என்ற நம்பிக்கையை அளிக்கிறது. திருந்திய உள்ளத்தினனான அவன் குல மரபை மீறிக் கண்ணகியையும் உடனழைக்கிறான். அவளும் மறுக்காமல் உடன் செல்கிறாள். சிலம்பின் மூலம் ஊழ்வினை உருத்துவந்து ஊட்டுகிறது. மாதவியின் அவலத்திற்கு யாழிசை காரணமாகிறது. (கானல்வரி 52) கண்ணகியின் அவலத்திற்குச் 'சிலம்புள கொண்ம்' என்று கோவலனிடம் முதன் முதலாகக் கூறிய சொல்லே காரணமாகிறது. இவ்வொரு சொல்லே காவியக் கதைப் போக்கிற்கும் அடிப்படையாகிறது. காவியத் தலைவி தலைவனிடம் பேசும் முதல் சொல்லே அவள் வாழ்வின் அமங்கல நிலைக்கு வழிவகுக்கிறது. 'சிலம்பு உள' என்ற சொற்கள் 'சிலம்பு இல' என்றாகியிருக்கக் கூடாதா என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கிறது. இந்த இடத்தில் மட்டும்தான் 'உள' என்று பன்மை நிலையில் சிலம்பு கூறப்படுகிறது. கண்ணகியின் இணையடிகளில் இணைந்திருக்க வேண்டிய சிலம்புகள் கைகளில் இடம் பெறுகின்றன. அவலத்திற்கும் அடிகோலுகின்றன. இவ்வுலகில் இருவரும் நிரந்தரமாகப் பிரியப் போவதை எடுத்துக் காட்டுகின்றன.

கோவலனின் ஒற்றைச் சிலம்பு

மகளிர் அணிகின்ற அணிகலன்களில் இணையாக அணியத்தக்கன, தனித்து அணியத்தக்கன என இரண்டு நிலைகள் உள்ளன. அவை உறுப்புகளுக்கேற்ப அணியப்படுகின்றன. காது, கை, கால்களில் இணையாகவே அணியப்படும். மூக்குத் துளைகள் இரண்டாயினும் ஒன்றாகவே கருதப்படுவதால் மூக்குத்தி அவரவர் விருப்பத்திற்கு ஏற்ப வெவ்வேறாக அணியப்படும். ஆனால் கம்மல், வளையல், சிலம்பு ஆகியவை போலவே இணை மூக்குத்தி (ஜோடி மூக்குத்தி) என்று கருதப்படுவதில்லை. இணை அணிகள் ஒரே அளவில் ஒரே வேலைப்பாட்டுடன் அமையுமே அல்லாது மாறி அமைவதில்லை. அவ்வாறே வாங்கும் போதும், விற்கும் போதும் இணையாகத்தான் பெற்றுக்கொள்ளப்படும். இன்றும் வங்கிகளில் இணையில் ஒன்றை அடமானம் வைக்கும் போது, அதைக் களவுப் பொருளாகக் கருதுகின்றனர். உரிமையுடையவரின் உறுதி மொழி பெறுகின்றனர்.

கோவலனோ கண்ணகியின் கையில் இணைச்சிலம்புகளைக் கண்டும் ஒன்றையே கொண்டு செல்ல முடிவு செய்கிறான். 'சீறடிச் சிலம்பினொன்று கொண்டியான் போய் மாறி வருவன்' என்று அவளிடம் விடை பெறுகிறான். (கொலைக்களம் : 62 – 63). அவள் கண்களில் தெரிந்த கலக்கங்கண்டு, 'மயங்காது ஒழிக' என்று ஆறுதல் கூறுகிறான். மேற்காட்டிய அணிக்கோட்பாட்டினை அறிந்த கண்ணகியும் அவன் ஒற்றைச் சிலம்பு கொண்டு போவதைத் தடை செய்யவில்லை. தன் ஒற்றைச் சிலம்பை மகளிர் வாங்குதலும் அணிதலும் இயலுமா என்று நினைத்துப் பார்க்கவும் இல்லை.

கோவலன் கொலைக்குக் காரணம் அவன் ஒற்றைச் சிலம்பை விற்க நினைத்தமையேயாகும்.

அவனுடைய வாய்ச்சொல்லும் உடன் சேர்கிறது. பொற்கொல்லனைக் கண்டவன்

"காவலன் றேவிக் காவதோர் காற்கணி
நீவிலை யிடுதற் கறிதியோ" (கொலைக்களம் : 110 – 111)

எனக் கேட்கிறான். இச்சொல் பொற்கொல்லன் செவியில் விழுந்து மூளையை விரைவுபடுத்துகிறது. அவன் களவாடிய சிலம்பிற்கு ஈடு செய்யத் தூண்டுகிறது. சிலம்பின் வினைத்திறன் கண்டவுடன் கோப்பெருந்தேவிக்கல்லது இச்சிலம்பு வேறொருவருக்குப் பொருந்தாது என்று அவன் வாய் கூறுகிறது. உள்ளமோ கரந்து தான் கொண்ட காலணிக்கு ஈடு செய்ய நினைக்கிறது. (சிலம்பில் பொற்கொல்லன் சிலம்பு திருடியதற்கான காரணம் புலப்படுத்தவில்லை) மன்னனிடம் சென்று கோயில் சிலம்பு திருடிய 'கள்வன்' அகப்பட்டதாகக் கூறுவதிலிருந்து சிலம்பு தொலைத்ததைப் பொற்கொல்லன் ஏற்கனவே அரசனிடம் கூறியுள்ளான் என்பதை அறிய முடிகிறது. பாண்டியனும் தன் தேவியின் ஊடலைத் தீர்க்கும் முயற்சியில் அறிவு மயங்கிட, 'வினைவிளை காலமாதலின்' ஊர்க் காவலரைக் கூவி

"ஈங்கென் தாழ் கோதை தன்காற் சிலம்பு
கன்றிய கள்வன் கையது ஆகில்
கொன்றச் சிலம்பு கொணர்க" (கொலைக்களம் : 150 – 154)

என ஆணையிடுகிறான். தேவியின் காற்சிலம்பு கையிலிருந்தால் என ஒருமையில் குறிப்பிடுகிறான். சிலம்பு காண வந்தோரும் சித்திரச் சிலம்பின் செய்வினை அறிகின்றனர். (கொலைக்களம் 158 – 161) ஊர்க்காவலர் கள்வனா அல்லனா என முடிவு கூறும் முன்பு கல்லாக் களிமகனால் கோவலன் முடிவு நேர்கிறது.

கோவலன் இரட்டைச் சிலம்பு கொண்டு சென்றிருந்தால் பொற்கொல்லனுக்கும் தீய நினைவு தோன்றியிருக்காது. ஊர்க்காவலர் உண்மையறிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். களவுப்பொருள் என்று நினைக்க வாய்ப்பு இல்லாமல் போயிருக்கும். கோவலன் கள்வன் என்ற பழியோடு இறந்திருக்கமாட்டான். அரசனும் பிழை செய்திருக்கமாட்டான்.

கண்ணகியின் ஒற்றைச் சிலம்பு

கண்ணகியின் ஒற்றைச் சிலம்பு 'செம்பொற் சிலம்பு' (ஊர்சூழ்வரி : 23) இணையரிச் சிலம்பு (வழக்குரை 27) அணிமணிக் காற்சிலம்பு (வழக்குரை 71) பொன்னஞ்சிலம்பு (வாழ்த்துக் காதை 9) செஞ்சிலம்பு (காட்சிக்காதை 74, வாழ்த்து 11) எனப் பல்வேறு நிலைகளில் சிறப்பிக்கப்படுகிறது.

கண்ணகியின் ஒற்றைச் சிலம்பு இல்லையென்றால் பாண்டியனைக் கண்ணகியால் வெல்ல முடியாது. கண்ணகியின் தாய் வீட்டுச் சீதனமான சிலம்பில் மாணிக்கப்பரல் பொதிந்திருப்பது கோவலனுக்குக் கூடத் தெரிய வாய்ப்பில்லை. தன் காற்சிலம்பு மணியுடை அரியே என்று கண்ணகி சொன்னதால்தான் பாண்டியனும் பாண்டியமாதேவியின் காற்சிலம்பில் முத்துடை அரியெனக் கூறுகிறான். வழக்கின் இன்றியமையாத சான்றுகாட்டிய கண்ணகியைத் 'தேமொழி உரைத்தது செவ்வை நன்மொழி' எனப் பாராட்டவும் செய்கிறான். கவரப்பட்ட சிலம்பு கொண்டுவர, அந்த அணிமணிக் காற்சிலம்பைக் கண்ணகி உடைக்க, மன்னவன் வாய்முதல் மாணிக்கமணி தெறிக்கிறது. அதைக் கண்ட மன்னவன் 'யானே கள்வன்' என்று வழக்கின் தீர்ப்புக்கூறி, அதற்குத் தண்டனையாகத் தான் உயிர் துறக்கிறான். கோவலனின் கையிலிருந்த சிலம்பு அவனைக் கள்வனாக்கி இறக்கச் செய்கிறது. கண்ணகியின் சிலம்பு பாண்டியனைக் கள்வனாக்கி இறக்கச் செய்கிறது.

இச்சிலம்புகளின் வேறுபாட்டையும் செயல்திறனையும் சீத்தலைச் சாத்தனார் வேறுபடுத்திக் காட்டுகிறார். கோவலனின் கையிலிருந்ததைத் தீவினைச் சிலம்பு என்றும் கண்ணகி வழக்கில் வெல்லக் காரணமாக இருந்த சிலம்பைச் செஞ்சிலம்பு என்றும் வேறுபடுத்திக் குறிப்பிடுகிறார். (காட்சி : 69 – 74) கண்ணகியின் ஒற்றைச் சிலம்பால்தான் பாண்டியன் பிழைத்தமையை அறிய முடிகிறது. வஞ்சினம் சாற்றிய கண்ணகியைப் பத்தினியாக்கியது, முன் பிறவியில் நீலி இட்ட சாபம் கண்ணகியை உருத்து வந்து ஊட்டியது. ஒள்ளெரியால் இவ்வூர் எரியுண்ணும் என்னும் பண்டை மொழியும் உண்மையானது.

காற்சிலம்பு கைக்குச் சென்றதால் அழிவு நேர்ந்தது. இணைச் சிலம்பு பிரிந்ததால் காவியத் தலைவனும் தலைவியும் பிரிந்தனர். கோவலனின் ஒற்றைச் சிலம்பு அரசனை நீதி வழுவச் செய்தது. கண்ணகியின் ஒற்றைச் சிலம்பு அரசனை உயிர் கொடுத்து நீதி வழி நிற்கச் செய்தது. கோவலனின் ஒற்றைச் சிலம்பு அவன் உயிர் போக்கியது. கண்ணகியின் கைச்சிலம்பு காவலனின் உயிர் போக்கியது. கோவலனின் ஒற்றைச் சிலம்பு கோவலனைக் கள்வனாக்கியது. கண்ணகியின் ஒற்றைச் சிலம்பு பாண்டியனைக் கள்வனாக்கியது. கோவலனின் ஒற்றைச் சிலம்பால் காவலன் கோயில் இழந்தான். கண்ணகி தன் ஒற்றைச் சிலம்பால் பாண்டியனை வழக்கில் வென்று, மதுரையை எரித்ததால், சேரனால் கோயிலில் அமர்ந்தாள்.

இரு ஒற்றைச் சிலம்புகளும் இளங்கோவின் மூன்று கொள்கைகளை நிறுவ அடிப்படையாக அமைந்தன. அதனால் காப்பியத்தின் பெயராய் அமைந்தன.

நன்றி : சிலம்புவழிச் சிந்தனைகள் –
ஒளிப்பதிப்பகம் – 1989

வஞ்சிக்காண்டம் – ஒரு பகாப்பதமே !

பேராசிரியர் தி. இராசகோபாலன்

இலக்கியங்களுள் சிலவற்றை எப்போதாவது படிக்கலாம் ; சிலவற்றை அவ்வப்போது படிக்கலாம்: சிலவற்றை எப்போதும் படிக்கவேண்டும் ; முப்போதும் படிக்கவேண்டும். அந்தவகையில் எப்போதும் படிக்கவேண்டிய காப்பியம், முப்போதும் படிக்கவேண்டிய காப்பியம், சிலப்பதிகாரம் ! இதனை, "தேனிலே ஊறிய செந்தமிழின் சுவை தேரும் சிலப்பதிகாரமதை, ஊனிலே எம்முயிர் உள்ளளவும் ஓதியுணர்ந்து இன்புறுவோமே" எனும் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் வாக்கினாலும் அறியலாம்.

'கண்ணகி வழக்குரைத்து, மதுரை எரித்ததோடு சிலப்பதிகாரம் முற்றுப்பெற்றுவிடுகிறது' என்று சிலர் தவறாக எண்ணியதால், வஞ்சிக்காண்டம் தேவையில்லாத ஆறாவது விரலாகப் பேசப்பட்டது. இன்னும் சிலர் வஞ்சிக்காண்டம் இளங்கோவடிகளால் இயற்றப்படவில்லை என்று பேசவும் செய்தனர். தரைக்கு மேல் எத்தனை மாடி எழுப்பப்படவேண்டும் என்பதைக் கடைகால் (ப்வுண்டேசன்) போடும்போதே பொறியியல் வல்லுநர் தீர்மானித்து விடுவார். அதுபோல வஞ்சிக்காண்டத்திற்கும் சேர்த்துத்தான், இளங்கோவடிகள் கடைகால் போட்டிருக்கிறார். புகார்க்காண்டத்தில் காணப்படும் இளங்கோவடிகளின் ஆளுமைத்திறன் – மதுரைக்காண்டத்தில் காணப்படும் அதே ஆளுமைத்திறன் தான், வஞ்சிக்காண்டத்திலும் காணப்படுகின்றது என்பதால், வஞ்சிக்காண்டம் வேறொருவருடைய வேலைப்பாடு என்று எண்ணுவதற்கு இடமில்லை.

காப்பியங்களும் இதிகாசங்களும் பெரும்பாலும் பட்டாபிஷேகத்தில் முடிவுறும் என்பதால், பாதுகா பட்டாபிஷேகத்தோடோ – சுக்கிரீவன் பட்டாபிஷேகத்தோடோ – வீடணப் பட்டாபிஷேகத்தோடோ, இராமாயணம் முற்றுப்பெற்றதாக யாரும் நினைக்கமாட்டார்கள் ! இராமர் பட்டாபிஷேகத்திற்கு முன் சொன்னதெல்லம் தோரணவாயில்கள் ஆகும். அதுபோல, மதுரைக் காண்டத்தில் கண்ணகி மதுரையை எரித்தது, வஞ்சிக்காண்டத்தில் பத்தினி வழிபாட்டிற்கு நாட்டப்பட்ட தோரணவாயில் ஆகும்.

தலைமைச் சிற்பியாகிய சீத்தலைச் சாத்தனார் சிலப்பதிகாரம் எனும் மாளிகைக்கு உரிய வரைபடத்தை (புளூ பிரிண்ட்) இளங்கோவடிகள் எனும் கட்டுமானக் கலைஞரிடம் ஒப்படைக்கும் போதே, 'முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது, அடிகள் நீரே அருளுக' என வேண்டியதால், வஞ்சிக்காண்டம் கண்ணகி கதையில் பிரிக்கமுடியாத பகாப்பதம் என்பதை உணரலாம். சோழ, பாண்டியரோடு வஞ்சிக்காண்டத்தின் சேரனையும் சேர்த்தால்தான், மூவர் ஆவர்.

திருக்குறளுக்குரிய அழகுகளில் ஒன்று, அதன் வைப்புமுறை ஆகும். 133 அதிகாரங்கள் ; ஒவ்வொரு அதிகாரத்திற்கும் 10 குறட்பாக்கள் ஆக, மூன்று பால்கள் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால்) 1330 குறட்பாக்கள் எனும் வைப்பு முறை ! அதே அழகு சிலம்பிலும் உண்டு. மூன்று காண்டங்கள் (புகார், மதுரை, வஞ்சி). புகார் : 10 காதைகள் ; மதுரை : 13 : வஞ்சி : 7 ஆக 30 காதைகள். மூன்று நாடுகள் – மூன்று தலைநகரங்கள் – மூன்று நதிகள் – மூவர் மன்னர்கள் – மூன்று தமிழ் எனும் வைப்புமுறை ! வஞ்சிக்காண்டத்தை நீக்கிவிட்டு இந்த அழகை அனுபவிக்கமுடியுமா?

இராமாயணத்திற்கும் சிலப்பதிகாரத்திற்கும் சில ஒற்றுமைகள் உண்டு. இரண்டும் தேசிய ஒருமைப்பாட்டுக் காப்பியங்கள். இராமாயணம் வடக்கேயிருந்த ஒரு தெய்வப்பெண் சீதை, தெற்கே வந்து மானிடப் பெண் ஆகியது. சிலப்பதிகாரம் தெற்கே இருந்து ஒரு மானிடப்பெண் கண்ணகி, வடக்கே இருந்து கல் எடுத்து வரப் பத்தினிக்கடவுள் ஆகியது. கண்ணகி பத்தினிக்கடவுளாக வழிபடப்படுவது, வஞ்சிக்காண்டத்தில் தானே ! வஞ்சிக்காண்டத்தின் மூலம் தேசியக் காப்பியமாக மட்டுமன்றி, சர்வதேசியக் காப்பியமாகவும் சிலப்பதிகாரம் பரிணமிக்கின்றது. சேரநாட்டிலே கண்ணகி வழிபாட்டிலே கலந்துகொண்ட மன்னன் கயவாகு, அதனை இலங்கைக்கும் எடுத்துச் செல்கிறான். இலங்கைக்குச் சென்ற பத்தினி வழிபாடு, பின்னர் தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் பரவிற்று.

பெருங்காப்பியம் அறம், பொருள், இன்பம், வீடடைதல் எனும் நான்கினையும் கொண்டு நடைபெற வேண்டும். இந்த நான்கினுள் ஒன்று குறைந்தால், அது சிறுகாப்பியம் ஆகிவிடும். புகார்க் காண்டத்திலும், மதுரைக்காண்டத்திலும், அறம்பொருள் இன்பம் ஆகிய மூன்றும் நடமாடுகின்றது. ஆனால், வீடடைதல் வஞ்சிக்காண்டத்தில் தான் நிறைவேறுகின்றது. செங்குன்றத்திலே வந்து நின்ற கண்ணகியை, வானவர்களும் தேவர்களும் வந்து அழைத்துச் செல்கின்றனர். அக்காட்சியைக் கண்ட குன்றக்குறவர்கள், 'வானக வாழ்வினரான தேவர்கள் தொழுது போற்ற, கண்ணகி தன் கணவனோடும் நிலையான வானுலக வாழ்க்கையைப் பெற்றாள். பிறப்பறுத்த அத்தெய்வத்தை நாம் போற்றிப் பாடவேண்டும்' என்கின்றனர். கண்ணகி வீடு பேறு அடைந்த செய்தியை இளங்கோவடிகள், "வானக வாழ்க்கை அமரர் தொழுதேத்தக்.... கான நறுவேங்கைக் கீழாள் கணவனொடும் வானக வாழ்க்கை மறுதரவோ இல்லாளோ ! மறுதரவு இல்லாளை ஏத்தி யாம்பாட" எனப் பாடுவதால், சிலப்பதிகாரத்தைப் பெருங்காப்பியம் ஆக்கிய பெருமை வஞ்சிக்காண்டத்திற்கு உரியதாகும். பிறப்பு அறுத்தவர்க்கே வீடுபேறு கிட்டும்.

பெருங்காப்பியத்தில் இடம்பெறும் நாயகி தன்னேர் இல்லாத தலைவியாக இருக்கவேண்டும். சிலம்பிலே பாட்டுடைத்தலைவன் கோவலன் அல்லன். காரணம் அவன் வம்பப் பரத்தரொடு திரிந்த காரணத்தினால், மதுரைத் தென்றலைப் போலக் குறிக்கோள் இல்லாத மனிதனாகிவிட்டான். சோழமன்னன் ஆயிரம் கழஞ்சுப் பொன்னைப் பரிசுப் பொருளாகவும் எட்டுக் கழஞ்சுப் பொன்னை ஒருநாளைய இன்பத்திற்கு விலையாகவும் வழங்கியதால், அவனும் தன்னேரில்லாத் தலைவன் ஆகான். பாண்டியன் நெடுஞ்செழியன் ஆடல் மகளிரிடம் நெஞ்சைப் பறிகொடுத்ததால், அவனும் பாட்டுடைத் தலைவன் ஆகான். எனவே சிலப்பதிகாரத்திலே ஒப்பாரும் மிக்காரும் இல்லாத் தலைவன், சேரன் செங்குட்டுவன் என்பதால், அவன் இடம்பெற்ற காண்டம், வஞ்சிக்காண்டம் தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

யாருக்குச் சிலை வைப்பது என்பதை ஒரு பெண்ணிடம் கேட்க வேண்டுமென்பதால், மனைவி வேண்மாளிடம் கேட்கின்றான், செங்குட்டுவன் ! எங்கே கல்லெடுப்பது என்பதை நூலறி புலவரிடம் கேட்கின்றான். பொதிகையில் கல் எடுக்கலாம் என்றாலும், உயர்ந்த நோக்கோடு இமயத்திற்குச் செல்வதால், செங்குட்டுவன் தன்னேரில்லாத் தலைவனே ! பெரியபுராணத்திலே பல நாயன்மார்கள் வந்தாலும், சுந்தரமூர்த்தி நாயனாரே பாட்டுடைத் தலைவன் என்பது போல, சிலப்பதிகாரத்திற்கும் வஞ்சிக்காண்டத்தில் இடம்பெறும் செங்குட்டுவனே, பாட்டுடைத் தலைவன்.

பெருங்காப்பியத்திலே ஒன்பான் சுவைகள் இருக்கவேண்டும். புகார்க் காண்டத்திலேயும் மதுரைக் காண்டத்திலேயும் எண்பான் சுவைகள் உண்டே தவிர, நகைச்சுவையில்லை. வஞ்சிக்காண்டத்திலேதான், தலையாயச் சுவையாகிய நகைச்சுவை இடம்பெறுகிறது. செங்குட்டுவனின் வடநாட்டுப் போரின்போது, தோற்றுப்போன வீரர்கள் உயிர் பிழைப்பதற்காகப் பல வேஷங்களைப் போடுகின்றனர். சிலர் சடைமுடியும் காவியும் அணிந்து உடலெல்லாம் திருநீறு பூசி சாமியார் வேஷம் போட்டு ஓடுகின்றனர் ; வேறு சிலர் சமண முனிவர்களைப் போல மயிற்பீலியும் மணியும் அணிந்து ஓடுகின்றனர் : மற்றும் சிலர் ஆடுநர் போலவும் பாடுநர் போலவும் வேடமணிந்து ஓடிப் பிழைத்தனர். இதனை இளங்கோவடிகள் "சடையினர், உடையினர், சம்பற் பூச்சினர் ; பீடிகைப் பீலிப் பெருநோன்பாளர், பாடுபாணியர், பல்லியத் தோளினர், ஆடுகூத்தர் ஆகி, ஏந்துவாள் ஒழியத் தாந்துறை போகி" என வருணிப்பார். வீரர்கள் வேடம் பூண்டு கோழைகளாகி ஓடுவது, நகைப்புக்குரியது அல்லவா !

தொல்காப்பியம் தலையாய சுவையாகக் கருதிய நகைச்சுவைக்கு, வஞ்சிக்காண்டம் தான் வழி வகுக்கின்றது. பெருங்காப்பிய இலக்கணங்களில் ஒன்று பொன்முடி கவித்தல். அதாவது மகுடாபிஷேகம் (பட்டாபிஷேகம்) எனப் பலநாட்டு மன்னர்கள் கூடி நிகழ்த்தும் மங்கல நிகழ்ச்சி ஆகும். சிலப்பதிகாரத்தில் எந்த மன்னருக்கும் முடிசூட்டும் விழா நடத்துவதற்குரிய வாய்ப்பில்லை என்றாலும், பல நாட்டு மன்னர்கள்

கூடி, "கைவினை முற்றிய தெய்வப் படிமத்து ; வித்தகர் இயற்றிய விளங்கிய கோலத்து, முற்றிழை நன்கலம் முழுவதும் பூட்டிப் பூப்பலி செய்து, காப்புக்கடை நிறுத்தி, வேள்வியும் விழாவும் நாள்தொறும் வகுத்து, கடவுள் மங்கலம் செய்க என ஏவினன்" எனச் சேரன் செங்குட்டுவன் நிகழ்த்திய பத்தினிக் கடவுளின் பிரதிஷ்டையையே 'பொன்முடி கவித்தலுக்கு' (முடிசூட்டுவிழாவிற்கு) இணையாகக் கொள்ளலாம். இந்நிகழ்ச்சியும் வஞ்சிக்காண்டத்தில் தான் இடம் பெற்றுள்ளது.

ஒரு தெய்வக்கோட்டம் நாட்டுவதற்குரிய இலக்கணங்கள், சிற்பக்கலை நூல்களில் மட்டுமே காணக்கிடைக்கும். ஆனால், இளங்கோவடிகள் ஒரு தெய்வக் கோட்டம் நிறுவுவதற்குரிய மரபுகளான கற்காண்டல், நீர்ப்படை செய்தல், உருவடித்தல், கர்ப்பக்கிருகம் தேர்ந்தெடுத்தல், படிமம் நிறுத்தி வழிபடல் ஆகிய அனைத்தையும் இலக்கியச் சுவையிலும் சொல்லமுடியும் என, வஞ்சிக்காண்டத்தின் வழிக் காட்டியுள்ளார். பெருங்காப்பியத்திலே மன்னவன் முக்கிய முடிவுகளை எடுக்க மந்திராலோசனை மண்டபத்தைக் கூட்டவேண்டும். இராமாயணத்திலே இராமனுக்குப் பட்டம் சூட்டுவதை, மந்திராலோசனை நடத்தியே முடிவுக்கு வருகிறான் தசரதன். இராவணன் இலங்கையை எப்படி மீட்பது என்பதை அமைச்சரவையைக் கூட்டிக் கலந்தாலோசிக்கின்றான். ஆனால், சோழமன்னன் மாதவிக்குத் தலைக்கோல் பட்டத்தை அரசவையிலே வழங்கினாலும், அரசவையிலே அம்முடிவை எடுக்காமல் தானே தனித்து முடிவெடுக்கிறான். பாண்டியனும் பொற்கொல்லன் கொண்டு வந்த குற்றச்சாட்டை அரசவையிலே விவாதித்திருந்தால், அப்படியொரு விபரீதம் நேர்ந்திருக்காது. ஆனால், சேரன் செங்குட்டுவன் குன்றக்குறவர்கள் கொண்டு வந்த செய்தியைத் தண்டமிழ் ஆசான் சாத்தனார், வில்லவன்கோதை, அழும்பில் வேள், வேண்மாள் அவர்களோடு கலந்தாலோசித்தது அல்லாமல், மலைவளங் காணச்சென்ற இடத்திலேயே மந்திராலோசனை நடத்துகின்றான். அதனை, "அறைபறை எழுந்தபின், அரிமான் என்ற முறைமுதற் கட்டில் இறைமகன் ஏற ஆசான், பெருங்கணி, அருந்திறல் அமைச்சர், தானைத்தலைவர் தம்மொடு குழீஇ.." எனத் தெரிவிப்பார் இளங்கோவடிகள். புகார், மதுரைக்காண்டத்தில் இடம்பெறாத மந்திராலோசனை, வஞ்சிக்காண்டத்தில் மட்டுமே இடம்பெறுகிறது.

மேலும், பெருங்காப்பியம் என்றால், அதில் தூது போதலும் இருக்கவேண்டும் என அலங்கார சாஸ்த்திரம் சொல்லும். இராமாயணத்திலே அநுமன் தூதை அகத்தூதாகச் சொல்லலாம் ; அங்கதன் தூதைப் புறத்தூதாகச் சொல்லலாம். தூது அனுப்பாததை வாலி போர்க்குரலாகவே எழுப்புகின்றான் ("நூல் இயற்கையும், நும்குலத்து உந்தையார் போல் இயற்கையும், சீலமும் போற்றலை ; மன் அற வேலியைப் படுத்தாய்"). சிலப்பதிகாரத்தில் அக்குறை வர வாய்ப்பில்லை. புகார்க்காண்டத்திலே அகத்தூதாக வயந்தமாலை வருகிறாள் ; மதுரைக்காண்டத்திலே கோசிகமாமுனி அகத்தூதாக வருகிறான். ஆனால், புறத்தூது வஞ்சிக் காண்டத்திலே தான் வருகிறது. சேரன் செங்குட்டுவன் வடநாட்டுப் படையெடுப்பை அங்குள்ள மன்னர்களுக்குத் தெரிவிக்கவேண்டும் என, வில்லவன் கோதை எனும் அமைச்சர் தெரிவிக்கின்றார். அப்போது அழும்பில் வேள், "தூது தேவையில்லை ; ஏனென்றால், அந்தந்த நாட்டு ஒற்றர்கள் நம் வாசல்படியிலேயே காத்துக் கிடக்கின்றனர் ; அவர்களே இந்நேரம் நம் படையெடுப்பைத் தெரிவித்திருப்பார்கள்" எனத் தெரிவிப்பதால், வஞ்சிக்காண்டத்தில் இடம்பெறும் புறத்தூதைப் பற்றிய விபரத்தை அறியலாம்.

பெருங்காப்பியத்திலே அகத்திணைச் செய்திகள் மட்டும் அடங்கியிருந்தால் போதாது ; புறத்திணையியலும் பொருந்தியிருக்கவேண்டும். புறத்திணையியலைப் பேசுவதற்குப் புகார்க் காண்டத்தில் – மதுரைக்காண்டத்தில் வாய்ப்பில்லை. ; வஞ்சிக்காண்டத்தில் தான் அதற்கு வாய்ப்பிருக்கிறது. வடநாடு புறப்படுகின்ற சேரன் செங்குட்டுவன் வஞ்சினம் உரைக்கின்ற போது, மகட்பாற்காஞ்சி ("ஏந்திழையாள் தருகென்னும் வேந்தனொடு வேறுநின்று" : புறப்பொருள் வெண்பாமாலை : சூ.184) பெருங்காஞ்சி (தாங்குதிறன் மறவர் தத்தம் ஆற்றல், வீங்குபெரும்படையின் வெளிப்படுத்தன்று பு.வெ.மா : சூ 66)

குடைநிலை வஞ்சி, கொற்ற வஞ்சி, மாராயவஞ்சி, பெருவஞ்சி, பெருஞ்சோற்று வஞ்சி, கொற்றவள்ளை, வாகை, தும்பை, நூழிலாட்டு, முன்தேர்க்குரவை போன்ற புறத்துறைகளை எல்லாம் குறிப்பிடுகின்றான். புறத்திணையின் இலக்கணங்கள் எல்லாம், இலக்கியமாவது வஞ்சிக்காண்டத்தில் என்பதால் வஞ்சிக்காண்டம் ஒரு பகாப்பதமே !

பெருங்காப்பியத்தில் மலை, கடல் வருணனைகள் இடம்பெற வேண்டும். கானல்வரியிலும், கடலாடுகாதையிலும் கடல் வருணனை சிறப்பாக அமைந்திருக்கிறது. சோழநாட்டிலே மலைகள் இல்லாமையால் மலை வருணனை இடம்பெற வாய்ப்பு இல்லை. பாண்டிநாட்டிலே மலைகள் உண்டென்றாலும், காப்பியப் போக்கு மலை வருணனைக்கு இடம் தரவில்லை. ஆனால், வஞ்சிக்காண்டத்தின் தொடக்கமே சேரன் செங்குட்டுவன் மலைவளம் காணச் செல்லுவதில் தான் தொடங்குகிறது. செங்குட்டுவன் சென்ற மலைவழிப்பாதை 140 யோசனை தூரம், அழகிய சோலைகள், பூங்காக்கள், ஆற்றுநீர்ப்பரப்பு, ஊற்றுநீர் நிறைந்த குளங்கள், ஆற்றிடைக்குறைகள் நிறைந்தவை. இருபுறமும் கோங்கம், வேங்கை, கொன்றை, சுரபுன்னை, மஞ்சாடி, சந்தனம் ஆகிய மரங்கள் பூக்களைக் கொட்டி மணம் பரப்பின. பேரியாறு பெருவெள்ளத்தோடு ஆர்ப்பரித்தது.

புகார்க் காண்டத்திலும், மதுரைக் காண்டத்திலும் கிடைக்காத மலைவளம் வஞ்சிக்காண்டத்தில் மட்டுந்தான் கிடைக்கிறது. இயற்கையிலேயே சேரநாடு மலைவளம் சூழ்ந்ததாலும், இளங்கோவடிகள் சேரநாட்டைச் சேர்ந்தவர் என்பதாலும், பெருங்காப்பியத்திற்குரிய மலைவளம், வஞ்சிக்காண்டத்தில் வெகு சிறப்பாகப் பேசப்பட்டிருக்கிறது. பெருங்காப்பிய இலக்கணத்தை நன்குணர்ந்தவன் கம்பன் என்பதால், மலைவளம் பாடுவதற்கென்று இரண்டு படலங்களை ஒதுக்கியிருக்கிறாள். (சந்திரசயிலப்படலம், வரைக்காட்சிப்படலம் ஆகியன)

பெருங்காப்பிய இலக்கணங்களுள் மேலும் ஒன்று, புனல்விளையாடல் என்பதாகும். மகாகவி கம்பன் இந்தக் காப்பிய உத்தியை நன்கறிந்தவன் என்பதால், சீதா கல்யாணத்திற்கு அயோத்தியிலிருந்து மிதிலைக்குச் செல்லும் இடைவெளியை நன்கு பயன்படுத்தி, வரைக்காட்சிப்படலம், பூக்கொய் படலம், என்பதோடு 'நீர்விளையாட்டுப் படலத்தையும், சேர்த்து அமைத்துவிட்டான். என்றாலும், புனல்விளையாட்டு, இளங்கோவடிகளுக்குக் கைவந்தது போல் மற்றையோர்க்கு வரவில்லை எனலாம்.

"அஞ்சனப் பூழி அரிதாரத்து இன்னிடியல், சிந்துரச் சுண்ணம் செறியத்தூய்த் தேங்கமழ்ந்து, இந்திரவில்லின் எழில் கொண்டு, இழுமென்று வந்தீங்கு இழியும் மலையருவி ஆடுதுமே ; ஆடுதுமே, தோழி ! ஆடுதுமே தோழி ! ... மஞ்சுசூழ் சோலை மலையருவி ஆடுதுமே ! "எனக் குன்றக்குறவர்கள் பாடிக்கொண்டே அருவி ஆடுவதைப் படித்தால், படிக்கின்ற நமக்கே அருவி ஆடிய இன்பம் வருகிறது. திருக்குற்றாலத்தில் தேனருவி, புலியருவி, ஐந்தருவி, செண்பக அருவி என்று மாறிமாறி அருவி ஆடி அடைகின்ற இன்பத்தைக் குன்றக்குறவர்களும் வஞ்சிக்காண்டத்தில் அன்றைக்கே ஆடி அனுபவித்திருக்கின்றனர்.

சிலப்பதிகாரம் எழுந்ததற்குக் காரணமான மூன்று உறுதிப்பொருள்கள் முற்றாக விளக்கம் பெறுவது, வஞ்சிக்காண்டத்தில் தாம். 'அரைசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று' என்பது 80 விழுக்காடுகள் மதுரைக்காண்டத்தின் மூலம் விளக்கம் பெறுகின்றது. நீதி தவறிய பாண்டியனும் கோப்பெருந்தேவியும் மாண்டதும், மதுரை எரிந்ததும், அறம் கூற்றாகியதின் அடையாளம் எனலாம். ஆனால், அரைசியல் பிழையாதவர்களுக்கு அறம் அரணாக நிற்கும் என்பது வஞ்சிக் காண்டத்தில் தான் விளக்கம் பெறுகிறது.

அரைசியல் பிழை செய்யாது இருப்பது எப்படி என்பதைச் சேரன் செங்குட்டுவன்தான் வஞ்சிக்காண்டத்தில் எடுத்து மொழிகின்றான். ''மழைவளம் கரப்பின் வான்பேர் அச்சம் ; பிழையுயிர் எய்தின் பெரும்பேர் அச்சம் ; குடிபுரவு உண்டும் கொடுங்கோல் அஞ்சிமன்பதைக் காக்கும் நன்குடிப் பிறத்தல், துன்பம் அல்லது தொழுதகவு இல்லெனத் துன்னிய துன்பம் துணிந்து வந்து உரைத்த நன்னூல் புலவற்கு நன்கனம் உரைத்து'' எனச் சீத்தலைச் சாத்தனார்க்கே, செங்குட்டுவன் மூலம் எடுத்துரைக்கின்றார், இளங்கோவடிகள்! கண்ணகி கதையைத் தமக்குச் சொன்ன சீத்தலைச் சாத்தனார்க்கே, பின்னர் மணிமேகலைக் காப்பியத்தை இயற்றப் போகின்ற சாத்தனார்க்கே, ஆட்சிக்கலையின் அருமையினை இளங்கோவடிகள் எடுத்துரைக்கின்றார்.

பாண்டியன் நெடுஞ்செழியன் பிழை உயிர் எய்துவதை எண்ணிப் பார்க்காததாலும், காமவயப்பட்டுக் குடிமக்கள் நலன் கருதாதலாலும் அரசு கேடுற அழிந்தான். ஆனால் சேரன் செங்குட்டவன் தலையில் சுமந்திருக்கின்ற கிரீடம் பொன்முடியன்று ; முள்முடி என்பதை உணர்ந்திருப்பதாலும், ஓர் ஆட்சிக்கு எப்படி எப்படி எல்லாம் கேடுகள் வரும் என்பதை உணர்ந்து சொன்னதாலும், அவன் 'உலக நாயகனாகவே' பாராட்டப்படுகிறான். பத்தினி தெய்வத்தைப் பிரதிஷ்டை செய்கின்ற நேரத்தில், அங்கு வீற்றிருந்த செங்குட்டுவனை இல்லுறை மகளிர், ''வெண்திரி விளக்கம் ஏந்திய மகளிர், உலக மன்னவன் வாழ்க என்று ஏத்திப் பலர் தொழ வந்த மலரவிழ் மாலை' என வாழ்த்துகின்றனர். இது அரசியல் பிழையாமைக்குக் கிடைத்த பரிசு அல்லவா?

அடுத்து, 'உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்' என்பதற்குரிய முழுமை, வஞ்சிக்காண்டத்தில் தான் வெளிப்படுகின்றது. புகார்க் காண்டத்திலும், மதுரைக் காண்டத்திலும் தனிமனிதர்களால் தாம், கண்ணகித் தெய்வமாகப் பார்க்கப்படுகிறாளே தவிர, சமூகத்தால், அரசால் அங்கீகரிக்கப்படவில்லை. புகார்க் காண்டத்தில் – நாடுகாண் காதையில், கண்ணகியைத் 'தேவி' என்கிறார், இளங்கோவடிகள் ! கோவலனைக் 'கணவன்' என்று சொல்லும் அடிகள், கண்ணகியைத் 'தேவி' என்பார் (காவுந்தி ஐயையும், தேவியும் கணவனும்')

மதுரைக் காண்டத்தில், கவுந்தியடிகளே 'கற்புக்கடம் பூண்ட தெய்வம்' என்று கண்ணகியை விளிக்கின்றார். கோவலன் – கண்ணகியை அடைக்கலமாகப் பெற்ற மாதரியும் ஐயையும் கண்ணகியை, 'நப்பின்னை' யாகவே பார்த்தனர். ('தொழுனையாற்றினுள் தூமணி வண்ணனை விழுமம் தீர்த்த விளக்குக் கொல்) அதற்கடுத்துப் பாண்டிய மன்னனின் வாயிற்காப்போன் கண்ணகியின் ஆக்ரோஷ தோற்றத்தைப் பார்த்தவுடன், அவளைத் துஷ்ட நிக்கிரகம் செய்ய வந்த பிடாரியாகவும் காளியாகவும், மகிடாசுரமர்த்தினியாகவும் பார்க்கிறான். துன்பமாலையில், ஊரவர் 'வம்பப் பெருந்தெய்வம் வந்தது' என்கின்றனர். இவ்வாறாகத் தனித்தனி மனிதர்களால் அவள், தெய்வமாகப் பார்க்கப்படுகிறாளே தவிர, சமூகத்தால் பார்க்கப்படவில்லை ; அரசால் அங்கீகரிக்கப்படவில்லை.

கண்ணகி சமூகத்தாலும், அரசாலும் தெய்வமாக அங்கீகரிக்கப்படுவது, வஞ்சிக்காண்டத்தில் தான் ! திருச்செங்குன்றத்தின் மலைமீது கண்ணகியைப் பார்த்த மாத்திரத்திலேயே குன்றக்குறவர்கள் அவளைத் தெய்வமாகப் பார்த்ததோடு மட்டுமன்றி, அவர்களுடைய குலதெய்வமாகவே அங்கீகரிக்கின்றனர் (''இவள் போலும் நம்குலக்கோர் இருந்தெய்வம் இல்லை'' என்றனர்). சேரன் செங்குட்டுவன் கண்ணகியைப் பத்தினிக் கடவுளாகப் படிமம் செய்வதற்கு முன்னரே, குன்றக்குடியினர் அங்கீகரித்துவிட்டனர். அதன் பின்னர் பட்டத்தரசி, 'நம் அகல்நாடு அடைந்த இப்பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்'' என்கிறாள். அடுத்த வஞ்சினம் உரைக்கின்ற சேரன் செங்குட்டுவன், 'கண்ணகி' என்ற பெயரைக் கூட உச்சரிக்காது, ('கடவுள் எழுதவோர் கற்கொண்டு அல்லது') கடவுளாகவே பார்க்கின்றான். தொடர்ந்து செங்குட்டுவன், ''பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டத்து- கடவுள் மங்கலம் செய்க' என ஆரிய மன்னர்களும், குடகநாட்டுக்

கொங்கரும், மாளுவ நாட்டு வேந்தரும், கடல்சூழ் இலங்கைக் கயவாகுவும் அமர்ந்திருந்த அவையிலே அறிவிக்கின்றான். இவ்வாறாகப் பதிகத்தில் சொன்ன 'உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்துவது என்பது, வஞ்சிக்காண்டத்தின் மூலம் தான் நிறைவேறுகிறது.

மூன்றாவதான, 'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்' என்பது முற்றாக முடிவது வஞ்சிக்காண்டத்தில்தான் ! பாண்டியன் இழைத்த குற்றத்திற்காக ஊழ்வினை பாண்டிய மன்னனை மட்டும் தண்டிக்கவில்லை ; அவனுடைய மனைவி கோப்பெருந்தேவியையும் பாதித்தது ; மதுரை மாநகரத்தையே எரித்தது. அது போன்று கோவலனைப் பாதித்த ஊழ்வினை, கோவலனை மட்டும் பாதித்ததோடு அமையாமல், கவுந்தியடிகளையும், மாசாத்துவானையும், மாநாய்கனையும் மாதவியையும் மணிமேகலையும் கூடப் பாதித்தது. அப்பாதிப்புக்கள் வஞ்சிக்காண்டத்தின் வழியாகத் தான் வெளிப்படுகின்றன.

'உருத்துதல்' என்ற சொல் ஆழ்ந்த பொருள் கொண்டதாகும். நம் கண்ணிலே ஒரு கனமான தூசு விழுந்துவிட்டால், அது கண்ணை உருத்திக் கொண்டேயிருக்கும். கண்ணிலேயே சுரக்கின்ற கண்ணீர் அதனை வெளியேற்றப்பார்க்கும் ; அத்தூசு போகாது ; பின்னர் பக்கத்தில் இருக்கும் நண்பனைக்கொண்டு, அவன் வாயாலே நம் கண்ணில் ஊதச் சொல்வோம் ; அப்பொழுதும் அத்தூசு கண்ணை விட்டுப் போகாது; உருத்திக் கொண்டேயிருக்கும். அடுத்து தண்ணீரை விட்டுக் கண்ணை அலம்புவோம் ; அப்போதும் அத்தூசு கண்ணை உருத்திக் கொண்டேதான் இருக்கும் ; நீங்காது. கடைசியாகக் கண் மருத்துவரிடம் செல்வோம். அவர் ஏதோ ஒரு திரவத்தை – ஒரு சொட்டு விடுவார் ; அது இமைகளுக்கு இடையில் பதுங்கிக் கொண்டிருக்கும் தூசை வெளிக்கொண்டு வந்துவிடும். இப்படி மூன்று நான்கு தடவை முயன்றாலும், துன்புருத்திக் கொண்டிருப்பது தான், உருத்தல் !

கோவலனை உருத்து வந்து ஊட்டிய ஊழ்வினை, அவன் தலையோடு அமைதியடையவில்லை. கோவலன் – கண்ணகிக்கு ஏற்பட்ட துயரினைக் கேட்டுக் கவுந்தியடிகள், 'என்னோடு இவர்வினை உருத்ததோ' என்று உண்ணா நோன்பிருந்து, தன்னுயிரை நீத்தார். இதற்குச் சமணத்தில் 'சல்லேகம்' எனப் பெயர். அதன் பின்னர் அவ்வூழ்வினை, மாதரியையும் உருத்தியது. 'அடைக்கலப் பொருளைக் காக்கத் தவறினேன்' எனக் கூறி மாதரியும், மதுரையை எரித்துக் கொண்டிருந்த நெருப்புக்கு உள்ளே புகுந்தாள் ! மகனுக்கு ஏற்பட்ட துன்பத்தினை எண்ணி, தந்தையாகிய மாசாத்துவானும், மாமனாராகிய மாநாய்கனும், துறவறத்தை மேற்கொண்டனர். கோவலனின் தாயும் கண்ணகியின் தாயும் தங்களுடைய உயிர்களைத் தாங்களே போக்கிக் கொண்டனர். மாதவியும் மணிமேகலையும் ஆடவர் உலகத்தின் மேலேயே நம்பிக்கையற்று, துறவறத்தை நாடினர். இப்படித் தொடர்புடையார் அனைவரையும் பாதிப்பதால்தான், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்றார். மாடலனை இளங்கோவடிகளின் (mouth piece) வாய் எனச் சொல்வார்கள். 'அம்மாடலன்' "மாதவி மடந்தை கானற் பாணி கனகவிசயர் தம் முடித்தலை நெரித்தது" எனக் கூறியது புகார்க் காண்டம், வஞ்சிக்காண்டம் வரை துரத்திய ஊழ்வினையைத் தானே !

இளங்கோவடிகள் சொற்களைக் சுட்டுவதில் ஒரு வைர வியாபாரி, வைரங்களில் ஒரு பட்டை எது, இருபட்டை வைரமெது, முப்பட்டை வைரமெது என்பது, வைர வியாபாரிக்குத் தெரிவதுபோல், இளங்கோவடிகளுக்குச் சொற்களின் பரிமாணம் தெரியும். அதனால், புகார்க்காண்டத்திலும் – மதுரைக்காண்டத்திலும் ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்' எனும் சொற்பிரயோகத்தைப் பெரும்பாலும் பயன்படுத்தியதில்லை. (கானல்வரியில் வரும் 'யாழிசை மேல் வைத்துத் தன் ஊழ்வினை வந்து உருத்தது' என்ற ஓரிடத்தைத் தவிர) புகார்க்காண்டத்திலும் – மதுரைக்காண்டத்திலும், நிகழ்வினை அல்லது ப்ராரப்தம் எனும் பொருளில் வரும் 'வினை' என்ற சொல்லைத் தான் பயன்படுத்துவார்.

கோவலன் – கண்ணகியோடு புகாரை விட்டுப் புறப்படுமுன், 'வினை கடைக்கூட்ட வியம் கொண்டான்' என்பார். ஊர்காண் காதையில் கவுந்தியடிகள், 'மறத்துறை நீங்குமின் – வல்வினை ஊட்டும்'

என்பார். பாண்டிய மன்னன் ஆராயாது தீர்ப்பு வழங்கியபோது, 'வினைவிளை காலம் ஆதலின்... தேரானாகி' என்றார். கோவலன் காட்டிக் கொடுக்கப்படுவதற்கு அவனது வினையே காரணம் எனும்போது, 'தீவினை முதிர்வலைச் சென்று பட்டிருந்த' எனப் பேசுவார். கொலைக்களக் காதையின் இறுதியில் 'பண்டை விளைவாகி வந்த வினை' எனக் குறிப்பிடுவார். வழக்குரை காதையின் கண்ணகி தன்னையே 'கடுவினையேன் செய்வதூஉம் காண்' எனத் சுட்டுவாள். அவ்வாறே 'வஞ்சினமாலையில்' கண்ணகி தன்னைக் 'கொடுவினையாட்டியேன்' என அடையாளப்படுத்திக் கொள்வாள். மேலும், கட்டுரைக் காதையில் மதுராபதி தெய்வம், 'உன் கணவற்குத் தீதுற வந்த வினை' எனக் கண்ணகியை நோக்கிச் சொல்லும், வினை முற்பகல் அல்லது முற்பிறப்பில் செய்தது.

ஆனால், வஞ்சிக்காண்டத்தில், 'தொல்வினை அல்லது சஞ்சிதம்' எனும் பொருள்படும் ஊழ்வினை என்ற சொல்லையும், அது பாதிப்பதை 'உருத்தும்' என்று மட்டுமே எனக் குறிப்பிடுவார். குன்றக்குரவையில் கண்ணகி, வல்வினை வந்து <u>உருத்த</u> காலை' எனத் தெரிவிப்பார். நீர்ப்படைக் காதையில் மாடல மறையோன் "ஊடற்காலத்து ஊழ்வினை உருத்தெழ" எனச் செங்குட்டுவனுக்கு அழுத்தம் திருத்தமாக எடுத்துரைப்பான். அவ்வாறே கவுந்தியடிகளுக்கு நேர்ந்ததைச் சொல்லும்போது, 'என்னோடு இவர் வினை <u>உருத்ததோ</u>? என்றுரைப்பான் !

இவ்வாறாகப் பதிகத்தில் இடம்பெறும் 'ஊழ்வினை உருத்து வந்து' எனும் தொடர், வஞ்சிக்காண்டத்தில் தான் தன் சொல்லாற்றலையும் செயலாற்றலையும் அழுத்திப் பிடித்துக் கொண்டு நிற்கிறது.

சிலப்பதிகாரத்தை ஒரு குடிமக்கள் காப்பியமாகப் பார்த்தவர், பன்மொழிப்புலவர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார். அப்படி அது குடிமக்கள் காப்பியமாகப் பார்க்கப்பட்டதற்குக் காரணம், கோவலனும் – கண்ணகியும் மன்னர் குடியில் பிறக்காமல், வணிகர் குடியில் பிறந்தவர்கள் என்பதற்காக மட்டுமன்று : அக்காப்பியத்தின் தொடர்ச்சிக்கும் நோக்கத்திற்கும் குடிமக்கள் காரணமாக அமைந்தார்கள் என்பதனால் ஆகும்.

புகார்க் காண்டத்தை வைத்துச் சிலப்பதிகாரத்தைக் குடிமக்கள் காப்பியம் எனச் சொல்லிவிடமுடியாது. ஏனென்றால், மன்னனால் 'தலைக்கோலி' பட்டம் கொடுத்துக் கௌரவிக்கப்பட்ட ஒரு பெண்ணை – மாதவியை, நகர நம்பியர் திரிந்து கொண்டிருக்கும் ஒரு தெருவில், கூனி கொண்டு வந்து ஏலம் விடுகிறாள். அதனை ஏன் என்று கேட்பதற்கு அங்கு ஒரு குடிமகனும் இல்லை. அதனை அரசனுக்குத் தெரியப்படுத்தவேண்டும் என்ற உணர்வு குடிமகன் ஒருவனுக்கும் இல்லை. மேலும், கீரிப்பிள்ளையைக் கொன்ற காரணத்திற்காக மனைவியைக் கைவிட்டுக் கானகம் போன கணவனைக் கண்டுபிடித்து, அந்த அபலைக்கு வாழ்வு கொடுத்தவன் ஞான நன்னெறிக்கு நல்வரம்பாகிய கோவலன். ஆனால், அந்தக் கோவலன் கண்ணகியைப் பிரிந்து, அதே பூம்புகாரிலே மாதவியோடு வாழ்ந்த காலத்து, கண்ணகியோடு கோவலனைச் சேர்த்து வைக்க, எந்தக் குடிமகனும் முன்வரவில்லையே ! எனவே புகாரில் காண்டத்தை வைத்துச் சிலப்பதிகாரத்தைக் குடிமக்கள் காப்பியம் எனச் சொல்லமுடியாது.

மதுரைக் காண்டத்தை வைத்தும் சிலம்பைக் குடிமக்கள் காப்பியம் எனக் கூற முடியாது. காரணம், கோவலன் எதனால் கொல்லப்பட்டான் என்ற செய்தியறியாமல் நடுத்தெருவிற்கு வந்து, 'பெண்டிரும் உண்டுகொல்? பெண்டிரும் உண்டுகொல்?... சான்றோரும் உண்டுகொல்? சான்றோரும் உண்டுகொல்? என அரற்றுகின்றாள் கண்ணகி. அவளுக்கு ஆறுதல் சொல்லவோ? அரவணைக்கவோ? அந்த வெளியூர்க்காரிக்கு உள்நாட்டில் நடந்ததை எடுத்துச் சொல்லவோ ஒரு குடிமகனும் மதுரையில் முன்வரவில்லையே ! பின் எப்படி மதுரைக் காண்டத்தை வைத்து, அது குடிமக்கள் காப்பியம் எனச் சொல்லமுடியும்?

வஞ்சிக்காண்டத்தை வைத்துத்தான், சிலப்பதிகாரம் ஒரு குடிமக்கள் காப்பியம் எனச்

சொல்லமுடியும். 'திருச்செங்குன்றிலே கண்ணகியைக் கண்டவுடனேயே குன்றக் குறவர்கள் அதனை மன்னனுடைய கவனத்திற்குக் கொண்டு செல்கின்றனர். ''கானவேங்கைக் கீழோர் காரிகை... வானவர் போற்ற வானகம் பெற்றாள், எந்நாட்டாள் கொல்? யார் மகள் கொல்லோ? நின்னாட்டு யாங்கள் நினைப்பினும் அறியேம்' என்று தாங்கள் கண்டதைச் சேரன் செங்குட்டுவனின் திருமுன்பு வைக்கின்றனர். அப்படிச் சொன்னவர்கள், நாகரிக வாழ்க்கை வாழும் நகரத்து மனிதர் அல்லர் ; மலைவாழ் மக்கள் ; பழங்குடியினைர்: அவர்கட்கு நாட்டில் நடந்ததை மன்னனுக்குத் தெரிவிக்கவேண்டும் என்ற கடமையுணர்ச்சி – குடிமையுணர்ச்சி இருந்திருக்கிறது. புகார் நகரத்துக் குடிமக்களைப் போலவோ, மதுரை நகரத்துக் குடிமக்களைப் போலவோ, குன்றக் குறவர்கள் வாளாது சென்றிருப்பார்களேயானால், ஒரு பத்தினி பகவதி ஆகியிருக்க முடியாது.

குன்றக்குறவர்கள் சொன்னதைப் – பாமர மக்கள் சொன்னதை – மற்றொரு குடிமகனாகிய சீத்தலைச் சாத்தனார் – பண்டிதப் பெருமகனாகிய சாத்தனார், முழு வரலாற்றையும் மன்னனுக்கு தொகுத்துரைக்கின்றார். சீத்தலைச் சாத்தனார் எடுத்துரைத்ததால் இளங்கோவடிகள் அதனைக் காப்பியமாக எழுத முடிந்தது. அதனால் கண்ணகிக்கு ஒரு கற்கோட்டம் கிடைத்ததற்கும் – ஒரு சொற்கோட்டம் கிடைத்தற்கும் மூல காரணம், குடிமக்களே ! அந்தக் குடிமக்கள் இடம்பெற்றது வஞ்சிக்காண்டத்தில் மட்டுமே.

இத்தகைய அரும்பெரும் செய்திகளைத் தாங்கிய வஞ்சிக்காண்டத்தை இளங்கோவடிகள் எழுதாமல் போயிருந்தால், கம்பனுக்குப் பிறகு ஓர் ஒட்டக்கூத்தன் வந்து உத்தரகாண்டத்தை எழுத நேர்ந்தது போல், வஞ்சிக்காண்டத்தை வேறொருவர் எழுதவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கும் ! எண்சாண் உடம்பிற்குத் தலை பிரதானம் போல், சிலப்பதிகாரத்திற்கு வஞ்சிக்காண்டமே பிரதானம் எனலாம்.

சிலப்பதிகாரத்தில் இராமாயண மேற்கோள்கள் – சில சிந்தனைகள்

முனைவர் சொ. சேதுபதி

தொட்ட இடந்தோறும் தன் செழுமையும் முழுமையும் வெளிப்படும் வண்ணம் கட்டியுரைத்த, உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள், சிலம்பு. அதன் பாத்திரங்கள் ஒவ்வொன்றும் பண்புநிலை அகலா, வாழ்வியல் நிலையில் இருந்து உயிர்த்தெழுந்த சித்திரங்கள். கதைக்கும் பாத்திரப்பாங்கிற்கும் இடைவெளி சிறிதுமின்றி முன்னடத்திப்போகும் அடிகளின் பெருங்காப்பியம், அவரின் செந்நலமாண்பிற்குக் கட்டியம் கூறும். துறவின் ஒழுக்கத்திற்கு மாசணுகாமலும், வாழ்வியல் உணர்த்தும் பாங்கில் பிசிறு தோன்றாமலும் நாடகப்பாங்கில் கதை நடத்திச் செல்லும் போக்கில் அவர்தம் நுண்மாண் நுழைபுலம் தெற்றென வெளிப்படும் இடங்கள் பலப்பல.• அவற்றுள் இரண்டினைக் சுட்டிச்செல்ல இக்கட்டுரை முயல்கின்றது.

சிலம்பில் இராமாயண மேற்கோள்கள் இரண்டு

வாழ்க்கையில் இன்பம் அனுபவிக்கும்போது முற்றாக அதில் மூழ்கித் திளைக்கிற மனிதமனம், துன்பம் அனுபவிக்கும்போது மிகவும் சஞ்சலப்படுகிறது ; சங்கடப்படுகிறது. அது தனக்கு மட்டுந்தானா? எல்லார்க்கும் பொதுவா என்று எண்ணிப் பார்க்கத் தலைப்படுகிறது. இதற்குமுன் பட்ட துயர்கள், துன்பங்கள் அடுக்கடுக்காக எழுந்து மனதைக் கவ்வத் தொடங்கிவிடுகின்றன. துன்பம் போக்கத் துணையை, துணையாய் அமையும் மனிதர்களின் அன்புரையைப் பெற ஏங்கித் தவிக்கிறது. மாற்றார் துயரம் ஆற்ற முன்வரும் ஒவ்வொருவரும் தாம் பெற்ற துயரங்களைச் சொல்லி ஆற்றிக் கொள்கின்றனர். அல்லது முன்னர் ஒருவர்க்கு நடந்ததாய்ச் சொல்லும் கதைகளை நினைந்து அமைதிகொள்கின்றனர். 'எல்லார்க்கும் இது பொது' என்கிற நிலை, சற்றே மனதை ஆறுதல்கொள வைத்துவிடுகிறது. இன்னொருதுயர் முன்னெழும்பி வரும்வரைக்கும் இத்துயர் அடங்கிக்கிடக்கும்போலும். இத்தகு நிகழ்வுகளை எடுத்துச்சொல்லி விளக்கும் வகையில் பல கதைகள் மக்கள் திரளில் தோன்றி மறைகின்றன. எழுதாக்கிளவியாய் உலவிய பல கதைகள் கட்டுரைகள் இவ்வண்ணமே தமிழில் முகிழ்த்திருக்கின்றன. அவற்றுள் பலவற்றைப் பொருத்தப்பாடு கருதித் தம் காப்பியப்போக்கில் பொதிந்துவைத்துக் காட்டுகிறார் இளங்கோவடிகள். நீள விளக்கியும் உணர்த்தமுடியாப் பல உண்மைகளைப் பலரும் தெரிந்த ஒரு நிகழ்வைச் சொல்லி, 'அதுபோல' எனச் சொல்லிக் காட்டினால் மனம் எளிதில் சித்திரப்படுத்திக் கொள்ளும் நுட்பத்தை நன்கு தெரிந்துகொண்ட அடிகள், இராமாயண நிகழ்வுகள் இரடினைக் காப்பியப்போக்கில் சுட்டிச் செல்கிறார்.

1. மதுரையின் புறஞ்சேரிப்பகுதியில் தங்கியிருந்த கோவலனைச் சந்தித்த, கோசிகமாணி, கோவலனைப் பிரிந்த புகார் நகர் இருந்த நிலையின் தன்மையுரைத்தபோது,

"அரசே தஞ்சம் என்று அருங்கான் அடைந்த
அருந்திறல் பிரிந்த அயோத்தி போலப்
பெரும்பெயர் மூதூர் பெரும்பேது உற்றதும்" (புறஞ்சேரியிறுத்த காதை 62–65) என்கிறான்.

2. ஊர் காண் கதையில் தன்னிடம் மனம் நொந்துபேசும் கோவலனுக்கு ஆறுதல் உரைக்கும் கவுந்தியடிகள்,

"தாதை ஏவலின் மாதுடன் போகிக்
காதலி நீங்கக் கடுந்துயர் உழந்தோன்
வேத முதல்வன் பயந்தோன் என்பது
நீ அறிந்திலையோ, நெடுமொழி யன்றோ?" (ஊர்காண்காதை, 46–49) என்று இராமாயண நிகழ்வைச் சுட்டுகிறார்.

இவ்விரு நிகழ்வுகளும் சொல்ல வருவது பிரிவின் துயரை, ஊரைப்பிரிந்ததும், பெற்றோர் மற்றும் சுற்றத்தாரைப் பிரிந்ததும் ஆகிய இருபிரிவுகள் இதில் சொல்லப்பெற்றாலும் உண்மையில் கோவலன் பிரிந்தது மாதவியை. இதற்கு முன்னர், கண்ணகியைப் பிரிந்து மாதவியோடு வாழந்த காலத்துப் பெரிதும் பேசப்பெறாத பிரிவுத்துயர் இப்போது பேசப்பெறுகிறது.

அருந்திறல் பிரிந்த அயோத்தி போல...

திருமணம் நிகழ்ந்தவுடன் பெற்றோரால் தனிக்குடித்தனம் வைக்கப்பெற்ற குடும்பம் கோவலனுடையது. அவ்வழி நின்று ஒழுகிய கோவலன், மாதவி தொடர்பால் தம் பெற்றோரையும் கண்ணகியையும் சந்திக்கவில்லை. அப்போதெல்லாம் அதுகுறித்துச் சிந்திக்காதவன், கோவலன். யாழிசைமேல் ஊழ்வினை உருத்துவந்தூட்ட, மாதவியைப் பிரிந்த கோவலன், இரவோடிரவாக கண்ணகியோடு நகர்விடுத்துக் கிளம்புகிறான். பிறகு புகாரில் நடந்தது யாதொன்றும் அறியாதவன் கோவலன். இந்த நிலையில் வழியில் அவனைச் சந்தித்த கோசிகமாணி,

"அரசே தஞ்சம் என்று அருங்கான் அடைந்த
அருந்திறல் பிரிந்த அயோத்தி போலப்
பெரும்பெயர் மூதூர் பெரும்பேது உற்றதும்"

என்று கோவலனிடம் குறிப்பிடுகிறான். "எத்துணைச் சிறுதொழிலாயினும் பெருமகன் ஏவிய பணிவிடையைச் செய்தலே அரிய பொருளாதலல்லது பணிவிடையன்றாயின் அரசாட்சி என்றும் எண்மைப் பொருட்டாமென்று கருதி அடைற்கரிய வெங்கானிலே சென்றடைந்த இராமன் நீங்கப்பட்ட அயோத்தியின் கணுள்ளார் செயலற்று மயங்கினாற்போலப் பெரிய புகழினையுடைய புகாரின்கண் உள்ளார் யாவரும். மிகவும் அறிவு மயங்கிய செய்தியும்" என்று அடியார்க்கு நல்லார் இதற்கு உரை பகர்க்கின்றார். (சிலப்பதிகார மூலமும், அடியார்க்கு நல்லாருரையும், ப.343)

இதில் தந்தை மொழிகேட்டுக் கானகம் எய்திய இராமனின் பயணம் சுட்டப்படுகிறது இராமன் அரச குமாரன். ஆனால் கோவலன் வணிகன் மகன். தந்தை ஏவியதாக அன்னை ஏவியது இராமாயணம். யாருடைய ஏவலும் இன்றித் தானே பயணப்படத் தொடங்குகிறான் கோவலன். இரண்டிற்கும் ஒன்றைப் பொதுவாக வைக்கிறது இலக்கியம். அது ஊழ். சுற்றி வளைத்து மற்றதை முந்திக்கொண்டு முன்வந்துநிற்கும் ஊழ். அது சரி. இராமன் பிரிந்ததால் அயோத்தி வருந்தியது பொருத்தம். கோவலன் பிரிந்து கானகம் சென்றதில், தந்தை வருந்தலாம் ; தாய் வருந்தலாம் ; சுற்றத்தார் வருந்தலாம் ; பெரும்பெயர் மூதூர் ஆகிய புகார் நகர் பெரும்பேது உற்றது ஏன்?

இங்குதான் ஏதோ சொல்ல வருகிறார் இளங்கோவடிகள்.

கோவலன் சாதாரணன் அல்லன். குடிமக்கள் காப்பியமான சிலம்பின் கதாநாயகன். தன்னேரிலாத தனிநாயகன். அவனின் பெருமைகளை ஒட்டுமொத்தமாகக் கதையில் சொல்லலாம். நாடகத்தில் சொல்ல இயலாது. இவன் இத்தமைத்தன் என்று கதாசிரியன் சொல்லிக்காட்ட முடியாது. ஆனால் அப்பாத்திரத்தின் தன்மையை, மற்ற பாத்திரங்களின் கூற்றுக்கள் வாயிலாகத்தான் காட்ட முடியும். அப்படிக் காட்ட முயன்ற முயற்சியின் அடையாளம்தான் கோசிகமாணியின் கூற்று.

எவ்வுயிர்க்கும் துன்பம் கருதா நல்லுயிர்க்கோவலன் என்பதை இனிவரும் காதைகள் தெளிவாய் உணர்த்தும். அதற்குப் பொருத்தமுடைத்தாய் இராமனைக் கொண்டு முன்னிறுத்துகிறான் கோசிகமாணி. வணிகன் மகனாயினும் அவன் நாடறிந்தவன். பலராலும் பாராட்டப்பெற்றிருக்கிறவன். பலருக்கும் பயன் நல்கியிருக்கிறவன். அதனால்தான் அவன் பிரிவு பலரையும் வருத்தியிருக்கவேண்டும். தனிப்பட்ட வாழ்வில் அவன் நழுவியிருந்தாலும் பொதுவாழ்வில் அவன் தடுமாறிவிடவில்லை. தனிமனித வாழ்வின் பலவீனம்

பொதுவாழ்வைப் பாதித்துவிடக்கூடாது என்று கருதும் நாணத்தினால்தான் இரவோடிரவாகப் புகார்ப்பதி விட்டுப் புலம்பெயரத் தலைப்படுகிறான் அவன். அது அவனின் நற்பண்பையே காட்டுகிறது.

கோசிகமாணியின் "அறிமுக உரையில் கோவலன் பெற்றோர் அவனைத் தேட முயன்றுள்ளமையும், அவர்கள் பெற்ற வருத்தத்தையும் சுற்றமும் ஊரும் இராமன் பிரிந்த அயோத்திபோல முழுமையாக வருந்தியதையும் தெரிவிப்பதன்மூலம் கோவலன்மீது ஊரார் கொண்டிருந்த பாசமும் பற்றும், பெற்றோர் கொண்டிருந்த அன்பும் தெற்றென விளங்குகின்றன. எனவே, கோவலன் ஊரறிந்தவன் என்பது புலனாகிறது. ஆதலால், அவன் விடியுமுன் மறைந்து சென்றமை அவன் தன் நிலையை நன்கு உணர்ந்துள்ளான் என்பதை வெளிப்படுத்தும். நிச்சயமாகப் பெற்றோரிடம் தன்நிலையை உணர்த்தியிருந்தால் அவர்கள் மேலும் நிதி தந்து பயணத்தைத் தடுத்திருப்பர். சொல்லாமை மரியாதைக்குறைவாலன்று. நாணமே. தன்மானமே. குற்றமுள்ள மனம் பெற்றோர்பால் சொல்லவும் கூசுமளவுக்கு மானம் கொண்டிருந்தது. ஊர் அறிந்திருந்தால் நிச்சயம் பெற்றோருக்குத் தெரிவித்திருக்கும். தேட ஆள் அனுப்பியவர்கள் அவர்களைப் போக விட்டிருப்பார்களா?" (முனைவர் கா. மீனாட்சி சுந்தரம், சிலம்பில் பாத்திரங்களின் பங்கும் பண்பும், பக். 27–28) என்று கேட்கும் பேரறிஞர் கா.மீ. அவர்களின் வினா இங்கு கருதத்தக்கது.

இன்னும் ஒரு படி மேலே போய், அடைக்கலக்காதையில் வருகிற மாடலமறையோன் கூறுகிறான்.

"இம்மைச் செய்தன யான்அறி நல்வினை
உம்மைப் பயன்கொல், ஒருதனி உழந்து, இத்
திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது" என்று.

யான் அறிந்த வரையில், இப்பிறிவியில் நீ செய்தன யாவும் நல்லனவே. ஆனால் மாணிக்கக்கொழுந்தாகிய கண்ணகியுடன் கானகம் வந்து துயர் எய்துவது முற்பிறப்புத் தீவினையோ?" என்று கேட்கிறான் எனில், இந்த இப்பிறப்பினில் யார்க்கும் தீதுபுரியாதவன் கோவலன் என்பது தெளிவாய்ப் புரிகிறது. இத்தோடு முடிந்துவிடவில்லை. இராமாயண மேற்கோள். இன்னும் ஒருமுறை கவுந்தியடிகளின் வாயிலாய் வெளிவருகிறது.

தாதை ஏவலின் மாதுடன் போகி...

"நெறியின்நீங்கியோர் நீர்மையேன் ஆகி
நறுமலர் மேனி நடுங்குதுயர் எய்த
அறியாத் தேயத்து ஆர்இடை உழந்து
சிறுமை உற்றேன், செய்தவத்தீர் யான்"

என்று. கோவலன் வருந்திக் கூறியகோது, கவுந்தியடிகள் ஆறுதலாக அறமுரைக்கிறார். 'தந்தை ஏவல் கேட்டு, சீதையுடன் கானகம் எய்திய இராமன் பெற்ற துயரங்களை நீ அறிந்திலையா? அது நெடுமொழியன்றோ?' என வினவுகிறார்.

"தாதை ஏவலின் மாதுடன் போகிக்
காதலி நீங்கக் கடுந்துயர் உழந்தோன்
வேத முதல்வன் பயந்தோன் என்பது
நீ அறிந் திலையோ, நெடுமொழியன்றோ?"

இத்தொடர்க்குப் பொருள் உரைக்க வந்த அடியார்க்கு நல்லார், "தன் தந்தையேவலானே மனைவியோடும் வனத்திற்போய், அவன் தன்னைப் பிரிதலானே கடிய துன்பத்தை உழந்தவன் வேதத்திற்கு முதல்வனாகிய நான்முகனைப் பயந்தோனென்பதனை உலகமெல்லா மறியவும் நீ அறிந்திலையோ? அஃது உலகில் நடக்கின்ற புராணக் கதையன்றோ வென்றா ரென்க. அறிந்தனையாயின் இரங்காயென்பது கருதி

அறிந்திலையோ வென்றார் நெடுமொழி – புகழுமாம். இதனுள், இராமன் சீதை பொருட்டாக வில்லேற்றல் முதலிய புணர்தற் றுன்பமும் பின்னர் அவள் பிரிதலால் தசரதன் தனக்கு முடிசூடத் தொடங்கிய பொருள் புணர்தற் பொருட்டு வரும் வரும் துன்பமும் பின்னர் அதனைக் கைகேசி விலக்க அப்பொருள் பிரிதலான் வரும் துன்பமும் ஈண்டு வந்தவாறுணர்க இது தேவரிற் சிறந்தோனொருவனைக் காட்டியது'' என்று விளக்குகிறார். (சிலப்பதிகாரமூலமும், அடியார்க்கு நல்லாருரையும், ப.370) எதற்கு ஒரு முறைக்கு இருமுறை இராமவாழ்வைக் கோவலனுக்குச் சுட்டிக்காட்டவேண்டும். இராமனைக் காடேகச் செய்தவள் கைகேயி. பின்னின்று முன்துரத்தியவள் கொடுமனக்கூனி. ஆனால் கோவலனைத் தன் துணையோடு காடேகச் செய்ததற்கு முற்ற முழுக்காரணம் அவனேதான். இப்படியிருக்க, 'தாதை ஏவலின்' என்பது இங்கு சுட்டப்பெறுகின்ற இருமேற்கோள்களிலும் இடம்பெற்றிருப்பதற்கான காரணம் யாது?

சில சிந்தனைகள்

உண்மையிலேயே கோவலனின் தந்தை கோவலனுக்குச் செய்ததுதான் யாது?

"பெருநில முழுதாளும் பெருமகன் தலைவைத்த
ஒரு தனிக் குடிகளோடு உயர்ந்தோங்கு செல்வத்தான்
வருநிதி பிறர்க்கு ஆர்த்து மாசாத்துவான் என்பான்
இருநிதிக்கிழவன்" அவன்.

"போதில்ஆர் திருவினாள் புகழ்உடை வடிவு என்றும்
தீதுஇலா வடமீனின் திறம் இவள் திறம்என்றும்
மாதரார் தொழுதுஏத்தும் வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள்" கண்ணகியைக் கண்டோர் ஏத்தும் வண்ணம் திருமணம் முடித்து,

"மறப்புஅரும் கேண்மையோடு அறப்பரிசாரமும்
விருந்து புறந்தரூஉம் பெரும்தண் வாழ்க்கையும்
வேறுபடு திருவின் வீறுபெறக் காண
உரிமைச் சுற்றமொடு ஒருதனி புணர்க்க" த் தனிக்குடித்தனம் வைத்தான்.

"தனிக்குடும்பமாக, வைப்பதன்நோக்கம் பெருந்தண் வாழ்க்கையை அவர்கள் நடத்துவதையும், பலவகைச் செல்வத்தோடு நடத்தி உணர்வு பெறுதலைக் காணவேண்டியுமே ஆம். ஆகவே, கோவலன் கண்ணகியுடன் அறநெறியாளரை' ஓம்பியும் விருந்தினரைப்பேணியும் குடும்பம் நடத்தியுள்ளான். இவ்வாழ்க்கை சில ஆண்டுகள் நடைபெற்றது. "வேறுபடு திருவின் வீறுபெறல் காணவே" தனிக்குடும்ப ஏற்பாடு. என்பது இளங்கோ கூற்று. அதனால், கோவலன் பலவகைச் செல்வங்களையும் அக்கால நிலையில் ஈட்டுவான் என்பது எதிர்பார்ப்பு. சில ஆண்டுகளே காண்டகு சிறப்புடன் இற்பெருங்கிழமை நடத்த கோவலன் வாய்ப்புத் தந்தான். எவ்வளவு என எண்ணிட்டு, சுட்டிக்காட்டினார் அல்லர் இளங்கோ. 'கழிந்தன' எனப் பன்மைவினை தந்துள்ளமையால் 'யாண்டும்' என்றாலும், யாண்டுகள் என்றே கொள்ளவேண்டும். ஏனெனில், 'சில' என்பதும், 'கழிந்தன' என்பதும் ஓராண்டுக்குமேல் இரண்டு மூன்று ஆண்டுகளாவது இருந்திருந்தால்தான் கூறுவதற்கு ஏற்புடையதாகும். எனவே, கோவலன் கண்ணகியுடன் சில ஆண்டுகள் இல்லறத்தை இனிமையாக நடத்தி மகிழ்ந்துள்ளான் எனத் திட்டவட்டமாய்க் கூறலாம்" (முனைவர் கா. மீனாட்சி சுந்தரம், சிலம்பில் பாத்திரங்களின் பங்கும் பண்பும், பக்.8–9) என்கிறார் பேரறிஞர் கா.மீ.

பின்னர், மாதவி தொடர்பால், இம்முறைமை தடைபட்டது. 'கூடலும் ஊடலும் கோவலற்களித்து' மகிழ்ந்த மாதவியோடு கூடிக் களித்து, மணிமேகலையைப் பெற்று, அவள் பிறந்த விழாவைப் பெருமையுற நடத்தியும் மகிழ்ந்திருக்கிறான் கோவலன். இந்த இடைப்பட்ட நாளில் வரும்பொருளைவிட, செலவிட்ட பொருளே அதிகம்.

இந்த இடத்தில் கண்ணகியை உணர்த்த வேண்டி, மாதவியையும் கோவலனையும் குறைத்து மதிப்பிடும் போக்குப் பலரிடத்தே நேரிடையாகவும், வெளிப்படையாகவும் புலப்படக் காணலாம். அதிலும் பட்டி மண்டபப் பாங்கில் இப்பாத்திரங்களை அணுகுமிடத்துக் கோவலன் பாத்திரம் சிறுமைப்படுத்தப் படுகின்றது. உண்மையில் இளங்கோவடிகளின் பாங்கு அத்தகையதன்று. அவர்தம் படைப்பில் அனைத்துப் பாத்திரங்களும் சிறப்புக்குரியனவே. பெரும்பாலான காப்பியங்களில் இடம்பெறும் எதிர்நிலைப் பாத்திரங்கள் கூடச் சிலம்பில் இல்லை. இந்த நுட்பம் உணர்ந்த பேரறிஞர் கா.மீ. அவர்கள், கோவலன் – மாதவி வாழ்வின் இடைகழி பொழுதுகளில் நிகழ்ந்தவற்றை, பாத்திரத்தன்மை குறைபடாது காப்பியப் போக்கில் கண்ட உண்மைகளைப் பின்வருமாறு நுட்பமாகப் பதிவு செய்கிறார்.

மாதவி, 'மாலை வாரா ராயினும் மாணிழை காண்குவம்' என்று கருதியமையை, கோவலனின் குறை யொழுக்கத்திற்குரிய சான்றாகக்கொள்ள முடியாது என்கிறார் அவர்.

கோவலன், "தன் பொழுதை எத்தொழிலும் செய்யாமல் போக்கினான் எனக் கூறுவதற்கு நூலில் பதிவு ஏதுமில்லை. இன்னதொழில் செய்து வந்தான் என்பதற்கும் பதிவு இல்லை. அவன் தன் குலத்தொழிலை ஊன்றிப் பார்க்காமல் போய்வந்து கொண்டிருக்கக்கூடும் என உய்த்துணரல் தவறாகாது. கோவலன் தன் வீட்டிற்கும் போய் வந்திருக்க வேண்டும். மாதவியின் மகப்பேறு காலம் வரையிலும் மாதவி வீட்டிலேயே தங்கிக்கிடந்தான் எனக் கூறுவது பொதுஅறிவாகுமா? எனவே, மாதவியின் எதிர்பார்ப்புக் கூற்றை வைத்துக் கொண்டு கோவலன் பல கணிகையரிடம் தொடர்புவைத்திருந்தான் என்பதை ஏற்க இயலாது. அவன் தன் வீட்டுக்குப் போய்த் தானே, தன் பொருளை எடுத்துவந்து செலவு செய்திருக்கவேண்டும். எனவே, கோவலன் கண்ணகியை விட்டுவந்த பின்னும் அவன் போய்வந்து கொண்டிருந்தான் என்பது உய்த்துணரத்தக்கது. ஆனால் கண்ணகியுடன் குடும்ப வாழ்க்கை நடத்தவில்லை. வணிக அலுவலகத்திற்குச் சென்று வந்திருக்கவும் கூடும். இவை உய்த்துணர்வுகளே" என்கிறார். (மேலது, பக்.16–17) என்றாலும், தன் வருவாயைப் பெருக்கித் தொழில் வளர்ச்சிக்கான முயற்சிகள் பேணப்படாதலின் அவன் செல்வ வளம் சுருங்கியது என்றே கருத இடம் உண்டு. இந்த நிலையில் தந்தை ஏவல் பிழைத்த குற்றமே அவனைப் பெரிதும் குடைந்திருக்கவேண்டும். இந்தப் பெரும்பழி தீர, உடினடியாகப் பொருள் ஈட்ட வேண்டிய கட்டாயத்தை அவசர அவசியமாக உணர்ந்த அவன்,

"... *யாவும்*
சலம்புணர் கொள்கைச் சலதியோடு ஆடிக்
குலந்தரு வான் பொருள் குன்றம் தொலைந்த
இலம்பாடு நாணுத் தரும் எனக்கு' என்று தன்னை நொந்து கொள்கிறான்.

இந்தக் கணத்தில்தான்

"*நலம்கேழ் முறுவல் நகைமுகம் காட்டிச்*
சிலம்பு உளகொண்ம் எனச்" சேயிழையாகிய கண்ணகி குறிப்பிடுகிறாள்.

இந்த இடத்தை முன்வைத்து, கா.மீ. எழுதுவார் : "இங்கே, 'சலம்புணர் கொள்கைச் சலதியோடு ஆடி' என்பதன் பொருளை ஊன்றி அறியவேண்டும். இத்தொடர், "வஞ்சனை பொருந்திய ஆடல்மகள் மாதவி உடன் ஆடி" எனப் பொருள் தருவதாகப் பலரும் விளக்கி வருகின்றனர். ஆனால், இவ்வாறுதான் அடியார்க்கு நல்லார் விளக்கத்தை ஒட்டிப் பொருள் கொள்ளவேண்டுமா? அப்படிக்கொண்டால், கண்ணகி, மாதவி, கோவலன் ஆகியோர் பண்புகளில் சிக்கல்கள் எழும். அதனால் இவ்வரிகட்கு வேறுபொருள் கொள்ள இடமுண்டே. மணிமேகலைக்குப் பெயர் சூட்டுநாள் பற்றிய நிகழ்ச்சியைக் கூறும்போது கோவலன் மூதாதையரின் வணிக மரக்கலம் கவிழ, மணிமேகலா தெய்வம் வந்துதவியதால், 'மணிமேகலை' என்று பெயரிட்டான் என்ற குறிப்பு வருகிறது. எனவே, கோவலனும், தன் குலத்தொழிலை – வாணிகத்தைத் தொடர்ந்தபொழுது கடலில் மரக்கலம் சுழற்சியில் கவிழ்ந்ததால் கலமும் பொருள்களும் தொலைந்தன எனப்

பொருள் கொள்ளுவதே பொருத்தமானதாகும். சலம் – சுழற்சி. சலதி – கடல், தொலைத்த – இழந்த எனப் பொருள் கொள்ளின் பொருந்தும். இல்லையாயின், 'கண்ணகியிடம் மாதவியைப் பழித்துக் கூறிக் கோவலன் அவளை மகிழ்விப்பதுடன், சிலம்பையும் எளிதில் பெற வழிகண்டான் எனக் கொள்ளின், மாதவியின் பண்பிலும், திண்மை மனம் கொண்ட கண்ணகி மாறா வாழ்க்கையிலும், கோவலன் பாங்கிலும் குற்றம் காணவேண்டி வரும். அவனுடைய ஊழே, இழக்கச் செய்துள்ளது. ஊழ் என இளங்கோ இங்கே பதிவு செய்யவில்லை. ஆயினும், முழுச் செல்வமும், மாதவிக்குத் தந்தே இழந்திருக்கக்கூடும். இச்சில ஆண்டுகளில் எனக் கொள்வது அப்படியே ஏற்கத்தக்கதன்று. ஊழின் சூழ்ச்சியே என்றுதான் கொள்ளவேண்டும்'' என்று பொருத்தமான விளக்கம் நல்குகிறார். தன் தவற்றுக்கு நாணி, முற்றிலும் புதிய வாழ்வுக்கு என்ன செய்யலாம் என்று கருதிய கோவலனுக்கு நகைமுகம் காட்டிய கண்ணகி 'சிலம்புள கொண்ம்' எனக் கூறுமிடத்தும் சில குறைபொருள்களை விரித்து வந்துள்ளது தமிழாய்வு மரபு. இதற்கும் பேரா. கா.மீ. சிறப்பு விளக்கம் அளிக்கிறார். ''கோவலன் மானமுடையவன். நாணமுடையவன். எனவே இல்லாமை அவனை நாணச் செய்தது. ஆகவே, உண்மையில் மனைவியுடன்தான் இலம்பாட்டைக் கூறிக் கலந்து வழி காணவே அவன் கண்ணகியினிடம் கூறுகிறானே தவிர, மாதவியை இழித்துக்கூறி, கண்ணகிக்கு மகிழ்வூட்டி, சிலம்பைப் பெற நடிக்கிறான் எனக் கொள்வது தன் மனம் காணுவதேயன்றி, இளங்கோ மனம் அப்படி எண்ணாது என்பது' கா.மீ. அவர்களின் கருத்து.

அதுபோல், 'இதற்குமுன் கண்ணகியிடம் பலமுறையோ சிலமுறையோ வந்து கோவலன் அவளுடைய அணிகலன்களைப் பெற்றுச் சென்றுள்ளான் என எங்கும் பதிவில்லை' என்கிறார். அத்தோடு மனைவியின் நகைகளைப் பெற்று அவற்றை மட்டுமே செலவு செய்யவேண்டும் என்கிற அளவிற்கு அவன் பெற்றோர் தேடி வைத்திருக்கும் பரம்பரைச் செல்வம் குறைவுடையதல்ல.

தன் பங்கிற்கு உழைத்துச் செல்வம் சேர்க்காமல் அனைத்தும் செவழித்துவிட்டுத் தன் இல்லம் புகுந்த கோவலனுக்கு ஏற்பட்ட வறுமை, இனி இவ்வில்லத்தில் இருந்து முன்னைப்போல் தன்னை நாடி வருவோர்க்குத் தரவும், தொழிலை விரிவு செய்யவும் இயலுமா என்ற வருத்தம் மேலெழுந்த நிலையிலேயே தன்னை நொந்துகொள்கிறான். தந்தை ஏவல் பிழைத்த குற்றவுணர்வு குடைய, நின்றவனுக்கு மனைவி சொல், மந்திரம் போல் தெம்பைத் தருகிறது. 'சிலம்புள கொண்ம்' அவ்வளவுதான் ;

"சேயிழை கேள் ; இச்
சிலம்பு முதல் ஆகச் சென்ற கலனோடு
உலந்த பொருள் ஈட்டுதல் உற்றேன் மலர்ந்த சீர்
மாடமதுரை அகத்துச் சென்று ; எழுக'

என்றான். எழுந்தாள் கண்ணகி. இருவரும் மதுரை நோக்கி ஏகினர். கூடவே வந்தது. 'நீடியவினை'.

இங்கே வெளிப்படையாக அல்ல, மறைமுகமான தூண்டுகோல் ஆகத் தந்தை நிற்கிறார். தந்தைக்கு முன் குற்றம் ஒழிந்த குலமகனாகப் பெரும்பொருளோடு நிற்றல் வேண்டும் என்று கிளம்பியிருக்கிறான் கோவலன். இது சரியா, தவறா என்ற தடுமாற்றத்தினைப் போக்க ஒருமுறைக்கு இருமுறை, இளங்கோவடிகள் தாதை ஏவலின் மாதுடன் கிளம்பிய இராமனை முன்னிறுத்திக் கோவலனுக்கு அறமுரைக்கின்றார்.

வாழப்பொருள் தேடிப் பெற்றோரைப் பிரிந்த கோவலனுக்கு வாழ்க்கைப் பொருள் உணர்த்தக் கவுந்தியடிகள் காட்டும் பாத்திரங்களுள் இராமனும் முன்னிற்கிறான். இராமனைப் பிரிந்த அயோத்திக்குச் சுமந்திரன் போல, கோசிகமாணி, மாதவியின் மடல் ஏந்திக்கொண்டு கோவலன் பெற்றோரைச் சந்திக்கச் செல்கிறான். நடந்தவை நடந்தவையாக இருக்க, இனி நடக்கும் பாதையில் இராமன் சீதையொடு ஏகியது போல், தன் தவறு உணர்ந்து திருந்திய தூயனாய்க் கோவலன் மதுரை நகர் நோக்கி ஏகுகிறான்.

இடையில் தடம் மாறியதாய்த் தடுமாறிய கோவலனுக்கு அறமுணர்த்தவும், தவறாய் அப்பாத்திரம் குறித்துக் கற்போர் பிறழ உணராவண்ணம் தடுத்தாட்கொள்ளவும், நடையில் நின்றுயர் நாயகனாகிய இராமனின் கானகப் பயணத்தை முன்னிறுத்திக் காட்டுகிறார் இளங்கோவடிகள்.

சிலப்பதிகாரம் ஒரு நாடகக் காப்பியம் ஆதலின், பாத்திரங்கள் வாயிலாகவே, பாத்திரப் பண்புகளைச் சுட்டவேண்டிய நிலையில், கதைக்குள் கதையாக இராமாயணக் கதைக்குறிப்பும் இவ்வாறு இடம் பெறலாகிறது. ஆக, மனிதத் துயரங்களுக்கு மாற்றளிக்கவும், அறமுணர்த்தவும் இராமாயணக் குறிப்புகள் கம்பனுக்கு முன்பே தமிழகத்தில் கால்கொண்ட பாங்கைச் சிலம்பும் சுட்டிக் காட்டுவதைப் பார்க்கிறோம்.

துணை நின்ற நூல்கள் :

1. இளங்கோவடிகளருளிச் செய்த சிலப்பதிகாரமூலமும் அரும்பதவுரையும், அடியார்க்கு நல்லாருரையும், டாக்டர் உ.வே.சா. பதிப்பு, டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம், சென்னை, 2008.

2. முனைவர் கா. மீனாட்சிசுந்தரம், சிலம்பில் பாத்திரங்களின் பங்கும் பண்பும், ருக்மணி – இராமநாதன் அறக்கட்டளை, காரைக்குடி – 3. மு.ப. 2007.

3. அ. சீனிவாசன், சிலப்பதிகாரமும் திவ்யப்பிரபந்தமும் ஓர் ஆய்வு. பழனியப்பா பிரதர்ஸ், சென்னை. மு.ப.2002.

கண்ணகி கண்ட குரவைக் கூத்தும் அதன் விளைவுகளும்

முனைவர் மு. பழனியப்பன்

கண்ணகி கணவன் பின் செல்லும் சாதாரணப் பெண்ணாக மதுரைக்குள் நுழைகிறாள். மன்னனை எதிர்த்து வழக்காடும் போர்க்குணம் உடையவளாக ஒரு சில காட்சிகளுக்குப் பிறகு மாற்றம் பெற்றுவிடுகிறாள். இந்த மாற்றத்திற்குக் காரணம் எந்நிகழ்வுகளாக இருக்கமுடியும் என்று எண்ணிப் பார்க்கவேண்டி இருக்கிறது. வேற்றிடத்திலிருந்து மதுரைக்கு வந்துள்ள பெண் கண்ணகி. அவள் கோவலனைப்போல் மதுரையைச் சுற்றிப் பார்க்கவும் இல்லை. ஊரார் நிலை பற்றி அறிந்தவளும் இல்லை. அப்படிப்பட்ட சூழலில் நாடு அறிந்து நகர் அறிந்து, அரண்மனை வாயில் சென்று அவள் நியாயம் கேட்கத் துணிந்த நிலைக்கு ஏதாவதொரு காரணம் இருந்திருக்கவேண்டும் என்பது உறுதி. பேரிலக்கியப் படைப்பாளியான இளங்கோவடிகள் அதற்கான சூழல்களைப் புனைந்தளித்துள்ளார்.

அடைக்கலப்படுத்தப்பட்ட கண்ணகி, கணவனான கோவலன் மதுரை நகர் நோக்கிச் சென்றதும் ஆய்ச்சியர் பெண்களுடன் கலந்து உறவாடுகிறாள். இந்நேரத்தில் பால் உறையாமல் இருத்தல், பசுவின் கண்களில் கண்ணீர் சுரத்தல் போன்ற தீ நிமித்தங்களைக் காண்கிறாள். மாதரி அவள் தன் மகள் ஐயையை அழைத்துக் கொண்டு, அந்நிமித்தங்களின் தீமை பெரிதும் சாராமல் இருக்க ஆய்ச்சியர் பெண்களைக் குரவைக் கூத்து ஆடச் செய்கிறாள். இப்பெண்கள் ஆடும் குரவை ஆட்டத்தைக் கண்ணகி கண்டுகளிக்கிறாள்.

மனமயங்காதே மண்ணின் மாதர்க்கணியாகிய கண்ணகியும்
தான் காண ஆயர்பாடியில் எருமன்றத்து மாயவனுடன்
தம்முன் ஆடிய வாலசரிதை நாடகங்களில் வேல்
நெடுங்கண் பிஞ்ஞையோ டாடிய குரவை ஆடுதும்"

(ஆய்ச்சியர் குரவை 10–13)

என்ற பாடலடிகளில் கண்ணகி இக்குரவைக் கூத்தினைக் கண்டாள் என்று குறிப்பிடுகிறார் இளங்கோவடிகள். ஒரு செயலை நேரடியாகப் பிறருக்கு மொழிதல் என்பது ஏற்படுத்தும் தாக்கத்தைவிட நேரடியாகக் காணுதல் என்னும் நாடகப் பாங்கு பெருத்த விளைவைக் காண்பவர் நெஞ்சில் ஏற்படுத்தும். குரவைக் கூத்து என்னும் காட்சி விளைவால் கண்ணகி ஈர்க்கப்பட்டு அதன்வழி நியாயத்திற்குப் போராடும் குணத்தினைப் பெற்றவளாக இளங்கோவடிகள் கண்ணகியை வடித்துள்ளார்.

கண்ணகி ஒருத்தியே ஆயர் அரங்கில் காண்கிற நோக்கர். அவள் இதுவரை இப்படி ஓர் ஆட்டத்தைக் கண்டதில்லை. பொதுமக்கள் அரங்கில் பொதுமக்கள் ஆடும் இக்கூத்து அவளுக்குப் புதிது. மற்ற பங்கேற்பாளர்களான ஆயர் பெண்கள் இக்கூத்தினைப் பல முறை ஆடியுள்ளனர். கண்டும் உள்ளனர். இவர்களுக்கு ஏற்படாத எழுச்சி கண்ணகியின் மனதில் ஏற்பட்டிருக்கிறது.

அரக்கர்களைக் கண்ணன் அழித்த நிகழ்வுகளைப் பாடலாகவும், ஆடலாகவும் ஆயர் குல மகளிர் குரவை ஆடினர். அநியாயத்தை அழிக்கும் ஒற்றை மனிதனாக இங்குக் கண்ணன் காட்சிப்படுத்தப்படுகிறான்.

1. கன்றினைக் குறுந்தடியாகக் கொண்டு, விளாங்கனியை உதிர்த்த மாயவன்தன் நிகழ்ச்சி
2. பாம்பினைக் கயிறாகக் கொண்டு கடல் கடைந்த மாயவன்தன் நிகழ்ச்சி
3. குருந்த மரமாக நின்ற அரக்கனைக் கொன்ற நிகழ்ச்சி.

போன்ற பல நிகழ்ச்சிகள் இசைநாடகமாகக் கண்ணகியின் கண்களில் படிகின்றன. நியாயத்தின் வலிமையையும், நியாயத்திற்காகப் போராடவேண்டிய சூழலையும் இவை கண்ணகிக்குத் தந்தன.

ஆயர் பெண்களால் அரச மரபினோர் மூவரும் கண்ணாகவே கருதும் ஓர் ஆட்டப்பகுதி இதன் பின்னர் நிகழ்த்தப்படுகிறது. பாண்டியரும் சோழரும் சேரரும் கண்ணனின் சாயலர், மரபினர் என்று குறிப்பிடும் இப்பகுதி கண்ணகி மனதில் கண்ணனைப்போல் தமிழகத்து அரசர்கள் நியாயத்தின் பக்கம் நிற்க வேண்டும் என்ற உண்மையை ஏற்படுத்துகின்றது.

"தேவர்கோன் பூண் ஆரம் பூண்டான் செழும் துவரைக்
கோகுலம் மேய்த்துக் குருந்து ஒசித்தான் என்பரால்"

(ஆய்ச்சியர் குரவை 29)

"மன்னன் வளவன் மதில்புகார் வாழ்வேந்தன்
பொன்அம் திகிரிப் பொருபடையான் என்பரால்

(ஆய்ச்சியர் குரவை 29)

"மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
கல்நவில் தோள் ஓச்சிக் கடல் கடைந்தான் என்பரால்"

(ஆய்ச்சியர் குரவை 31)

என்ற இந்தப் பகுதிகள் நியாயத்தின் காப்பாளர்களாகக் கண்ணனைப் போன்று மூவேந்தர்களும் விளங்கினர் என்பதைச் சுட்டுகின்றன. இதன் காரணமாக மூவேந்தர்களுள் ஒருவர் தவறிழைத்தாலும் அவரின் நெறிபிறழ்வைச் சுட்டிக்காட்டவேண்டிய நிலை கண்ணகியின் உள்மனதில் பதிவாகின்றது.

இதனைத் தொடர்ந்து கண்ணனின் வரலாறு நாடகக் காட்சிகளாக விரிகின்றது.

அமுதம் கடைவதற்காக பாற்கடலைக் கடைந்த உன் கைகள் பெருமை உடையன என்றாலும் யசோதையால் சிறு கயிற்றால் கட்டப்படும் அளவிற்கு அவை சிறியதும் ஆகும்.

உலகினையே உண்ட பெருமை உடைய உன் வாய் வெண்ணையைத் திருடி உண்ணும் எளிமையும் உடையது ஆகும்.

மூவுலகையும் அளந்த உன் திருவடிகள் பாண்டவர்க்காக நியாயம் கேட்டு மண்ணில் தூது சென்ற எளிமையை உடையன.

என்ற கண்ணனின் பெருமையைக் காட்டி அதே நேரத்தில் அவனின் எளிமையை விளக்கும் இந்த பெரியது, சிறியது என்ற ஏற்ற இறக்கம் பெரியதும், சிறியதே எளியதே என்ற எண்ணத்தைக் கண்ணகியின் மனதிற்குள் கொண்டு வந்து சேர்க்கிறது. இதன் காரணமாகவே பெரிய இடத்தில் இருக்கும் மன்னனைச் சிறிய இடத்தில் இருந்துப் புறப்பட்ட கண்ணகி நேருக்கு நேராகச் சந்திக்க முடிகின்றது.

இவ்வாடலினைத் தொடர்ந்து கண்டு கொண்டிருக்கும் கண்ணகி இன்னமும் தன் கண், காது, நாக்கு போன்றவற்றால் மிகப் பெரிய மாற்றத்தை உண்டு செய்ய இயலும் என்ற அறிவைப் பெறுகின்றாள்.

"கேளாத செவி என்ன செவியே,"
"கரியவனைக் காணாத கண் என்ன கண்ணே,"
"நாராயணா என்னா நா என்ன நாவே"

என்ற இந்த அடிகள் கண்களின் காதுகளின் நாக்கின் வலிமையைக் கண்ணகிக்கு எடுத்துரைப்பன. இவ்வகையில் நியாயத்திற்காக போரடுகின்ற மனநிலை, உடல்நிலை போன்றவற்றைக் கண்ணகி இக்குரவையாடல் வழியாக பெறுகின்றாள்.

இதனைத் தொடர்ந்து ஆயர்பாடிக்குக் கோவலனின் இறப்புச் செய்தி வந்து சேருகின்றது. இச்செய்தி கேட்டுக் கண்ணகி கலங்குகின்றாள். நான் அழுது கைம்மை நோன்பு நோற்பேனோ என்ற கதறிய கண்ணகி – சூரியனிடம் நியாயம் கேட்கிறாள்.

"காய்கதிர்ச் செல்வனே கள்வனோ என் கணவன்"

"கள்வனோ அல்லன் கருங்கயல் மாதராய்"

(துன்பமாலை 52–53)

என்ற சூரியனின் உரை கண்ணகிக்குப் போராடத் தூண்டும் முதல் அடி ஆகும். இதிலிருந்து நியாயத்தை நிலைநிறுத்தத் தென்னவன் சபைக்குச் செல்லுகிறாள் கண்ணகி.

இவ்வாறு சிலப்பதிகாரத்தில் நிகழ்த்தப்பெற்ற குரவைக்கூத்தின் நேரடிக் காட்சி விளக்க ஆட்டத்தன்மை கண்ணகியின் மனதிற்குள் தனி மனிதனான தன் கணவனுக்கு இழைக்கப்பெற்ற கொடுமைக்கு எதிராக போராடக் களம் அமைத்துக்கொடுத்துள்ளது. கண்ணகியைப் போராடுபவளாக ஆக்கியதில் இக்குரவைக்கூத்திற்கும், இதனை ஆடிய ஆயர் குலப் பெண்களுக்கும் பங்கு உண்டு. உடனே ஒரு கோபம் வெளிப்படுவதில்லை. பல சூழல்களின் வாயலாகவே அக்கோபம் வெளிப்படுத்தப்படும். இதன் சான்றாகவே கண்ணகியின் செயல் அமைந்துள்ளது. இளங்கோவடிகள் இவ்வாறு கண்ணகியைப் போராடும் பெண்ணாக ஆக்கிக் கொள்ள குரவையாட்டத்தைப் பயன்படுத்திக்கொண்டுள்ளார்.

பொற்கொல்லன்

"மிகப்பெரியது நமக்கெல்லாம் இச்சி லம்பு
வேந்தர்க்குச் சிறுதுரும்பே ஆத லாலே
அகத்தியமாய்த் தேடிடார் எனநி னைப்பான்.
அரசியார் திருவடியின் மங்க லத்தைப்
பகுத்துணராப் பாவியினைத் தேடு தற்குப்
பத்தாயிரம் பேரைப் போவீர் என்று
தகத்தகெனக் குதித்திடுவார் வேந்தர் ; பல்லைத்
தடதடெனக் கடித்திடுவார் எனநி னைப்பான்.

வீட்டையும் வந் தாராயக் கூடும் என்றே
வேலங்காட் டிற்சிலம்பைப் புதைத்து வைத்தான்.
காட்டையும்ஆய் வாரென்று சிலம்பைத் தோண்டிக்
கடிதோடி இடுகாட்டில் புதைத்து வைத்தான்.
நாட்டிலுள்ள எவர்களையும் உளவு காணும்
நாட்டத்தார் எண்றெண்ணி நடுக்கம் கொள்வான்
தோட்டத்து வேலையினில் எட்டிப் பார்ப்பான்
தொலைநோக்கித் தெருக்குறட்டில் நிற்கும் போதில்

அத்தெருவில் ஆயிரம்பேர் நடுவிற்செல்லும்
ஆணழகன் ஒருசிலம்பும் கையு மாக
இத்தெருவில் இதுகொள்வீர் உள்ளீர் கொல்லோ
எழிற்சிலம்போ சிலம்பென்று கூறக்கேட்ட
நத்தைவிழிக் கருங்கையான் ஓடி "ஐயா
நம்அரசி யார்க்கொன்று வேண்டும் ; நீவிர்
வைத்திருக்கும் சிலம்பினுடன் இந்தக் கோவில்
வாயிலிலே நின்றிருப்பீர்" என்று சொன்னான்.

(–பாவேந்தர் பாரதிதாசன், கண்ணகி புரட்சிக் காப்பியம்)

மாதரியின் மாண்பு

செ. நடராஜன்

மதுரை மாநகர் 2011 ஆண்டுகளுக்கு முற்பட்ட அதாவது கி.பி. இரண்டாம் நூற்றாண்டு மதுரை மாநகரின் ஒரு பகுதிக்குச் செல்லுகிறோம். அந்நாளைய காப்பியக் கவிஞரான சேர இளவரசர் இளங்கோவடிகளின் சிலப்பதிகாரக் காப்பியத்தின் வழியாக, மாங்காட்டு மறையவன் கோவலனுக்குக் கூறிக்காட்டிய மூன்று வழிகளில் ஏதோ ஒன்றின் வழியாகக் கீழ்த் திசை வாயில் காணப்புகுந்து, மேல்திசை வாயில் செய்தியோடு திரும்புவோம்.

அந்தப் பகுதி மதுரை மன்னரும் அவர் பின்னோரும் வாழ்ந்த செல்வம் கொழித்த பகுதியல்ல. ஆகாத்து ஓம்பி, ஆப்பயின் அளிக்கும் கொடும்பாடில்லாக் கோவலர் வாழும் ஓர் ஆயர்பாடி. காலையில் தங்களது ஆவினங்களை மேய்ச்சலுக்கு ஓட்டிச் சென்று மாலையில் திரும்ப ஓட்டிக் கொண்டு தங்கள் வீடுகளுக்குத் திரும்பும், அன்றாட வாழ்க்கைக் கோவலர்கள் வாழும் ஓர் அமைதியான இடம்.

> "கோலின் செம்மையும், குடையின் தண்மையும்
> வேலின் கொற்றமும் விளங்கிய கொள்கைப்
> பதிஎழு அறியாப் பண்பு மேம்பட்டப்
> தீதுதீர் மதுரைப் புரத்து
> கோள்வல் உளியமும் கொடும்புற்று அகழா,
> வாள்வரி வேங்கையும் மான்கணம் மறலா,
> அரவும், சூரும், இரை தேர்முதலையும்
> உருமும் சார்ந்தவர்க்கு உறுகண்செய்யா
> செங்கோல் தென்னவர்காக்கும்" நாடாதலின்

அவ்வூர் ஆயர்பாடியில் தனது ஒரே மகள் ஐயையுடன் வாழ்ந்து வருபவள் மாதரி என்னும் இடைக்குல மாது. அந்தக் கோவலர் குலத்துக்கு ஒரு தலைவி போல், வழிகாட்டியாக வாழ்ந்து வருகிறாள். எனவே இயற்கை இடர்ப்பாடுகளுக்கும், எதிர்பாராத இன்னல்களுக்கும் கழுவாயாகவும், காப்பாகவும் கருதப்பட்ட குரவைக் கூத்தை, ஆய்ச்சியர் குரவையை ஆடவைக்கிறாள். இப்படிப்பட்ட பெண்மணி தனது இல்லத்தில் தோன்றிய சில தீக்குறிகளால் அவைகளால் ஏதோ எதிர்பாராத இன்னல்கள் நிகழக்கூடும் என்ற எதிர்பார்ப்பால் எச்சரிக்கையாக ஆய்ச்சியர் குரவையை நிகழ்ச்சி வைக்கிறாள். இந்த மாதரி நம்புவது போல் வேறு சில தீக்குறிகளும் அக்காலத்தில் கடைப்பிடிக்கப்பட்டன. அவைகளுக்கு மதிப்பளிக்காமல் போனதால் நடந்த சில அவலங்களை நமக்கு நினைவுபடுத்தும் முகமாக கோவல கண்ணகியர் வாழ்க்கையின் அவலங்களை உணர வைக்கிறாள் மாதரி.

மாதரி மிகுந்த தெய்வ நம்பிக்கை உள்ளவளாதலால் ஆய்ச்சியர் குரவையில் திருமாலின் திருவிளையாடல்களைப் பாட வைக்கிறாள். மாதரியின் இறை நம்பிக்கை அவளை அவள் வாழிடத்தில் பெருமையடைய வைப்பதோடு அவளே ஒரு தெய்வத்தன்மையுடையவளாக மேம்படுகிறாள்.

> *"அறம்புரி நெஞ்சின் அறவோர் பல்கிய புறஞ்சிறை மூதூர்ப்*
> *பூங்கண் இயக்கிக்குப் பால்மடை கொடுத்துப் 'பண்பின்' பெயர்கிறாள்."*

கோவலனையும், கண்ணகியையும் என்ன செய்வது என்று மறுகிக் கொண்டு இருந்த கவுந்தி

அடிகளிடம், கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போல், மாதரி வந்து சேர்கிறாள். இனம் இனத்தைச் சேரும் என்பது போல தெய்வ வாழ்வு மேற்கொண்ட கவுந்தியடிகளும், தெய்வத்துணை பெற்றுள்ள மாதரியும் எதிர்எதிராகப் பார்த்துக் கொள்கிறார்கள். மாதரியைக் கண்டதும் தனது பாரம் முற்றிலும் இறங்கி விட்டதாகக் கவுந்தி உணர்கிறார்.

"ஆகாத்து ஓம்பி ஆப்பயன் அளிக்கும்
கோவலர் வாழ்க்கை ஓர் கொடும்பாடு இல்லை,
தீதுஇலன், முதுமகள், செவ்வியள், அளியள்,
மாதரி தன்னுடன் மடந்தையை இருத்துதற்கு ஏதம் இன்று"

என எண்ணிளலாகி, கவுந்தி ஓர் முடிவுக்கு வருகிறார். மாதரியின் மாண்புமிக்க தன்மையை நன்கு அறிந்தவராதலால் அவளின் ஆலோசனையையோ அல்லது அவளுடைய ஒப்புதலையோ கேளாமல்,

மாதரி ! கேள், இம்மடந்தை தன் கணவன்
தந்தையைக் கேட்கின், தன் குல வாணர்
அரும் பொருள் பெறுநரின் விருந்து எதிர்கொண்டு,
கருந் தடங் கண்ணியொடு கடி மனைப்படுத்துவர்
உடைப்பெரும் செல்வர் மனைப்புகும் அளவும்
இடைக்குல மடந்தைக்கு அடைக்கலம் தந்தேன்"

என்று உத்தரவு இடுவது போன்ற ஓர் உரிமையில் கூறி, மாதரி மறுக்கமாட்டாள் என்ற அளவுக்கு அவளது பண்பையும், பண்பாட்டையும் நன்கு அறிந்திருந்த துறவித்தாய், கோவலன் கண்ணகியரை மாதரியிடம் அடைக்கலப்படுத்துகிறார்.

"ஆயமும் காவலும் ஆய். இழைதனக்குத்
தாயும் நீயே ஆகித்தாங்கு ஈங்கு" என்றும் கட்டளை இடுகிறார்.

ஆகாத்தோம்பி ஆபயன் அளிக்கும் கோவலர் வாழ்க்கை ஓர் கொடும்பாடில்லை என்று மாதரியின் குலப் பெருமையை முதலில் கூறி, அறம்புரி நெஞ்சின் அறவோர் பல்கிய புறஞ்சீர் மூதூர்ப் பூங்கண் இயக்கிக்குப் பால்மடை கொடுத்துப் "பண்பின்" பெயர்வோள் என்று மாதரியின் பெருமை பின்னர் கூறப்படுகிறது. அடைக்கலம் பெறுபவர், அடைக்கலப் பொருளுக்குத் தகுதியானவராக இருத்தல் வேண்டும்தானே ?

மாதரியைப் பொறுத்தமட்டில் அவள் அடைக்கலம் பெறும் நிகழ்வை இளங்கோவடிகள் மிகச் சிறப்பாக அமைத்துள்ளார். அடைக்கலம் என்ற நிகழ்வுக்கு மூன்று நிலைப்பாடுகள் தேவை. அடைக்கலம் கொடுப்பவர், அடைக்கலப் பொருள், அடைக்கலம் பெறுபவர் ஆகிய மூவரும் இருக்கவேண்டும். மாதரியின் மாண்புக்கு ஏற்றாற்போல் மற்ற இருவரும் மாண்புமிக்க மாதரே.

தெய்வத் திருத்தொண்டையே தன் வாழ்க்கையாக வரித்துக் கொண்ட கவுந்தியடிகள் தான் இங்கு அடைக்கலம் கொடுப்பவர், கற்புக்கூடம் பூண்ட பொற்புடைத் தெய்வமாயும், கொங்கச் செல்வி குடமலையாட்டி தென் தமிழ்ப்பாவை செய்தவக் கொழுந்து, ஒரு மாமணியாய் உலகுக்கு ஓங்கிய திருமாமணியாயும் திகழும் கண்ணகி அடைக்கலப்பொருள். பூங்கண் இயக்கிக்குப் பால்மடை கொடுத்துத் தெய்வத்திருத் தொண்டுக்குச் சொந்தக்காரியான மாதரித்தாய் அடைக்கலம் பெறுபவள். இந்த மூவருமே தெய்வத் திருவினர்கள். மூவருமே மாண்புமிக்க மாதரசிகள்.

மாணிக்கத்தை மட்டமான பொருளில் பதிக்கமாட்டார்கள். நல்ல தரமான, கிளிச்சிரைத் தங்கத்தில் தான் பதிப்பார் சிறந்த பொற்கொல்லர். எனவே தான் கவுந்திக் கொல்லர், கண்ணகியாம் வைரமணியை மாதரி என்ற கிளிச்சிரைப் பொன்னில் பொருத்துகிறார்.

கம்பர் தனது இராமாயணத்தில், வீடணன் அடைக்கலப்படலத்தில் இதே போன்று மூன்று பாத்திரங்களை முன்னிலைப்படுத்திக் காட்சியை அமைக்கிறார். அனுமன், வீடணன், இராமன் ஆகிய மூன்று பேருமே சிறந்த பாத்திரங்கள்தான். மூவரிலும் ஒருவர் மூலத்துக்கெல்லாம் மூலமான ஆதிமூலமான இராமன், அவனே கூட அனுமன் என்ற ஒரு பேரறிவாளனான சொல்லின் செல்வரின் பரிந்துரையின் பேரில்தான் வீடணனை அடைக்கலமாக ஏற்றுக்கொள்கிறான்.

இதே அடிப்படையில்தான் மாதரி கண்ணகியை அடைக்கலமாக ஏற்றுக் கொள்கிறாள். தெய்வத்தாய் கவுந்தியின் பரிந்துரையின் பேரில்தான், தெய்வக் கண்ணகியைத் தாயாகித் தாங்க ஏற்றுக் கொள்கிறாள். இரண்டு தெய்வ மாதர்களுக்கும் மேலான தெய்வத் தாயாக இருந்து அடைக்கலம் பெறுவதால் இராமனுக்கு ஈடான மாண்புடையவளாக உயர்ந்துவிட்டாள் மாதரி.

மாதரியின் மாண்பே மாண்பு !

பாண்டிமாதேவி தோழி

"வெப்புக்கும் மாற்றளித்தேன் ; குளிர்மை காட்டும்
மேலுக்கும் மாற்றளித்தேன் வேந்தே, அன்னை
எய்ப்புக்குத் தீர்வில்லை என்ன என்றேன்
இப்புக்க நோய்மனநோய் என்றன் தோழி
செப்புக்கும் இளநீர்க்கும் கொங்கை ஒக்கும்
சேலுக்கும் வேலுக்கும் கண்கள் ஒக்கும்
உப்புக்கும் துப்புக்கும் இதழ்கள் ஒக்கும்
ஊற்றுக்கும் சாற்றுக்கும் சொற்கள் ஒக்கும்.

என்றுரைத்த என்உடையார் எவள்பால் கண்டார்?
யானிருக்க அவளிடத்தில் இவர்க்கேன் நாட்டம்?
என்றிவ்வா றுரைத்தழுதாள் தேற்றத் தேறாள்
எனைத்தள்ளி அறைக்கதவின் தாழும் இட்டாள்
அன்றில்களில் ஒன்றங்கே ஒன்றிங்கேயா?
ஆருயிரும் பேருடலும் பிரிவதுண்டா
இன்றுதான் காண்கின்றேன் புதுமை என்றே
எழிந்வேந்தர் வேந்தனிடம் தோழி சொன்னாள்.

பாட்டொன்று பாடினேன் அவைக்கண் இன்று !
பாங்கிருந்தார் தம்மிலொரு பாவா ணர்தாம்
கேட்டொன்று நன்றென்று விரைவிற் சென்று
கிளிஒன்று மொழியார்பால் கிளர்த்த லானார்
போட்டொன்று கொன்றாளே என்னை மன்னி !
புல்லொன்று மலையாகச் செய்கின் றாளே.
ஊட்டொன்று கன்றும்தாய் தனைம றக்கும்
உணர்வொன்று பேரின்பம் மறவா தென்றான்.

(-பாவேந்தர் பாரதிதாசன், கண்ணகி புரட்சிக் காப்பியம்)

வழக்குரை காதையும் குற்றவியல் சட்ட இயலும்

பேராசிரியர் நா. சேஷாத்திரி

முன்னுரை

தமிழர் தம் முதல் காப்பியம் சிலப்பதிகாரம். தமிழரைப்பற்றி தமிழர்தம் கலை, சமூகம், சட்டவியல், அரசியல் முதலானவற்றைத் தெளிவாக எடுத்துரைக்கும் ஒப்பற்ற தனித்தன்மை கொண்ட காப்பியம் சிலப்பதிகாரம்.

கி.பி. 2–ஆம் நூற்றாண்டில் உருவான இளங்கோவடிகளின் இணையில்லா இக்காப்பியத்தின் திருப்புமுனையாகவும் திகைப்பு முனையாகவும் விளங்குகிற பகுதி மதுரைக் காண்டத்தில் அமைந்துள்ள வழக்குரை காதை – இதில் கையாளப்படும் குற்றவியல் சட்ட நடைமுறைகளைப் பற்றித் தெளிவுபடுத்துவது இப்போதைய நோக்கம்.

வழக்குரை காதை

கோவலனும் கண்ணகியும் கைப்பொருள் இழந்து வாழ் முதல் வேண்டி மதுரை மாநகர் வந்தனர். கண்ணகி வாழ் முதலாய் வழங்குவதற்குத் தன் சிலம்பைக் கையுறைப் பொருளாய்க் கோவலனுக்குக் கொடுத்தாள். பின்னர் சிலம்பு கழுத்து அணியைக் கழற்ற வைத்ததை அறிந்து களங்கம் நீக்க வழக்குத் தொடுத்து வாதம் புரிந்தாள். இந்தப்பகுதி வழக்குரை காதை. அறிந்தது தான், இதில் குற்றவியல் சட்டம் கையாளப்பட்ட முறையில் பல குறைபாடுகள் வெளிப்படுவதை உணர முடிகிறது.

பாண்டியநாட்டு குற்றவியல் சட்டமும் பன்னாட்டு குற்றவியல் சட்டமும்

பொற்கொல்லன் சொன்ன வார்த்தையைக் கேட்ட நெடுஞ்செழியன் 'கள்வனைக் கொண்டு வா' என்பதற்கும் 'கொன்று வா' என்பதற்கும் பொருள் தெரியாமல் வாயுரை வெளிப்பட்டு இருப்பதை ஏற்க முடியவில்லை. காரணம் குற்றம் இழைத்தவனை விசாரிக்காமல் குற்றத்தை நிறுவாமல் தண்டனை அளிப்பது குற்றவியல் நடைமுறைக்கு ஏற்றதில்லை.

பிறர் பொருளைக் களவு செய்வது குற்றமாயினும் பாண்டிய ஆட்சியில் களவுக்குரிய தண்டனை என்று பார்க்கும்பொழுது சிறைந்ததண்டனை, அநாதம் அல்லது நாடு கடத்தல் இப்படித்தான் இருந்திருக்கிறது. களவோடு உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்குமானால் சிறைச்சேதம் வரை சட்டம் நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

கோவலன் சிலம்பை ஈடாக வைத்துக் கைப்பொருள் ஈட்டவந்தவன். ஒற்றைச் சிலம்போடு வந்தவன். அதை மதிப்பீடு செய்யவல்லவன் அரசுப் பொற்கொல்லன் என்கிறபோது தவறு எவ்விடத்தில் நிகழ்ந்திருக்கமுடியும், எப்படிப் பொற்கொல்லன் அதனை மன்னருக்குச் சித்தரித்தான் என்ற நிலைப்பாட்டில் நமக்குப் பல்வேறு செய்திகள் மனத்திரை ஓவியங்களாய் நிழலாடுகின்றன.

கோவலன் சோழ நாட்டைச் சேர்ந்தவன். அவன் தந்தையோ சோழப் பேரரசில் அரசுப் பிரதிநிதியாக இருக்கிறவன். பெரும் செல்வந்தன். மனைவியோடு மதுரைக்கு வந்திருக்கிறவன் பொருளீட்ட வந்திருக்கிறவன் என்கிறபோது கைது செய்யப்படுகிறவன் காவலர்களால் விசாரிக்கப்படுகிறபோது முதல் தகவல் அறிக்கையில் குற்றவாளியில் முழுப் பின்புல விபரங்களும் தெரிந்திருக்கும் அல்லவா, அப்படியானால் ஒரு நாட்டுக் குடிமகன் வேறுநாட்டில் நுழைகிறபோது ஏற்படுகிற திடீர் செயல் முரண்பாட்டில் உடனடியாக அவரை மரணதண்டனைக்கு உட்படுத்துவது இயலக்கூடிய காரியமா? என்னதான் உழ்வினை செயல்பட்டாலும் சட்டவியல் அணுகுமுறை தடம் புரளலாமா? இன்றைக்கும் அதே அவலம் தொடர்வதைக் கொண்டு இதை ஒப்பிட்டுப் பார்க்கலாம். கேரளக் கடற்கரைப் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர் இருவர் கடற்படை வீரர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட போது கைது செய்தோம் விசாரணை

செய்தோம், பிணையத்தில் விடுவித்தோம், வழக்குப் பதிவு செய்தோம், குற்றம் இழைத்தவரின் நாட்டு அதியர் திருப்பி அனுப்ப முடியாது என்றபோது நீதித்துறையின் மூலம் நெருக்குதல் செய்து வென்றோம். இத்தனைக்கும் மரண தண்டனை விதிக்கக்கூடாது என்கிற உத்தரவாதத்தை அளித்து நாம் வென்றோம். இது இன்றைக்குள்ள நடைமுறை. ஆனால் அறமும் நீதியும் செழித்தோங்கிய மதுரையில் எப்படி நடந்தது அந்தத் தவறு? எனவே தான் கண்ணகி வழக்கு மன்றம் நோக்கி வந்தாள்.

பாண்டிய நாட்டு குற்றவியல் சட்டமும் பன்னாட்டுக் குற்றவியல் சட்டம்

“தேரா மன்னா ! செப்புவது உடையேன்” கண்ணகி பாண்டிய மன்னனை நோக்கி விளிக்கிற வாயுரையைப் பாருங்கள். ஆராயாமல் ஆழ்ந்த தெளிவும் இல்லாத மன்னனே என்று ஒரு பெண்ணால் அரசவையில் எடுத்துரைக்க முடியுமா ! அப்படியானால் அவள் உரைப்பதற்கு என்ன காரணம்? முதலில் குற்றவியல் தன்மை, குற்றவியல் அணுகுமுறை, குற்றவியல் களத்தெளிவு இவை அறியாதவனாய் இருக்கிற அரசன். இரண்டாவதாக குற்றம் இழைத்தவன் என்று சுட்டப்படுகிறவனின் பண்பு, சமூகநிலைப்பாடு, சார்ந்த நாடு இவற்றின் பின்புலத்தின் அடிப்படையிலும் தெளிவைக் கையாளாத தன்மை என்ற அடிப்படையில் வாதத்தை வைக்கிறாள். அதுமட்டு மல்ல. தான் சார்ந்த தாய்நாட்டின் ஆட்சியாளரின் சட்டவியலை எடுத்துரைக்கிறாள். வீதிவிடங்கன் வழக்கு, சிபிச் சக்கரவர்த்தியின் செய்கை இவை இரண்டையும் அவள் குறிப்பிடுகிற போது குற்றம் நிகழ்ந்த இடம், குற்றம் யாரால் இழைக்கப்பட்டது என்கிற தன்மை அச்செயல்பாட்டால் யாருக்குப் பாதிப்பு வந்தது என்கிற தன்மையில் ஆராய்ந்து விசாரணை அதிகாரியாக யார் அமரவேண்டும் என்பதைத் தீர்மானித்து இருக்கவேண்டும். அப்படி இல்லாமல் அரசனே விசாரணை அதிகாரியாக அமர்ந்து தவறு எனச் சுட்டிக் காட்டுகிறாள்.

“மேலும் கள்வனைக் கோறல் குற்றமன்று’ என்ற அரசனின் உரைக்குக் கைப்பற்றிய சிலம்பைக் கொண்டு வாருங்கள் குற்றம் எங்கு நிகழ்ந்தது என்பதை நிரூபிக்கிறேன் என்ற வகையில் உள்ளிடைப் பொருளான மாணிக்கம் பரல் என்று கண்ணகி சொல்ல முத்துடைத்தது என அரசன் சொல்ல ஓங்கி உடைத்தாள் உண்மை வெளிப்பட்டது என்றால் புலன் விசாரணை புழுதி படிந்தாய் அமைந்தது உண்மைதானே ? வினை விளைந்த காலம் என்று ஆசிரியர் உரைத்தாலும் சரியான காலத்தில் சரியான கருவியாக குற்றவியல் சட்டத்தைக் கையாளாத அரசனும் குற்றவாளி, கையாளத் துணை புரியாத அறம் கூறும் அவையினரும் குற்றவாளிகளே, அதுமட்டும் அல்ல பன்னாட்டுக் குடிமகன்களாக உள்ளவரை குற்றவியல் முறையில் கையாளத் தெரியாத அறியாமையும் குற்றத் தன்மைக்கு வாய்ப்பளித்துவிடும் என்ற பல்வேறு நீதித்துறைப் பார்வைக் கீற்றுகளை வெளிப்படுத்தியது கண்ணகி வாதம். எனவே குற்றத்தில் தொடர்புடையவர்களே விசாரணை அதிகாரிகளாய் அமர்வதும் குற்றம் நிகழ்ந்த சூழலை அறியாது குற்றம் இழைத்தவரையும் அடையாளம் காணாது சாட்சி என்கிற அடிப்படையில் கருதுகோளாகக் கொண்டு தீர்ப்பு எழுதுவது குற்றவியல் சட்டத்திற்கு வழுவைச் சேர்க்கும் என்ற தன்மையில் இராமயணத்தில் வாலி வதமும் சிலம்பில் வழக்குரை காதையும் இன்றைய வரையில் பெருத்த அடையாளமாகத் தொடர்கின்றன.

முடிவுரை

இளங்கோவடிகள் சமயப்பொறைமிக்கவர் நடுநிலையாளர் என்றாலும் அவர் வாழ்ந்த காலத்தில் சில வழக்குகள் தவறான தீர்ப்பில் வெளிப்பட்டிருக்கவேண்டும் என்பதை அடையாளப்படுத்தும் முகமாக மதுரைக்காண்டத்தின் முடிவில் வைக்கப்பட்டதில் இருந்து உணர முடிகிறது.

காரணம் குடியேற்றச் சட்டம், குற்றவியல் சட்டம் வணிகச்சட்டம் இப்படி பல்வேறு சட்டங்கள் நாட்டுக்கு நாடு வேறுபட்டாலும் இன்றைக்கு இருப்பதுபோல் தூதரகச் செயல்பாடு, ஆட்சியாளர்களின் பரிவர்த்தனை என்ற பல்வேறு நடைமுறைச் செயல்களால் தீர்வு காணப்பட்டிருக்க முடியும் என்பதை வலியுறுத்துவதாகத்தான் இளங்கோவடிகள் அக்காதையை வைத்திருக்கிறார்.

உயிர் நேயம் உயர் நேயம்

புலவர் ஆ. செகநாதன் எம்.ஏ. எம்.எட்.,

நேயம் ஒன்றே நெஞ்சத்தில் உவகை பூக்க வழிகூட்டும். எவ்வுயிரும் தம் உயிர்போல எண்ணி ஒத்த உரிமை உடையவராக மானுடம் வாழ வேண்டும். பிறிதின் நோய் தன் நோய் போல் போற்றினால் தான் மன்னும் உயிர்கள் தீதின்றி வாழும் என்பன வையத்துள் வாழ்வாங்கு வாழ ஆன்றோர் வகுத்த வழிவகை. மானுட நேயம் இன்று அரிதாகப் போகிக் கொண்டு வருவதைக் கண்டு வாழும் சமுதாயத்துக்கு உயிர் நேயம் கொண்டு வாழ்ந்த வகையைச் சிலப்பதிகாரம் காட்டி வலியுறுத்தும் பாங்கினைக் காணலாம்.

உடுத்துக் கொள்ளாது போர்த்துக் கொள்ளாது என்பதை நன்கு அறிந்து இருந்தும் பேகன் மயிலுக்குப் போர்வை ஈந்தது கொடை மடமல்ல உயிர் நேயம். இதைப்போல்வே அடைக்கலம் காக்கத் தன் ஆருயிர் தந்த சிபிச் சக்கரவர்த்தியும், ஆவுற்ற துன்பத்தைத் தானும் அடைவதே உயிர் நேயம் வழுவாது காக்கும் உன்னத நீதி என்று காட்டிய மனுநீதிச் சோழனும் இளங்கோவடிகள் படைத்த உயிர்நேயம் போற்றிய உயர்படைப்புகள்.

"அடைக்கலம் வௌவுதல் இன்னா" என்ற கோட்பாட்டை மதித்துப் போற்றிய சிபிவேந்தன் பருந்தின் பசி தீர்க்கத் தராசுத் தட்டில் புறாவின் எடைக்கு நிகராக அளவு குன்றா வகையில் தன் தசையை இரத்தம் சொட்டச் சொட்ட அறுத்து அறுத்து வைத்தான். ஆனால் துலாக்கோல் சீர்தூக்கிப் பார்த்து எடை சமம் என்று காட்டவில்ல. ஏன் என்பதை இங்கு நாம் சற்றுச் சிந்திக்கலாம்.

ஒரு தட்டிலே பருந்துக்குத் தேவையான புறாவின் தசை மட்டும் அல்ல புறாவின் உயிரும் இருந்தது. தன் தசையை மன்னவன் எடை அளவு சரியா சரியா எனப் பார்த்துப் பார்த்து அறிந்து அறுத்து வைத்த தட்டில் மன்னனது உடல் மட்டும் இருந்தது. அப்போது பருந்தையும் ஏமாற்றக்கூடாது. புறாவையும் ஏமாற்றக் கூடாது என்று மன்னன் நினைத்தான். உடனே அறுத்து வைப்பதை நிறுத்திக் கொண்டு எடையைச் சமம் ஆக்கவும், பருந்தின் பசியைப் போக்கவும் மறுதட்டில் உடலும் உயிரும் வழங்குவதே நீதி என்று சிபி வேந்தன் தானே தராசுத் தட்டில் ஏறி நின்றாள்.

"*எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்*
புள்ளுறு புன்கண் தீர்த்தோன்" என்று தன் துயர் காணத் தகைசால் பூங்கொடியான கண்ணகி வாக்கினால் இதை இளங்கோவடிகள் போற்றிப் பாராட்டுகின்றார். உயிர் நேயத்தின் ஒப்பற்ற உன்னத உயர்நலம் உயர வாழ நமக்கு வழிகாட்டுகிறார்.

தொடர்ந்து மனுநீதிச் சோழனது வரலாற்றை இளங்கோவடிகள் படைக்கின்றார். ஒரு மைந்தன் தான் தன் குலத்துக்கு உள்ளான் என்பதை உள்ளத்தில் உணர்ந்து இருந்தும் தன் பெயர் காரணப் பெயர்தான் என்பதை உலகிற்கு உணர்த்தி நிலைநாட்ட மனுவேந்தன் மகனைத் தேர்ச்சக்கரத்தில் தானே ஏற்றிக் கொன்று பசுவுக்கு நீதி வழங்கினான். அடிகளின் உயிர் நேயத்தைத் தெய்வச் சேக்கிழார் செஞ்சொற்கவி இன்பம் பொங்க இன்றைய சட்டத்துறை விற்பன்னர்களும் வியப்ப, போற்றிப் பாராட்டிப் புகழத் தனது புராணத்தில் பாடியுள்ள பாங்கு படித்துப் படித்துச் சுவைக்கத்தக்கது.

"வளவ, நின்புதல்வன், மணி, நெடுந்தேரில் ஏறி, அளவில் பல்தானை, சூழ, அரசுலாம் தெருவில், போங்கால், இளைய, ஆன்கன்று, தேர்க்கால் இடைப்புகுந்து, இறந்ததாகத் தளர்வுறும் தாய் வந்து தன் கொம்புகளால் ஆராய்ச்சி மணியை அடித்தது" என்று பொருள்பட அமைச்சர் ஒருவர் நடந்ததைக் கூறினார்.

முதலமைச்சராக விளங்கிய உத்தம சோழப் பல்லவரான சேக்கிழார் அமைச்சரது சொற்பொருளை அதன் உட்பொருளை ஆராய்ந்து ஏதாவது காரணத்தால் ஒரு வழிவகையில் மகனை விடுவிக்க நினைக்கவில்லை. மன்னன் மகன் குற்றமற்றவன் என்று உலகத்துக்குக்காட்ட அமைச்சர் கூறிய பதினொரு காரணங்களையும் புறம் தள்ளினான். இளங்கோவடிகளின் கூற்றுப்படி வாயிற் கடை மணி

நடுநா நடுங்கியது எனக் கேட்டு ஒரு போதும் நடுங்கி அறியாத மனுவின் உள்ளம் நடுங்கியது. கன்றை இழந்த தாய்ப்பசுவின் கண்களில் பொங்கிப் பெருகிய துயரக் கண்ணீர் கண்களில் காணாதபோதும் கேட்ட அளவிலேயே மன்னன் உள்ளதைச் சுட்டது. ஆட்சியும் அதிகாரமும் தப்புவிக்கப் பலவழிகளும்இருந்த நிலையிலும் சித்தத்திலும் ரத்தத்திலும் வாழும் உயிர்நேயம் ஒன்றால் தான் ஆராய்ச்சி மணியின் நா நடுக்கத்துக்கும் பசுவின் கண்ணீருக்கும் உள்ளம் சுட நடுங்கினான். கன்றை இழந்த பசுவின் துயரத்தைத் தானும் அடைந்தான். தருமத்தின் வழி இம்மியும் பிசகாமல் இமைப்பொழுதும் பாசத்துக்கு ஆளாகாமல் தன் மகனது மார்பின் மீது தேர்ச்சக்கரத்தைத் தானே தேர் செலுத்தி ஏற்றி நீதி வழங்கினான். உயிர்நேயம் என்ற வற்றாத கடலுக்கு என்றுமே மங்காத கலங்கரை விளக்கமாக ஒளி வீசுகின்றான்.

புகார்க் காண்டத்தில் நாடுகாண் காதையில் வம்பப் பரத்தையும் வறுமொழியாளனும் கவுந்தியடிகள் முன்னால் கண்ணகியையும் கோவலனையும் இகழ்ந்தார்கள். பொருத்தமற்ற சுடுசொல் புகாத வண்ணம் செவிகள் புதைத்துக் கண்ணகி நடுங்கினாள். சினம் கொண்ட அடிகள் உடனே சாபம் கொடுத்து முள்ளுடைக் காட்டில் அவர்களை முது நரிகளாகக்கினார். ஊழையிடும் நரிகளாக மாறிய இவர்களுக்குச் சாப நீக்கம் தந்து வாழ வழி அருளுங்கள் என்று கோவலனுடன் கண்ணகி வேண்டக்காரணம் பிழை பொறுத்து அருள வேண்டிய பொறுமை மட்டும் அல்ல மானுட நேயமும் அனைத்துயிர்களிடமும் கொண்ட உயர்நேயமும் ஆகும்.

இலக்கியம் என்பது காலக் கண்ணாடியாக அடுத்தது காட்டும் பளிங்காக மட்டும் இருக்காமல் வழிகாட்டும் இருவிழிகளில் மாட்டும் கண் கண்ணாடியாகவும் விளங்கவேண்டும்.

எத்துணையும் பேதம் உறாது எவ்வுயிரும் தம் உயிர்போல் எண்ணி உவப்புடன் வாழவிக்க நமக்குச் சிபி வேந்தனும் மனுவேந்தனும் ஏற்றம்மிகு எடுத்துக்காட்டுகளாக என்றும் திகழ்கின்றார்கள்.

உத்தமி மாதவி

புலவர் மரு. பரமகுரு

சிலம்பின்ஒலி கேட்கிறது ; செவியில்தேன் பாய்கிறது ;
கலந்தழகு மாதவியின் காற்சதங்கை ஒலிக்கிறது !
கலந்தழகு மாதவியின் காற்சதங்கை ஒலிப்பதனால்
சிலம்பினில்நா டகத்தமிழ்தான் சிறந்துமனம் ஈர்க்கிறது !

இளங்கோவின் சிலம்பின்ஒலி இதயத்தை இழுக்கிறது !
களங்கமிலா மாதவியின் கைவிரல்யாழ் இசைக்கிறது !
களங்கமிலா மாதவியின் கைவிரல்யாழ் இசைப்பதனால்
விளங்கும்இசைத் தமிழ்கலந்து மேன்மைநிலை பெறுகிறது !

அரசிளவல் சிலம்பின்ஒலி அழகுதமிழ் கொழிக்கிறது !
திருமகளாம் மாதவிகை திருமுகங்கள் வரைகிறது !
திருமகளாம் மாதவிகை திருமுகங்கள் வரைவதனால்
பெருமிதமாய் இயற்றமிழ்தான் பிறங்கிஒளி விரிகிறது !

முத்தமிழ்க்காப் பியமாக முனிஇளங்கோ மொழிந்தருள
வித்தாகித் திகழ்ந்தவளை, வித்தகியை, மாதவியை,
சித்திரையின் முழுநிலவை, சித்திரமே யானவளை
உத்தமியை, உயர்ந்தவளை உளமகிழ்ந்து போற்றுகிறேன் !

குலமகளின் மேம்பட்ட குணத்த ளாகிக்
குன்றாத கொள்கைவழி நின்றாள் தன்னை
நலமகளை ஈன்றாள்பேர் அறிமு கத்தில்
நயமாகத் தவிர்த்து விட்டார் இளங்கோ அண்ணல் !
விலைமதிக்க முடியாத மாணிக் கக்கல்
சாக்கடைக்குள் விழுந்துவிட்டால் விடுவோ மா, நாம்?
இலகுமொழி மாதவியாம் மாணிக் கத்தை
எடுத்தழுக்கைக் கழுவி, யன்றோ இளங்கோ தந்தார் !

ஆடற்கலை பாடற்கலை அழகுக்கலை மூன்றும்
ஐந்தாம்வய தமைவானதும் ஏழாண்டுப யின்றாள் !
மாடப்புறா வடிவாகிய மலர்ப்பாத ங்களாட
வாள்போல்விழி காதின்அள வோடிச்சுடர் வீச,
பாடுங்குரல் கேட்டுக்குயில் ஓடிப்புறம் ஒளிய,
பண்ணோடியாழ் மிழற்றும்விரல் பவளத்தொளி கால
ஈடற்றவ ளாகக்கலை வாணிக்குநேர் தேர்ந்தாள்
எழில்மாதவி இவ்வாறுபன் னிராண்டுநி றைந்தாள் !

தேசியொடு மார்க்கமெனும் கூத்திரண்டும் தேர்ந்தாள் !
சிறந்தபல வகைக்கூத்தின் திறமனைத்தும் பெற்றாள் !
பேசுபதி னோராடல் மாசறவே கற்றாள் !
பேரரச னுக்கவள்தான் தேர்ந்தகலை காட்ட,
ஆசிரியன் மார்களுடன் அரங்கமதி லேறி
அற்புதக்க லைநடனம் பொற்புறப்பு ரிந்தாள் !
வீசுபுகழ் வேந்து, மகிழ்ந்(து) ஆயிரத்தெண் கழஞ்சு
விரிசுடர்ப்பொன் பசுமாலை வியந்தளித்தான் ! அம்மா !

தலைக்கோலி எனும்பட்டம் தகவறிந்து தந்தான் !
தலைவணங்கிக் கலையணங்கும் உளம்மகிழப் பெற்றாள் !
விலைக்கேற்ற படிதந்து பசும்பொன்மணி மாலை
விருப்புற்று வாங்கிடுவோர் மாதவிம டந்தைச்
சிலைக்கேற்ற படியாவர் என்னுமொரு பாங்கில்
சிறுகூனி கைகொடுத்துத் தெருவில் நிற்கச் செய்தார் !
மலைப்புற்றோர் புறம்நிற்கக் கோவலனாம் நம்பி
மாதவிபால் மனமிழந்து வாங்கினன் அம் மாலை !

மாதவியின் மணமனையுள் புகுந்தான் ; கூனி
வழிகாட்டக் கோவலனும் மதிகெட் டானே !
மாதவள்பால் போதையினால் மயங்கி அந்தோ
வடுநீங்கு சிறப்பின்மனை யகம்ம றந்தான் !
காதலினால் மாதவியும் ஊடல் கூடல்
கலையாடல் புரிந்தவனைக் களிக்கச் செய்தாள் !
ஈதறிந்த செய்தி ! இவள் இவ்வா றாக
யார் பொறுப்பு ? சமுதாய அமைப்புத் தானே !

தான்பிறந்த குலக்கணிகை யாரின் ஏவல்
தருமம்எனக் கருதாதாள், விலைப்பொ ருட்டால்
ஊனிருந்த உடலின்பம் தந்தா ளல்லள் ;
உளமிருந்தோன் விட்டேமற் றொருவன் நாடும்
கூனிருந்த பரத்தைநிலை கொண்டா ளல்லள் ;
குலப்பெண்ணின் நலப்பண்பின் கோயி லானாள் ;
தேனிருந்த காதலினாள் கோவ லன்பால்
சிந்தையெலாம் சொந்தமெனத் தந்து வாழ்ந்தாள் !

விடுதலறி யாவிருப்பம் உடையான் தன்னை
விட்டுவிடின் கெட்டழிந்து போவான் என்று
கெடுதலறி யாமடந்தை வாழ்ந்தாள் என்பேன் ;
கிளைஞரெனக் கொண்டநகர்ப் பரத்த ரோடு
நெடுவீதி திரிவதவன் வழக்க மன்றோ !
நினைத்திளங்கோ வேறிடத்தில் குறித்தா ரன்றோ?
உடைமையெனப் பெண்குலத்தை விலைக்கு வாங்கும்
உரிமையிருக் கும்வரைக்கும் பெருமை ஏது?

பெண்பித்துக் கொண்டிருந்தா னன்றி, வேறோர்
பெரும்பித்து, கோவலனுக் கிருந்த தில்லை !
எண்பித்து நிற்கிறது சிலம்பு ; வாழ்வில்
ஏற்றமிகு செயல்புரிந்த செல்லாச் செல்வன் !
பண்பொத்து மாதவியும் அவனுக் கேற்ற
படியொத்துக் கூடலும்ஊ டலும்அ ளித்தாள்
புண்பற்றுப் போடுதல்போல் அவன்றன் நெஞ்சைப்
புதுப்பித்துப் புதுப்பித்துக் கொண்டே வாழ்ந்தாள் !

மடமகள்இந் திரவிழவில் நடனம் ஆட
மக்களெலாம் அதுகண்டு மகிழ்வு கொண்டார் !
உடனேகோ வலன், ஊடல் கொண்டான் ; அன்னோன்
ஊடலினைத் தீர்க்கவெண்ணி யாழ்தி ருத்திப்

படமாடும் எழிற்சீலைப் பந்தர்க் கீழே
பாங்கொடுவெண் கோட்டுக்கால் அமளி வைகித்
தடங்கண்ணாள் கோவலனைப் பாடச் சொன்னாள் ;
சரிசெய்து கோவலனைத் தன்பால் ஈர்க்க !

யாழ்வாங்கிக் கோவலனும் பாட லானான் ;
அமைவாகக் காவிரியின் கற்பைச் சொன்னான் ;
தாழைமணச் சூழலிலே நெய்தல் நங்கை
தனைமயக்கி விழிவீசிச் சென்றாள் என்றான் !
பீழைமனம் உற்றான் ! இப் பித்தன் என்று
பெரிதும்மகிழ்ந் தாள்போலே யாழை வாங்கித்
தாழ்குழலாள் கானல்வரிப் பாடற் பாணி
தானும்ஒரு குறிப்பினள்போல் தொடங்க லானாள் !

அரும்புப் பற்கள் இதழ்காட்டி,
அமைவாய்ச் சொல்லில் தேன்கூட்டி
நரம்பின் யாழ்கை விரல்மீட்டி
நங்கை உரிமைத் திறங்காட்டி
கரும்பின் சுவைப்பண் இசைகூட்டி
கருத்தில் ஆழ்ந்த துயர்காட்டி
விரும்பா நெஞ்சும் விரும்பிடவே
விரித்தாள் கானல் வரிப்பாட்டு !

"கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற்பென்
றறிந்தேன்" என்ற அவன்சொல்லை
கருங்க யற்கண் விழித்தொல்கி
நடந்த வெல்லாம் வாய்காவாத்
திருந்து செங்கோல் வளையாமை
என்றே திறத்தால் மறுத்தாளே !

பூண்விளங்கும் ஒளிவீசும் மாதவிப்பெண்
புதுப்பாட்டு, பெண்குலத்தின் புரட்சிப் பாட்டு !
வீண்குலமாய்ப் பெண்குலத்தை யாக்கு கின்ற
விதிவகுத்த ஆண்குலத்தை எதிர்த்த பாட்டு !
ஆண்கள்மட்டும் கற்பைவிட்டுத் தவறு செய்தால்
அப்போது பெண்மையும்கற் பழிந்தி டாதோ ?
மாண்புரைப்பீர் ! எனக்கேட்ட பார திக்கு
மறைமுகமாய் அடியெடுத்துக் கொடுத்த பாட்டு !

இம்மா திரிஇசைத்தாள் ஏற்றமிகு பாட்டெனினும்
செம்மை தவறித்தன் சிந்தை சிதற விட்டாள் !
தம்முடைய தண்ணளியும் தாமும்தன் மான்தேரும்
எம்மை நினையாது விட்டாரோ? என்றொருவன்
தம்மை நினைந்ததுபோல் தடம்மாறிப் பாடிவிட்டாள் !
செம்மையிலாக் கோவலன், நெய்தல்நிலச் சேயிழையாள்
வெம்மை தந்தாள்" என்று விரித்தவுரைக் கேற்றதென
அம்மா தவியுரைக்க அவள்நாவில் ஏறியதூழ் !

நெஞ்சையள்ளும் சிலப்பதிகா ரச்செல் வத்தை
நீட்சிபெற, மாட்சிபெறச் செய்த திந்த
விஞ்சுமொழி மாதவியின் கானற் பாட்டே !
மெய்ஞ்ஞானி யாம்இளங்கோ அடிகள் பெம்மான்
கொஞ்சுமெழில் யாழிசையின் மேலே வைத்துக்
கோவலனுக் கூழ்வினைவந் துருத்த தென்பார் !
வஞ்சப்பொய் பலகூட்டும் மாயத் தாளாம்
மாதவியென் றெண்ணிக்கோ வலன்பி ரிந்தான் !

கங்கைநதிக்க கரையினிலே பத்தி னிக்குக்
கல்கொணர்ந்து நீர்ப்படைசெய் திருந்தான் வீரச்
செங்குட்டு வன் ! அவன்முன் மறையோன் தோன்றித்
தேன்மொழிமா தவிமடந்தை கானற் பாணி
இங்குற்ற கனகவிச யர்தாம் கொண்ட
முடித்தலையை நெரித்ததென இசைத்தான் என்றால்
மங்கையவள் மாதவிதன் கானற் பாட்டில்
வடித்தமொழி சிலம்பின்உயிர்த் துடிப்பே யன்றோ !

முன்னெழுத்தே யில்லாமல் பிறந்த நங்கை
மூன்றெழுத்தால் மாதவியென் றொருபேர் கொண்டாள் !
பின்னெழுந்து புறப்பட்டு மனைக்குப் போனாள் ;
பிரிந்தவனை நினைந்துமனம் கரைந்தி ருந்தாள் ;
இன்னிசையாழ் கையேந்தி மதுர கீதம்
இசைத்தாள் ; பின் இசைதவற மயங்கி வீழ்ந்தாள் !
என்னிவள்தன் செய்கை? மனத் திருந்தோன் தன்னை
இழந்ததனால் இசையினையும் இழந்தே விட்டாள் !

ஏழையவள் பிரிந்தவனைக் கூடு தற்கே
இரங்கிஒரு திருமுகத்தை எழுத லானாள் !
தாழைவெண் தோட்டினில்பித் திகைஅ ரும்புத்
தனியாணி, செம்பஞ்சுக் குழம்பில் தோய்த்துப்
பாழான இளவேனில் படுத்தும் பாட்டை
பால்திங்கள் காதலர்க்குக் கூற்ற மாகிச்
சூழும்எரி யாகின்ற கொடும்துன் பத்தைச்
சொல்லித்தேன் மழலைமொழி தீட்டி னாளே !

மழலைமொழித் திருமுகத்தை மாலை வைத்து
வசந்தமாலை எனும்தோழி கையில் தந்து
குழையணிந்த கோவலன்பால் அனுப்பி வைத்தாள்
கூலவா ணிகத்தெருவில் நின்றான் தன்பால்
எழில்வசந்த மாலைதிரு முகத்தை நீட்ட
எரிச்சலுடன் ஆடல்மக ளேஆ கையால்
தொழிலிதுவும் அவளுக்கே பெருமை என்று
சொக்குதமிழ்த் திருமுகத்தை மறுத்து விட்டான் !

வெறுமையுடன் திரும்பிவந்தாள் வசந்த மாலை !
வேறென்ன ? நடந்ததனைச் சொன்னாள் ! மாலை
வருவதில ராயினுமே காலைப் போதில்
வருவார்என் றுரைத்தாள்பின் மறுக லானாள் !

ஒருவரினை ஒருவர்உர சாத வாழ்க்கை
ஒருவருக்கும் தீமையினைத் தருவ தில்லை
உரிமைமகள் கண்ணகியின் உயர்ந்த வாழ்வில்
உரசியதால் மாதவிக்கு நன்மை யில்லை !

கோவலன்கண் ணகியோடன் றிரவே மாடக்
கூடல்நகர் புறப்பட்டுச் சென்ற சேதி
தீவிழுதல் போல்செவியில் விழுந்த தாலே
திருமகள்மா தவிகலங்கித் திகைக்க லானாள் !
மேவியதன் செயல்கருதி வருந்தி ஆவி
மிகக்குலைந்து திருமுகம்மற் றொன்று தீட்டிக்
கோவலன்பால் தருகவெனக் கோசி கன்பால்
கொடுத்தனுப்பிக் கூடாகி வாடி னாளே !

இன்னதிரு முகத்தொளிரும் ஒவ்வோர் சொல்லும்
இமயத்தில் மாதவியை ஏற்றி வைக்கும் !
வன்னமொழி யிற்பொதிந்த கருத்தோ, அன்பு
வாய்க்காலில் ஓடிவரும் அமுத வெள்ளம் !
அன்னமொழித் திருமுகம்கோ வலனும் வாங்கி
அப்படியே தன்பெற்றோர்க் கனுப்பி வைத்தான்
என்னின் அதன் பெருமையினுக் கீடும் உண்டோ?
இந்நிலையில் மாதவியும் குலைந்தாள் நெஞ்சம் !

நல்லகுலப் பிறப்பாட்டி யோடு கூடல்
நகர்சென்றான் எனும்சேதி கிடைத்த தற்பின்
வல்லிடிஆ யிரம்தலையில் வீழ்ந்தாற் போல
மதுரையில்கோ வலன்கொல்லப் பட்டான் என்றும்
சொல்லரிய கனற்கற்புச் சுடர்அக் கூடல்
சுட்டெரிந்து வான்சென்ற தென்றும் கேட்டாள்
கல்லொடிந்தாற் போல்நெஞ்சம் ஒடிந்து வீழ்ந்தாள் !
கண்டவரின் ஏச்சுரையும் கேட்டாள் அம்மா !

ஏச்சுரையும் பேச்சுரையும் கேட்டுக் கேட்டு
எடுத்தபிறப் பிழிவெண்ணி ஏங்கி நின்றாள் !
நீச்சலறி யான்கடலில் விழுந்தாள் போலே
நிலைகலங்கித் தத்தளித்துத் திணறி னாளே !
வாய்ச்சமனித் தப்பிறவி தூய்மை செய்யும்
வழிதேடி அறவணரின் அடிகள் சேர்ந்தாள் !
நாச்சி ! மகள் மேகலையைத் துறவி யாக்கி
நாட்டுக்குத் தொண்டாற்றும் படியே செய்தாள் !

ஆடுமயில் தோகையெலாம் உதிர்ந்த தென்ன
அழகுமகள் மாதவிதன் குழல்க ளைந்து
பேடுமயில் போலானாள் ! இன்ப ஊற்றாய்ப்
பிறங்கியவள் அன்பூற்றாய்ச் சுரந்து வாழ்ந்தாள் !
ஓடுகின்ற பொறிபுலனை அவித்த றத்தின்
ஒருவழியில் செல்கின்ற ஞானம் பெற்றாள் !
நாடுபுகழ்ச் சிலம்பொலித்த இளங்கோ அண்ணல்
நாவொளிரும் பேறுபெற்றாள் ! வாழ்க ! வாழ்க !

ஒற்றைச் சிலம்பு

பேரா. இராம. இராமநாதன்

ஒற்றைச் சிலம்பு நமக்குத் தந்த பெருஞ் செல்வம்தான் தமிழ் மக்கள் உலகளாவிய பெருமைசால் காப்பியமாகிய நெஞ்சை அள்ளும் "சிலப்பதிகாரம்" ஆகும்.

இங்கோவடிகள் தம் காப்பியத்திற்கு ஏன் "சிலப்பதிகாரம்" என்று பெயர் தரவேண்டும். இங்கு சிலம்பின் ஆதிக்கம்தான், பெண்மையின் ஆதிக்கம் தான் இந்த நூலில் நடுவாகச் செயற்படப் போகின்றது என்பதனால்தான்.

கோவலனுக்கும் கண்ணகிக்கும் திருமணம் நடைபெற்று மனையறம்படுத்த காதையில்தான் கண்ணகி கன்னி கழியாதவள் என்பதைக் கோவலன் உணர்ந்து ஈரெட்டாண்டு அகவையான் தன் உணர்வுகளுக்கும், கலையார்வத்திற்கும் ஏற்ற மாதவியை நாடிச் சென்றதை இளங்கோவடிகள் "மாதவி மணமனை புக்கு" என்று குறிப்பிடுகிறாரே தவிர, பரத்தையர் வீடு புக்கான் என்று கூறாமை நோக்கத்தக்கது.

மாதவியின் அழகு, பாடல், ஆடல் இவற்றில் மயங்கித் தன் மனையகத்தையே மறந்தான் என்பார் அடிகள். இங்கு மாதவியின் சிலம்பு பேசப்படுகிறது என்றாலும், இது கதைக்குக் கருவாகவில்லை. மாதவியோடு வாழ்ந்த காலத்தில் தன்னுடைய குன்றமன்ன செல்வம் அனைத்தையும் தொலைத்துவிட்டு மீண்டும் தன் வீட்டுக்கு வருகின்றான்.

தன்னைப் பிரிந்து பல ஆண்டுகள் பரத்தையோடு வாழ்ந்த தன் கணவனைக் கண்ணகி "நலங்கேழ் முறுவல் நகைமுகம் காட்டி" வரவேற்க கோவலன் தன்னுடைய செல்வம் முழுவதும் போன கதையைக்கூறித் தன் "இலம்பாடு நாணத் தரும்" என்று வருந்துகின்றான். உடனே கண்ணகி தன்னுடைய விலை மதிப்பு மிக்க சிலம்புகளை அவனுக்குக் கொடுக்க விரும்பி "சிலம்புள கொண்ம்" என்று, தன்னுடைய எதிர்கால வாழ்க்கைக்கு எமனாக வரும் சிலம்பைத் தர முன் வருகின்றான்.

கண்ணகியை மட்டுமல்லாது பாண்டியனையும், பாண்டிமாதேவியையும், மதுரையையும், கவுந்தியடிகளையும், மாதரியையும், கோவலனின் தாயையும், கண்ணகியின் தாயையும்கூட இறக்க வைப்பதற்குக் காரணமாக அமைந்து விடுவது வேதனைக்குரியதாக உள்ளது. ஒற்றைச் சிலம்பின் ஓலம் நமக்கும் வருத்தத்தையே தருகின்றது.

கண்ணகி தன்னிடமுள்ள சிலம்பைக் கொடுக்காதிருந்தால், ஒருவேளை கோவலன் பொருளீட்ட மதுரைக்கே சென்றிருக்க வாய்ப்பில்லை. வினை விளைக்கும் செயலை யாரால் தடுக்க முடியும்? எனவே ஒற்றைச் சிலம்பு முதலிடம் பெறுவதற்குக் காரணமாக அமைபவள் கண்ணகிதான்.

கண்ணகி கொடுத்தது என்னவோ இரண்டு சிலம்புகள்தான். விற்கவேண்டும் என்றாலும் இரண்டு சிலம்புகளையும் எடுத்துச் செல்வதுதான் இயல்பு. ஆனால் கோவலன் கண்ணகியின் ஒரு சிலம்பை மட்டுமே விற்க வாங்கிச் செல்வதாக அடிகள் குறிப்பிடுகிறார்.

கண்ணகியிடம் ஒரு சிலம்பை மட்டுமே வாங்கிச் செல்வது வியப்பாக உள்ளது. அப்படி விற்கச் செல்பவன் எங்கே சென்று சிலம்பை விற்க வேண்டும். நகைக் கடைக்குச் செல்ல வேண்டும். அவ்வாறு விற்கச் சென்றால், அந்த நகை யாருடையது? விலை மதிப்புமிக்க நகை என்பதால் கோவலன் தான் யார் என்பதையும், சிலம்பு தன் மனைவியுடையது என்ற உண்மையையும் சொல்ல வேண்டிய நிலையைக் கருதி, வழியில் செல்லும் அரசனின் பொற்கொல்லனிடம் தன்னிடம் உள்ள சிலம்பை அவனால் விலைமதிக்க முடியுமா? என்று கேட்கிறான்.

ஒருவருக்கும் தெரியாமல் விற்றுவிடலாம், பொருள்பெற்று மதுரையில் தொழில் தொடங்கலாம் என்ற எண்ணத்தில் கோவலன் முயன்றிருப்பான் என்று தோன்றுகிறது. ஆனால் விதியின் விளையாட்டு வேறு விதமாக அமைந்து விடுகிறது.

மதுரை வீதியில் நூறு பொற்கொல்லர்கள் பின்வர, அரசவைப் பொற்கொல்லன் வருவதைக் கண்ட கோவலன் அவனிடம் சென்று, தான் கொண்டு வந்திருக்கும் சிலம்பை அவனால் விலை மதிக்கமுடியுமா என்று கேட்க, அழகிய வேலைப்பாடுகள் மிகுந்த கண்ணகியின் சிலம்பினைப் பார்த்தவுடன் தான் முன்னரே திருடிய அரச மாதேவியின் சிலம்பினைப் போன்று இருப்பதை அறிந்து, அவனிடம் "இச்சிலம்பு இராசமாதேவிக்குத்தான் உகந்தது, நீ இங்கு இருப்பாயாக! நான் அரசரிடம் சென்று விசாரித்து வருகிறேன்" என்று கூறிவிட்டுக் கோவலனைத் திருடன் என்று குற்றம்சாட்டிக் கொல்லுதற்கும் ஆணை பெற்றுக் கோவலனிடம் வருகின்றான்.

இங்கு நாம் கருத வேண்டிய செய்தி அந்த ஒற்றைச் சிலம்பு. பாண்டிமாதேவியின் சிலம்புகளிலும் தொலைந்து போனது ஒற்றைச் சிலம்பு என்பதைப் பாண்டியன் கூற்றால் அறிய முடிகிறது.

> *"தாழ்பூங்கோதை தன்காற் சிலம்பு கன்றிய கள்வன்*
> *கையதாகில் கொன்றச் சிலம்பு கொணர்க"*

என்று பாண்டியன் கூறுவதில் இரண்டு இடங்களில் "சிலம்பு" என்றே ஒருமையில் கூறுவதை நோக்க வேண்டும். எனவே பாண்டிமாதேவிக்குச் சிலம்பினைச் செய்தவன் அரசவைப் பொற்கொல்லன் என்பதால், தொலைந்துபோன இந்த ஒற்றைச் சிலம்பினை அடையாளம் காணத் தக்கவன் பொற்கொல்லனே என்று பாண்டியன் முடிவு செய்து, திருடியவனைக் கொன்று, அந்தத் தனிச் சிலம்பினைக் கொண்டு வருமாறு பணிக்கின்றான். இங்கு அடிகள் பாண்டியன் கோவலனைத் திருடனா என்று கேட்டு அறியாமல், கொன்று சிலம்பினைக் கொண்டுவருமாறு கூறியதற்கு வழக்கமாகக் கூறும் வினையையே சுட்டுவார்.

"வினைவிளை காலமாதலின் யாவதும் சினையலர் வேம்பன் தேரானாகி" என்று, குற்றம் பாண்டியன் மேல் இல்லை, விதியின் விளையாட்டு என்று கூறுவது அரசனுக்குப் பொருந்துமா? என்று பார்க்கவேண்டும். தொலைந்தது [illegible] கொல்லன் கொண்டு வந்திருக்கும் ஒற்றைச் சிலம்புதான். தாழ்பூங்[illegible]சர்கள் இருந்தும் பாண்டியன் தீர்ப்புப் போல் திருடியவனைக் கொன்று சிலம்பினைக் கொண்டுவரக் கூறினான்.

பொற்கொல்லனால் அடையாளம் காட்டப்பெற்ற திருடனைப் பார்த்த அரசவைக் காவலர் கோவலனைக் கண்டு, கூறியதை நோக்குதல் வேண்டும். இவனைப் பார்த்தால் திருடனைப்போல் தெரியவில்லையே என்ற உண்மையைக் "கொலைப்படு மகனலன்" என்று ஊர்க்காவலில் திறம்படைத்த அரசனின் காவற்காரர்கள் கூறுதலும் ஒப்பாய்விற்குரியது. என்றாலும் கூற்றத் தூதனாம் பொற்கொல்லன் தன் பேச்சு வன்மையால் காவலர்களும் நம்புமாறு பேசிக் கோவலனைக் கொன்று சிலம்பினைக் கொண்டு அரசனிடம் சேர்க்கின்றார்கள்.

கோவலனைப் பேச விடாமல் பொற்கொல்லனின் கூற்றுக்களை நம்புமாறு அடிகள் காப்பியத்தை நடத்திச் செல்லுகின்றார். கோவலன் தன்னைத் திருடன் என்று கூறும் பொற்கொல்லனை மறுக்காமைக்கும், வெட்ட வரும் காவலர்களை தடுக்காமைக்குக் காரணம், அவன் ஒரு நகரத்தார் குடிப்பிறந்தவன் என்பதைக் காரணமாகக் கூறலாம். பொதுவாக இன்றும் நகரத்தார் தங்கள் திருமணத்தில் பெண்ணுக்காகக் கொடுக்கும் எந்தப் பொருளையும் கணவன் விற்க எடுத்துக் கொள்வது கிடையாது. அவை அந்த மகளுடைய குழந்தைகட்கே இன்றும் உரியதாக உள்ளன.

அவ்வாறு கணவன் அந்தப் பொருளைப் பயன்படுத்தினால், அவனைச் சமுதாயம் இழிந்தவனாகவே கருதும் நிலை இன்றும் உள்ளது. அதனால் போலும் கோவலன் "இந்தச் சிலம்பு தன்னுடைய மனைவி உடையது, மற்றொரு சிலம்பு அவளிடத்தில் உள்ளது. நான் இதை விற்றுத் தொழில் செய்ய மதுரைக்கு வந்தேன்" என்று கூறியிருக்கலாம். அதுதான் உண்மையுங்கூட. ஆனால் தன் குலப் பெருமை தன்னால் அழிந்து போவதைவிடத் தான் இறப்பதே மேல் என்று கருதிப் பேசாதவனாய்ப் போயினான். களிற்றினை அடக்கிய மறவன் கோவலன் கள்வன் என்று கூறியவிடத்தும் குலப் பெருமையைக் காக்கும் பொருட்டு உயிரிழப்பது வருத்தந் தரக்கூடியதுதான்.

சிலப்பதிகாரத்துள் சிலம்பு பேசப்படும் இடங்கள் புகார்க் காண்டத்துள் மூன்று இடங்கள். முதலில் பேசப்படுவது, கோவலன் மாதவிபால் பிரிந்தபொழுது கண்ணகி சிலம்பினை அணியவில்லை என்பதை

அடிகள் "அருஞ்செஞ்சீறடி அணி சிலம்பு ஒழிய" என்றும், மாதவியை விட்டு நீங்கிக் கண்ணகியிடம் வந்த காலை, கண்ணகி அவனுடைய வருத்தத்தைப் போக்கச் "சிலம்புள கொண்ம்" என்று இரண்டாவதாகவும், மூன்றாவதாகக் கோவலன் கண்ணகியிடம் இச்சிலம்பை முதலாக வைத்து மதுரையில் பொருளீட்டுவேன் என்று "சேயிழை கேள் சிலம்பு முதலாகச் சென்ற கலனோடு உலந்த பொருள் ஈட்டுதலுற்றேன் மலர்ந்தசீர் மாட மதுரையகத்துச் சென்று" என்று குறிப்பிடப்பெறுகிறது.

மதுரைக் காண்டத்துள்ளும் ஒற்றைச் சிலம்பின் ஆதிக்கம் ஏழு இடங்களில் பேசப்படுகிறது. அரசனின் முறை தவறிய நிலையைச் சுட்டிக் காட்டுமிடத்தும் பாண்டியனிடம் தன் வரலாறு கூறுமிடத்தும் அந்த ஒற்றைச் சிலம்பு பற்றிக் கண்ணகி,

"என்காற் சிலம்பு பகர்தல் வேண்டி நின்பாற்
கொலைக் களப்பட்ட கோவலன் மனைவி"

என்றும், பாண்டியன் மதுரை நாட்டில் கள்வரைக் கொல்லுதல் வெள்வேற்கொற்றம் என்று கூறவும், கண்ணகி தன் காற் சிலம்பு மணியுடை அரியே என்றும், அரசன் தன் தேவியின் சிலம்பு முத்துடை அரியே என்றும் மறுமொழி கூறியவுடன், தன் காவலர்களால் கோவலனிடமிருந்து கவரப்பட்ட சிலம்பினைக் கொண்டு வருமாறு பாண்டியன் கட்டளையிட "தருகெனத் தான் முன் வைப்பக் கண்ணகி அணிமணிக் காற்சிலம்பு உடைப்ப, மன்னவன் வாய்முதல் தெறித்தது மணியே" என்றும், மதுரை தீ உண்ணும் அழற்படு காதையுள் "சிலம்பின் வென்ற சேயிழை நங்கை" என்றும் பல்வேறு துயர நிகழ்வுகளுக்குக் காரணமான ஒற்றைச் சிலம்பு பற்றி மதுரைக்காண்டம் விரிவாகப் பேசுகின்றது.

வஞ்சிக் காண்டத்திலும் ஒற்றைச் சிலம்பின் ஆதிக்கம் உள்ளது. சிலம்பு பற்றிய வரலாற்றைச் சாத்தனார் சேரன் செங்குட்டுவனுக்குக் கூறுமிடத்து

"சிலம்பொடு சென்ற சேயிழை வழக்கும்
செஞ்சிலம்பு எறிந்து தேவி முன்னர்
வஞ்சினம் சாற்றிய மாபெரும் பத்தினி"

என்றும் கண்ணகிக்குக் கோயில் கட்டி வழிபாடு நடத்துமிடத்து, "பொன்னஞ் சிலம்பிற் புனைமே கலைவளைக்கை" என்றும், வஞ்சிமகளிர் வாழ்த்தும்போது, "செஞ்சிலம்பால் வென்றாளைப் பாடுதும் வம்மெல்லாம்" என்றும் சிலப்பதிகார நூலுள் ஒற்றைச் சிலம்பு பேசப்படுகிறது.

ஆனால் கவிஞர் கூற்றாக வருமிடங்களில் ஒற்றைச் சிலம்பினைத் 'தீ வினைச் சிலம்பு' என்று சுட்டப்படுகிறது. சிலம்பு ஓர் அஃறிணைப் பொருள், அது எவ்வாறு தீய வினைகளைச் செய்ய முடியும்? பதிகத்தில் சாத்தனாரிடம் இளங்கோவடிகள் "சூழ்வினைச் சிலம்பு காரணமாக, நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுள்" என்று கூறும் குறிப்பை ஆய்வாளர்கள் அடிகள்தம் எழுத்து இல்லை என்பர்.

ஆயினும் நூலுள் பல இடங்களில் 'தீவினைச் சிலம்பு' என்று சுட்டப்படுவதால், அதனை நன்கு சிந்திக்கவேண்டும். கண்ணகியோ எந்தக் குற்றமும் புரியாதவள், அவள் விரும்பித் தன் கணவன் கோவலனிடம் கொடுக்கின்றாள். 'தீவினைச் சிலம்பு' என்று எப்படிச் சொல்வது?

கண்ணகியும் தன்னுடைய சிலம்பைப் பற்றிக் கூறுமிடங்களில் சிலம்புக்கு வினையுடைச் சிலம்பு அடைமொழியும் கொடுக்கவில்லை. கண்ணகியின் சிலம்பு சித்திரச் சிலம்பு என்றும், அணி சிலம்பு என்றும் கூறப்படுவதைத்தான் நூலில் பல இடங்களில் பார்க்கின்றோம். ஆனால் இறுதியில் காட்சிக் காதையுள் சாத்தனார்தான் தீவினைச் சிலம்பு என்ற தொடரைப் பயன்படுத்துகிறார்.

எனவே சிலம்புக்குத் தரும் அடைமொழியாகிய தீ வினை எந்தச் சிலம்பிற்கு உரியது? நாம் கதைவழி பார்த்த நிலையில் கண்ணகியின் சிலம்பிற்கு இந்த அடைமொழி பொருந்துமா? அப்படியானால் வேறு இரண்டு சிலம்புகளும் சிலப்பதிகாரத்துள் வருகின்றன.

ஒன்று, மாதவியின் சிலம்பு. மற்றொன்று, பாண்டி மாதேவியின் சிலம்பு, வேட்டுவவரியில் கொற்றவைக் கோலம் கொண்ட சாலினியும் சிலம்பு அணிந்த செய்திகள் வருகின்றன. இவை எந்தத் தீவினைக்கும் காரணமாக அமையவில்லை. அப்படியானால், எந்தச் சிலம்பு தீ வினைக்குக் காரணமாயிற்று? அந்த ஒற்றைச் சிலம்புக்கு உரியவர் யார்? சிலம்பே தீயதாக இருக்கலாமா? அணிந்தவரின் தீமைகள் சிலம்பின் வழி பயனைத் தருமா என்பன போன்ற வினாக்கள் எழுகின்றன. சிலம்பு ஓர் அஃறிணைப் பொருள். அது எவ்வாறு தீவினைகளுக்குக் காரணமாய் அமையும்?

சிலப்பதிகாரக் காப்பியத்துள் சிலம்பு என்று மட்டுமே பலருடைய அணிகலனாகவே சொல்லப்படும் சிலம்பினைத் தீவினைச் சிலம்பு என்று சாத்தனார் மட்டும் ஏன் சுட்டுகின்றார்? என்பன போன்ற ஐயங்கள் எழுகின்றன.

சிலப்பதிகாரக் காப்பியத்தில் பல இடங்களில் சிலம்பு பேசப்படுவது இயல்பாக உள்ளது. எல்லா இடங்களிலும் இரண்டு சிலம்புகளாகத்தான் சொல்லப்படும் நிலை உள்ளது. கண்ணால் பார்த்தான் என்றால் கண்களால் பார்த்தான் என்பதுதான் பொருள். அதுபோலவே சிலம்பு என்றாலே அது இரண்டு சிலம்புகளையே குறிக்கும். இங்கு ஒற்றைச்சிலம்பு என்று பிரித்துக் கூறப்படுவது புதுமையாக உள்ளது.

நூலில் முதன் முதலாகக் கோவலன் கண்ணகியிடம், புறஞ்சேரியில் மாதரியின் வீட்டில் கண்ணகி சமைத்த உணவை உண்ட பிறகு, "மதுரைக்குப் போய் ஒற்றைச் சிலம்பை விற்று மாறி வருவேன், மயங்காதிரு" என்று கூறுவதுதான் தனிச் சிலம்பினைப் பற்றிய முதற் செய்தியாகும்.

பொதுவாகச் சிலம்பை விற்க வேண்டும் என்றாலும், வாங்க வேண்டும் என்றாலும் இரண்டு சிலம்புகளைத்தான் விற்பர், வாங்குவர். ஆனால் கோவலன் ஏன் ஒரு சிலம்பை மட்டும் விற்க முயன்றான் என்பதும், விலை இடுதற்குச்சிலம்பைப் பார்த்த பொற்கொல்லன், மற்றொரு சிலம்பைக் கேட்காதிருந்ததும் வியப்பைத் தருகிறது.

ஒற்றைச் சிலம்பு தொலைந்து போனதாகக் குறிப்பு ஏதும் காணாத நிலையில், பாண்டிய மன்னனின் தேவி எந்த வருத்தமும் தெரிவிக்கவில்லை. என்றாலும் சிலம்பினைத் திருடிய கள்வனும், கூற்றத் தூதனுமாகிய பொற்கொல்லன், கோவலன் கொண்டுவந்த ஒற்றைச் சிலம்பினைக் கொண்டு தன் திருட்டை மறைத்துத் தப்பிக்க எண்ணுகின்றான்.

ஒற்றைச் சிலம்பு பிரிக்கப்பட்ட பொழுதே காப்பியத்தில் ஒரு நெருடல் தோன்றி விடுகிறது. என்னதான் விலை உயர்ந்த பொருள் சிலம்பு என்றாலும் இரண்டு சிலம்புகளைத்தான் விலைபேச முடியும் என்பது நடைமுறை. ஆனால் அடிகள் காப்பியத்தில் நடுவாக நின்று விதிக்குத் துணை போவதற்கென்று ஒற்றைச் சிலம்பினைக் கொண்டு கதையை நடத்துவது வெளிப்படை.

காப்பியத்தில் ஒற்றைச் சிலம்பாகப் பேசப்படுவன இருவருடைய சிலம்புகளே.

ஒன்று, காப்பியத் தலைவி கண்ணகியினுடையது. மற்றொன்று, பாண்டிமாதேவியின் காணாமற்போன சிலம்பாகும். இவை தம்முள் தீவினைச் சிலம்பாய்க் குறிக்கத்தக்கது எது? தொடக்கம் முதல் கண்ணகியினால் கோவலனிடம் தரப்பட்ட சிலம்புகளே, கதை நடத்துதற்கு உறுதுணையாகப் புகார்க் காண்டத்திலிரந்து வஞ்சிக்காண்டம் வரை வருகிறது.

பொற்கொல்லன் திருடியதாகக் கூறப்படும் சிலம்பு காப்பிய ஓட்டத்தில் காணாமலே போய் விடுகிறது. அப்படியானால், நமக்குக் கண்ணுக்குத் தெரிய எஞ்சி இருப்பது கண்ணகியினுடைய மாணிக்கப் பரல் நிறைந்த, அவளால் அரசன்முன் உடைக்கப்பெற்ற சிலம்பே தீய விளைவுகளுக்குக் காரணமாய அமைந்து விடுகிறது என்பதே சிலப்பதிகாரக் காப்பியம் காட்டும் ஒற்றைச் சிலம்பின் உண்மை நிலையாகும்.

(நன்றி : ஓம் சக்தி – மார்ச் 2013)

வேந்தனை எதிர்த்து வீரப் புரட்சி !

பேரா. ந. சஞ்சீவி

'நல்லறம் நாடிய மன்னரை நயந்து மகிழ்ந்து போற்றுவாள் எங்கள் தாய் ; அவர் அல்லவராயின், கொன்று விழுங்கிப் பின் ஆனந்தக் கூத்திடுவாள் எங்கள் தாய்,' என்று அன்னை பராசக்தியின் – பாரத சக்தியின் – பெருமையைப் பாடினார் அரசிய வெறிகொண்ட ஆவேசக் கவிஞர் பாரதியார் ஆம்! பின்னாளில் இரத்தினச் சுருக்கமாக அவர் பாடிய இப்பாட்டு, சிலப்பதிகார மதுரைக் காண்டத்தை அவர் ஊன்றிக் கற்றதால் கனிந்த கவிதையோ என்று நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.

துன்பமாலை தொடங்கி அழற்படுகாதை ஈறாக அமைந்துள்ள ஐந்து காதைகளிலும் சிலப்பதிகார நாடகத்தின் உச்ச நிலையைக் காண்கிறோம் ; காவியத்தின் உயிர் நிலைப்பகுதியைப் பார்க்கிறோம் ; கண்ணகியின் கற்பின் பெருமை, 'மன்னும் இமயமலை போல' ஓங்க உயர்ந்து நிற்கும் நிலையைக் காண்கிறோம் ; சமுதாயக் கடலில் புரட்சி அலைகள் விண்முட்ட எழுந்து வீசும் நிலையை அறிகிறோம்.

ஆய்ச்சியர் குரவை முடிந்தது. திருமாலையும் திருவுடை மன்னனையும் தங்கள் இல்லத்தில் நேர்ந்த தீச்சகுனங்கள் கண்டு கலங்கிய இடைக்குல மகளிர் ஆடிப்பாடி வாழ்த்தி வணங்கிய காட்சியும் முடிந்தது.

இவ்வாறு குரவை முடிந்ததும் வையையில் நீராடி நெடுமாலை வழிபடச் சென்றாள் மாதரி. அப்போது நகரத்தின் உட்பகுதியினின்றும் காட்டுத் தீப்போலப் பரவி வரும் கொடிய செய்தியை – கோவலன் கொலையுண்ட தீச்செய்தியை – கேள்வியுற்று இடிபொடில கேட்ட மயில்போல உடைந்த மனமுடையவளாய் ஒருத்தி வந்து கண்ணகி முன்னே கற்சிலை போல நின்றாள். சொல்லாடாளாய் – ஒளி இழந்த ஓவியமாய் – நின்ற அவளைக் கண்ட கண்ணகியின் நெஞ்சம் பதைக்கலாயிற்று. அவள் உள் மனத்தில் முடங்கிக் கிடந்த எண்ணங்கள் கடல் அலைகள் போலக் குமுறிக் கொண்டு வெளிவரலாயின.

'காதலரைக் காண்கிலேன் ! என் உள்ளம் கலங்கி மிகவும் வருந்துகிறது ! ஊதுலையும் தோற்கும்படி உயிர்க்கிறது என் நெஞ்சம் ! தோழி, அயலார் கூறிய மொழியாதோ? நடுப்பகலிலேயே என் நெஞ்சம் மிக நடுங்கியது ! அன்பவரைக் காணாது அயர்வுறுகிறது என் உள்ளம் ! இந்நிலையில் மன்பதை சொன்னது யாதோ? நாயகரை கண்டிலேன் ! இனி எனக்கோர் அடைக்கலமும் உண்டோ? ஏதோ வஞ்சம் நடந்துவிட்டது. எனவே, ஏனையோர் சொன்ன சொற்கள் யாவையோ?' என அரற்றி அழுது புலம்பினாள் கண்ணகி.

கண்ணகியின் புலம்பலைக் கேட்ட ஐயை வாய் பதறி மனம் பதறித் தான் கேட்ட செய்தியை நடுங்கும் குரலில் தெரிவித்தாள். 'அரசனது கோயிலிலிருந்த அழகிய சிலம்பினை அரவம் சிறிதும் இன்றிக் கவர்ந்த கள்வன் என்று கூறி, ஊர்காவலர் கோவலனைக் கொலை செய்ததனைக் கருதினர்.' இதுவே அவள் நவின்ற செய்தி, கேட்டாள் கண்ணகி ; பொங்கி எழுந்தாள் ; செங்கண் சிவப்ப அழுதாள் ; 'ஆருயிர்த் தலைவரே, யாண்டுளீர்?' என்று கூவி வருந்தி ஏக்கமுற்று மயங்கினாள். அதனுடன் அமைந்தனளோ ! வினாடிக்கு வினாடி அவள் ஆத்திரம் பெருகியது. 'நாடாளும் மன்னவன் செய்த தவற்றால் கணவனை இழந்து மற்றைப் பெண்டிரைப் போல மனமிடிந்து துயருற்று மாழ்குவனோ?' என்று அரற்றினாள். இறுதியாகத் தீதெல்லாம் தீர்ந்து நன்மை பெருக மாதரி வீட்டில் ஆடிய குரவைக் கூத்தினுள் வந்து சேர்ந்த இடைக்குலப் பெண்டிர் அனைவரையும் நோக்கி 'எல்லீரும் கேளுங்கள் !' என்று கூறி, காய்கதிர்ச் செல்வனை நோக்கி, 'உலகத்துத் தோன்றும் பொருள்கள் யாவற்றையும் அறியும் ஆதவனே, நீயறிய என் கணவர் கள்வரோ? சொல்,' என்றாள். 'மாதே நின் கணவன் கள்வனல்லன் ; அவனைக் கள்வனென்ற இவ்வூரினைத் தீயுண்ணும்,' என்றது எங்கிருந்தோ ஒரு குரல்.

கதிரவனை நோக்கிக் கதறிய கண்ணகிக்குப் பதிலாகக் கிடைத்த அக்குரல் மேலும் அவள்பால் சினத்தீமூண்டெரியத் தூண்டுகோள் ஆயிற்று. ஒற்றைச் சிலம்பை கையிலேந்திப் புறப்பட்டாள் கண்ணகி. மதுரை வீதிகளில் அவள் புரட்சிக் குரல் முழங்கியது. 'முறைகெட்ட மன்னன் ஊரிலிருந்து வாழும் நிறையுடைப் பத்தினிப் பெண்டிர்களே, கேளுங்கள் என் சபதத்தை ; என் கணவர் கள்வரே அல்லர். என் காற்சிலம்பு கொள்ளும் விலைப்பொருட்டாட்ல அவரைக் கொன்றனர். ஈதோர் அநியாயம் ! யான்கூறும் இச்சொல் வாய்மையே என வையகம் அறிய, இறந்த என் கணவர் உயிரோடு எழவும், அவர் வாயால் தீதறு நல்லுரை கேட்கவும் பெறுவேன். அவ்வாறு என் காதற் கணவர் வாய்திறந்து கூறும் வார்த்தைகளைக் கேளாமல் போவேனாயின் 'இவள் நமக்கு வருத்தத்தக்கன செய்தாள் ! என்று என்னை இகழுங்கள் ! என்று சூளுரைத்தாள் கற்பரவி கண்ணகி, மதுரை வீதிகளில்.' கண்ணகி உரைத்த சபத மொழிகளைக் கேட்ட கூடல் மாநகர மக்களின் நெஞ்சில் தீப்பற்றி எரியத் தொடங்கியது.

'நீக்க ஒண்ணாத துன்பத்தினை இக்காரிகைக்குக் காட்டி வளையாத செங்கோல் வளைந்ததே ! மன்னவர் மன்னன் – மதியனைய குடை தாங்கிய வாள்வேந்தன் – தென்னவன் கொற்றம் குலைந்ததே ! உலக உயிர்கட்கு எல்லாம் குளிர்ச்சியையே ஊட்டும் மாறனது வெண்கொற்றக் குடை, கொதிக்கும் வெம்மையுடையதாயிற்றே ! இக்கொடுமைக்கு யாது காரணமோ ! தவறிழைத்த பாண்டியன் தலைநகரில் செம்பொற் சிலம்பு ஒன்றைக் கையிலேந்தி நம்மை உய்விக்கும் பொருட்டுப் – புதிய – பெரியதொரு தெய்வம் வந்துற்றதே ! இதனால் மேலும் விளைவது யாதோ? அழுது ஏங்கி அரற்றும் இவ்வம்மை தெய்வம் உற்றாள் போலன்றோ திகழ்கின்றாள்? யாது விளையுமோ இனி? என இவ்வாறு சொல்லி வருந்தி ஏங்கி மதுரை மக்கள் நெஞ்சில் கண்ணகி மூட்டிய புரட்சித் தீயால் அவர்கள் எத்தகைய நிலை அடைந்தார்கள் என்பதை இளங்கோ அடிகள் நயம்பட எடுத்துக்காட்டம் திறம் அம்மகாகவி மக்களின் மனவியல்பை (Mass psychology) எவ்வளவு நன்றாக உணர்ந்து அனுபவித்தவர் என்பதை நமக்குத் தெற்றென விளங்கச் செய்கிறது. பாண்டியன் புகழ் அன்றி வேறெவர் புகழையும் போற்ற விழையாத மதுரை நகர் மக்கள், மன்னனை மிகவும் பழி தூற்றும் மக்கள் ஆகிவிட்டார்களாம். இவ்வுண்மையை இளங்கோ அடிகளே,

'வன்பழி தூற்றுங் குடியதே மாமதுரைக்
கம்பலை மாக்கள்'
(ஊர் சூழ்வரி, 28–29)

என்ற மொழிகளால் விளங்க வைக்கின்றார். கண்ணகியின் ஆவேசக் கோலத்தாலும் ஆத்திர மொழிகளாலும் சீற்றமுற்ற மதுரை மூதூர் மக்கள் – அவ்வழிப்பட்ட அரசனை 'கொடியன் எம் இறை' எனக் கண்ணீர் பரப்பிப் பழிதூற்றத் துணிந்த மக்கள் – கண்ணகியைக் கொலையுண்டு கிடந்த கோவலனிடம் அழைத்துச் சென்று காட்டினார்கள். அந்தோ ! அந்நேரத்தில் தன் ஆருயிர் காதலன் வெட்டுண்டு வீழ்ந்துகிடக்கும் கோரக் காட்சியைக் கண்டு புழுவாய்த் துடிக்கப் போகிறாள் கண்ணகி என்பதை அறிந்த பகலவனும் பேரிருளை உலகிற்கு ஊட்டிக் கரிய மேற்குமலையின் கண் தன் சிவந்த கதிர்களைச் சுருக்கிக்கொண்டு வீழ்ந்து மறையலானான். அந்நிலையில் கோவலன் வீழ்ந்து கிடந்த இடத்திலிருந்து கண்ணகி அழுது அரற்றிய அரற்றலால் நகரெங்கும் ; 'ஒல்' லென்ற ஒலியே நிரம்பியது.

வெட்டுண்டு கிடந்த கோவலனை வாரி எடுத்து அணைத்துக்கொண்டாள் கண்ணகி. காலையில் தன் கணவன் முடியில் சூடியிருந்த மாலையை வாங்கித் தனது நீண்ட குழலினிடத்துச் சூடிக்கொண்ட கண்ணகி, இப்போது மாலை நேரத்தில் வெட்டுண்ட இடத்திலிருந்து கொப்பளித்து எழும் இரத்தம் உடலை எல்லாம் நனைக்கத் தன்னைக் கண் திறந்து காண ஒண்ணா நிலையில் தன் கணவன் இருக்கும் நிலை கண்டு, ஆறாத் துயருற்று, அலமந்தாள் ; பலவாறு புலம்பினாள்.

'என் மீளாத் துயர் கண்டும் யான் இடருறுவேனே என்று எண்ணுகின்றிலீரே ! ஆருயிர்த் தலைவரே, சந்தனத்தின் மணம் கமழும் உம் பொன்னான மேனி புழுதி படிந்து கிடப்பதோ !' என்று வருந்தி வாடினாள் கண்ணகி. ஆயினும், கண்ணகியின் துயரக் கண்ணீர் அவளுடைய உள்ளத்தில் கனன்று கொண்டிருந்த புரட்சிக்கனலை அவித்து விடவில்லை. அக்கனல் செந்தணலாய் எழுநாவிட்டுப் பற்றி எறியத் தொடங்கியது. 'என் கணவர் வாளுக்கு இரையானதும், எனக்கு நேர்ந்த துயரும் 'தலைவிதியின் விளைவு' என்று உலகில் எவரேனும் எண்ணி விடுவரோ ! மன்பதை பழிகூற முறைகெட்ட மன்னன் ஆட்சிக்கு உயிர்ப்பிச்சை கிடைத்துவிடுமோ ! என்று அவள் கொண்ட ஐயம் அழுகையாய் ஆத்திரமாய் உருக்கொண்டது. நேரடியாக, 'அவ்வாறு கருதுதல் கூடாது,' என்று அறிவுறுத்தித் தன் நெஞ்சக் கருத்தை வெளிப்படுத்துவதிலும் – வேறு வகையாக – வினாவும் முகத்தான் கூறுவதே ஆற்றலும் பயனும் நிறைந்ததாக அமையும் என்று கண்ணகியின் உள் மனம் கருதியது போலும் ! ஆம் ; அதனாலேதான் அவள் உள்ளத்தின் கருத்துப்போலாவே அவள் வாக்கும் அமைந்துள்ளது.

'பாசமிகு பழிதூற்றப் பாண்டியன் தவறிழைப்ப
ஈர்வதோர் வினைகாணா இதுவென வுரையாரோ?'
(ஊர் சூழ்வரி, 28–29)

என்று தன் துயரத்தைப் புலப்படுத்தினாள் கண்ணகி. ஆனால், அதனாலும் அவள் உள்ளம் ஆறுதல் கொள்ளவில்லை. அவள் உணர்ச்சியின் கொடுமுடியில் நின்று குமுறினாள்.

'தீ வேந்தன் வாழும் இத் தலைநகரில் கொண்ட கணவரின் மிக்க குறையைப் பொறுக்கின்ற கற்புடைய மகளிரும் உண்டோ ! கற்புடைய மகளிரும் உண்டோ ! பிறர் ஈன்றுவிட்ட குழந்தைகளைத் தங்கள் குழந்தைபோல எடுத்து வளர்க்கும் கருணை இதயம் படைத்த சான்றோர்கள் உண்டோ ! சான்றோர்கள் உண்டோ ! ஏன் – மன்னவனே தவறிழைத்த மாட மதுரையில் தெய்வந்தான் உண்டோ ! தெய்வந்தான் உண்டோ !' என்று இவ்வாறு உணர்ச்சியின் எல்லையில் நின்று அவள் கூறிய மொழிகள் இறந்த கோவலனையும் எழுப்பின ; மதுரை மாநகர் வாழ்ந்த மக்கள் அனைவரையும் கண்ணகியின் வீரப்புரட்சி, வெற்றிகாணத் துணைபுரியும் மனம் பெறச் செய்தது.

எல்லை கடந்த தன் மனத்துயரை – ஆவேச வெறியை – எண்டிசையும் கேட்டு நடுங்க முழங்கிய கண்ணகி, அவல உணர்ச்சியின் மேலீட்டால் விம்மி அழுது, தன் கணவனது 'பொன் துஞ்சு மார்பம் பொருந்தத் தழீஇக்' கொண்டாள். அந்நிலையில் மாண்ட கோவலன் நின்றான் எழுந்து ; 'மதி போன்ற முகம் கன்றியதே !' என்று தன் வாயாரக் கூறிக் கண்ணகியின் கண்ணீரைத் தன் கையால் துடைத்தான். கண்ணகி புலம்பி நிலத்தின்கண் விழுந்து தன் காதலனுடைய தொழத்தக்க திருந்திய அடிகளைத் தனது வளையணிந்த இரு கைகளாலும் பற்றிக் கொண்டாள். 'நீ இங்கிருக்க,' என்று சொல்லித் தேவர் கூட்டுத்துள்ளானாய் வானுலகு புகுந்தான் கோவலன்.

விந்தை மிக்க இக்காட்சியைக் கண்ணகியின் கண்களாலேயே உண்மை என்று நம்ப முடியவில்லை. 'இது என்ன மாயமோ ! என்னை மருட்டவந்த தெய்வத்தின் செயலோ ! வேறு யாரோ ! இனி யாண்டுச் சென்று என் கணவபரைத் தேடுவேன் ! நான் கேட்டதும் மெய்யரையோ ! சரி ! கணவரே ஆயினும், என் காய்சினம் தணிந்தால் அன்றி, அவரைக் கூடேன். தீய வேந்தனைக் கண்டு அவன் அநீதி புரிந்ததற்குக் காரணத்தைக் கேட்டே தீருவேன் !' என்று கூறிச் சீறி எழுந்தாள், இத்தனை நாளும் ஆறிய கற்புடையவளாய் இருந்த கற்பரசி கண்ணகி, சீறி எழுந்தவள், சற்றே நின்றாள் ; தான் கண்ட தீக்கனாவை நினைத்தாள் ; துயருற்றாள் ; கயல் போன்ற கண்களினின்றும் பொங்கி வரும் நீரைத் துரைத்துக்கொண்டே காற்றோடு கலந்த தீப்போல விரைந்து சென்றாள். வேந்தன் அரண்மனையின் வாயிலை நோக்கி புரட்சி விளைக்க.

பழந்தமிழ் மக்கள், 'நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே, மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்,' என்று நினைப்பவர்கள்தாம் ; ராஜபத்தியை உயிரினும் சிறந்ததாகப் போற்றுபவர்கள்தாம். அத்தகைய நாட்டுப்பற்று நிறைந்த பரம்பரையின் வீரச் செல்விதான் கண்ணகி. ஆயினும், அவள் மேற்கொண்ட துணிவும் குறிக்கோளும் பழந்தமிழ்ப் பண்பாட்டிற்கே புதியதொரு விளக்கம் தருவனவாயின், இன்னுயிரினும் இனிதாக நாடாளும் இறைவனைப் போற்றிய இனம் பழந்தமிழ் இனம். எனினும், அது அவன்பால் கொண்டிருந்த பத்தி கண்மூடிப்பத்தி அன்று. 'இங்கிலாந்தின் மன்னன் தவறே இழைக்கமாட்டான்,' என்ற, நவயுக நாகரிகத்தின் பிதாக்கள்' என்று சிலரால் கருதப்படும் வெள்ளையரின் குருட்டுக் கொள்கை, பழந்தமிழ் மக்களின் பகுத்தறிவிற்கும் பண்பாட்டிற்கும் ஒவ்வாததாகும். 'பெண்டிர்க்கு நாணம் உயிரினும் சிறந்ததுதான். ஆனால், அதனினும் சிறந்தது அவர்கட்குக் கற்பு,' என்பது ஆன்றோர் மொழியன்றோ? அவ்வாறே பழந்தமிழ் மக்கட்கு ராஜபத்தி உயிரினும் பெரியதுதான் ; ஆயின், அதனினும் அவர்கட்குப் பெரியது தேசபத்தி. 'மன்பதைக்காக மன்னனே அன்றி, மன்னனுக்காக மன்பதை அன்று,' என்னும் இவ்வுண்மையே பழந்தமிழர் அரசியல் பண்பாட்டின் ஆணிவேர் என்பதை உலகறியச் செய்த ஒப்பில்லா வாழ்க்கை கண்ணகியின் வீரவாழ்க்கை. 'குடிமக்கள் கொதிக்கும் உள்ளத்தால் சிந்தும் கண்ணீரே கூர்வாளினும் கொடியது. பெருஞ்சேனைகளாலும் அழிக்க முடியாத பேரரசுகள் கற்புடைப் பெண்ணின் கண்ணீரால் அழிந்து சாம்பலாகும்,' என்ற உண்மைகளைப் தமிழ்மங்கை வேந்தனை எதிர்த்து நடத்திய வீரப்புரட்சி வாயிலாக இளங்கோ அடிகள் விளங்கவைக்கும் திறம் இணையிலாப் பெருமை வாய்ந்தது. இவ்வுண்மை இனிவரும் சிலப்பதிகாரப் பகுதிகளாலும், உடலை – உள்ளத்தை – உயிரையே குலுக்கும் சொல்லோவியக் காட்சிகளாலும் இனிது விளங்கும் என்பது திண்ணம்.



சிலம்பு மலருக்கு விளம்பரங்களைத் தந்துதவிய
அனைவருக்கும் எங்கள் நன்றி !!!

இளங்கோவடிகள் இலக்கிய மன்றம்
கோவை – 37